விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 28 வெள்ளிக்கிழமை (11.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 083

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

# போர் வெற்றியை அறிவிக்கும் போது பிரபாகரன் உயிருடனேயே இருந்தார்



## போட்டுடைத்தார் பொன்சேகா



(கொழும்பு)

**போர் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்ட 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதியன்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருந்தார் என்ற இரகசியத்தை போரை முன்னின்று நடத்திய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் போட்டுடைத்தார்.**

**மேலும் பிரபாகரன் உயிரிழப்பதற்கு முன்னதாகவே போர் முடிவடைந்து விட்டதாக அப்போது ஜனாதிபதியாக பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷ அறிவித்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

நீதியமைச்சின் கட்டளைகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போது சரத் பொன்சேகா இந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், போர் முடிவுற்றதாக கூறப்படும் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதியன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் 23ஆம் பக்கம் பார்க்க

## கடற்படைக்கு காணி; மீனவர்கள் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கிழக்கு திருவடிநிலை கடற்கரைப் பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணிகளை கடற்படையினருக்கு வழங்குவதற்கு காணி உரிமையாளர்களின் சம்மதத்துடன் நேற்றுக் காலை 9.30 மணியளவில் அளவீடு செய்யப்பட்டது.

கடற்கரைப்பகுதியில் கடற்படை முகாம் அமைந்துள்ள சுமார் ஐந்து ஏக்கர் வரையான நிலப்பரப்பே காணி உரிமையாளர்களின் பிரசன்னத்துடன் அளவீடு செய்யப்பட்டது. 23ஆம் பக்கம் பார்க்க

## பிரபாகரன் கொல்லப்பட்டிருந்தால் எங்கே? எப்போது? எப்படி?

### அரசு வெளிப்படுத்த வேண்டும் என்கிறார்-சிவாஜி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டார் எனக்கூறும் அரசாங்கம், அவர் எப்போது கொல்லப்பட்டார் மற்றும் அவரது சடலத்துக்கு என்ன ஆனது என்பது தொடர்பில் எந்தத் தகவலையும் இதுவரையும் உறுதியாக வெளியிடவில்லை என வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடமாகாண சபையின் மாதாந்த அமர்வு, நேற்று வியாழக்கிழமை கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. தகவல் அறியும் சட்டமூலத்துக்கு வட மாகாண சபை ஒப்புதல் வழங்கும் விவாதம் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதனை நான் கேட்டால், அது தேசிய பாதுகாப்பு விடயம். சட்டமா அதிபர் திணைக்களத்தின் தகவல் என பதில் சொல்லவிடாது. அரசாங்கம் தன்னைத் தானே காப்பாற்றும் முயற்சிகளுக்கு நாங்கள் துணை 23ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சி

(மன்னார்)

உயிலங்குளத்தில் அமைந்துள்ள மன்னார் விவசாயப் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 16ஆம் திகதி புதன்கிழமை வரையான 3 நாட்கள் சந்தையை நோக்கிய சூழல் நேயமான விவசாயம் என்னும் தொனிப்பொருளிலான மாகாண விவசாயக் கண்காட்சி-2016, காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியின் தொடக்க 23ஆம் பக்கம் பார்க்க

## யோஷிதவுக்கு பிணை மறுப்பு; பஷில் வெளிநாடு செல்ல தடை

(கொழும்பு)

நிதிமோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட ஐந்து பேரையும், எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கடுவெல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யோஷித ராஜபக்ஷ, ரொகான் வெலிவிட்ட, நிசாந்த ரணதுங்க உள்ளிட்ட சந்தேகநபர்கள் ஐந்து பேரும் நேற்று கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டபோதே, அவர்களைத் தொடர்ந்தும் இரண்டு வாரங்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இவர்கள் ஐவரும், கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி தொடக்கம், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடுவெல நீதிமன்றத்துக்கு 23ஆம் பக்கம் பார்க்க

## உறுப்பினர்களின் முட்டிமோதலின்றி வடக்கு அமர்வு நேற்று சுமுகம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் பேரவை தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தலைமையில நடைபெற்றது. இதன்போது உறுப்பினர்கள் அனைவரும் மோதலின்றி சுமுகமாக நடந்து கொண்டனர்.

இதனால் எவ்வித குழப்பங்களோ முரண்பாடுகளோ நேற்றைய அமர்வில் இடம்பெறவில்லை.

இந்த அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் கொண்டுவரப்பட்ட கடற்றொழில் சட்டமூலம் தொடர்பான விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதில் சில குறைபாடுகள் இருப்பதாக உறுப்பினர்கள் சிலரால் எடுத்து கூறப்பட்டு, 23ஆம் பக்கம் பார்க்க

## பல்கலை மாணவர்கள் இன்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தமது விடுதலையை வலியுறுத்தி இன்று பதினெட்டாவது நாளாகவும் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களது விடுதலையை வலியுறுத்தியும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இன்றைய தினம் முழுநாள் உண்ணாவிரத போராட்டத்தில் 24ஆம் பக்கம் பார்க்க

## தகவலறியும் சட்டமூலத்துக்கு வட மாகாண சபை ஒப்புதல்

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசால் கொண்டுவரவுள்ள தகவலறியும் சட்ட மூலத்திற்கு வடக்கு மாகாண சபை திருத்தங்களுடன் ஒப்புதல் வழங்கியுள்ளது.

எனினும் மாகாண சபையின் திருத்தங்கள் மேற்படி சட்ட மூலத்திற்குள் உள்வாங்காத பட்சத்தில் வடக்கு மாகாண சபை தனது ஒப்புதலை வழங்காது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசால் கொண்டுவரவுள்ள தகவலறியும் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. 23ஆம் பக்கம் பார்க்க

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

நான்கு பிள்ளையின் தந்தை ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு புத்தூர் மேற்கு நவக்கிரி பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த கனகரத்தினம்சுதாகரன் (வயது 65) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். (செ-30)

## ஆட்கடத்தல், கொலைக் குற்றங்கள் தேசிய பாதுகாப்பிற்குள் மறைப்பு

### அரசு முயற்சிப்பதாக சர்வேஸ் சாடல்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆட்கடத்தல்கள், கொலைகளை தேசிய பாதுகாப்பு எனக் கூறி, அவை தொடர்பில் கேள்வி எழுப்புவதிலிருந்து புதிய அரசு தப்பிக்க முயல்வதாக குற்றம் சாட்டியுள்ள வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் கந்தையா சர்வேஸ்வரன், இவ்வாறான ஒரு தோற்றப்பாட்டினையே இந்த தகவலறியும் சட்ட மூலம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். வடமாகாண சபையின் 23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




## நீங்கள் வாகனத்தில் ஐஸ்கிறீம் விற்பனை செய்பவரா ?

உங்கள் முயற்சியை ஊக்கப்படுத்த எமது பங்களிப்பு

எம்மிடம் வாடிக்கையாளர்களின் நலனில் அக்கறையுடன் மிகவும் சுத்தமாகவும், நவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு Hyginic முறையில் பொதி செய்யப்பட்ட

- ஐஸ்பழம் - ரூபா 6/8/10/15 விலையிலும்
- ஐஸ் சொக் - ரூபா 17 மற்றும் 22 விலையிலும்
- 80 ml cup - ரூபா 17 மற்றும் 20, 22 விலையிலும்
- தண்டர் கோண்- ரூபா 40 மற்றும் 50 விலையிலும்
- ஐஸ்கிறீம் லீட்டர் - ரூபா 100 விலையிலும் கிடைக்கும்
- 250ml/ 500ml/ 1000ml/ 4000ml ஐஸ்கிறீம் கிடைக்கும்

( தரம் ஒன்றே நிரந்தரம் )

தொடர்பு கொள்ளவும்

**Sylo food & Bavereges pvt Ltd**
No. 76, Amman Kovil Street,
Kokuvil East
JAFFNA : 021 221 2003
HotLine : 077 7710 785

(3841)

---

13.03.2016 ஞாயிறு யா/ இராமநாதன் வீதி ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற உள்ள மணிவிழாவை ஒட்டிய

## மணிவிழா வாழ்த்து



கல்விக் கதிரவன்

**E.S.P. நாகரத்தினம்**

மணிவிழா நாயகன்
மனிதநேய ஈகையாளன்
மாண்புடன் வாழ
மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
யா/ கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை சமூகம்

(3832)

---

## தேவை

உள்ளூர் இன ஆடுகள், குட்டிகள், மாட்டுக்கன்றுகள், தோட்ட வேலைசெய்வதற்கு ஆள் ஆகியன முல்லைத்தீவு பகுதிக்கு தேவை.

தொடர்பு இல :
0771681697
0768825467

(சி-3947)

---

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

---

13.03.2016 ஞாயிறு யா/ இராமநாதன் வீதி ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற உள்ள மணிவிழாவை ஒட்டிய

## மணிவிழா வாழ்த்து



பேராயர் மாணிக்காச்சி
பெற்றெடுத்த ரத்தினமே
பெயர் சொல்ல ஒருவன் பிறந்தனன்
என உச்சிமோந்த தாயவள்
கருணையுள்ளம் கொண்டு
அனைத்து சிறுவர்களும்
கல்வி கற்று உய்ய அன்பு கரம் நீட்டி
அரவணைத்து ஈட்டிய பொருள்தனை
அருளதாக்கி பாரினில் கர்ணன் வழி
நின்று பல்லாண்டு பார் போற்ற வாழ
சிலாவில் பிள்ளையாரை யாசித்து
வாழ்த்துவோர்

சிலாவில் பிள்ளையார் கோவில் ஊரவர்கள்
ஒட்டுவெளி, மிருசுவில்.

(3843)

---

13.03.2016 ஞாயிறு யா/ இராமநாதன் வீதி ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற உள்ள மணிவிழாவை ஒட்டிய

## மணிவிழா வாழ்த்து

காரைநகர் பெற்றெடுத்த ஈழத் திருநாட்டின்
இரத்தினமே,
பொன்மனச் செம்மலே,
பல மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட
கல்விக் காருண்யனே,
பல நூறு குடும்பங்கள் வாழ வழி காட்டும்

**E.S.P. நாகரத்தினம்**

ஐயாவே,
உங்கள் சேவை தொடர
இறைவன் நீண்ட ஆயுளைத்தர
வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்



வாழ்த்துவோர் :
மா.ஜீவானந்தன் குடும்பம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(3844)

---

**ஷைலோ நிறுவனத்தின் ஐஸ்கிறீம் மற்றும் சைவ உணவகப் பிரிவிற்கு கீழ்க்காணும் வேலைக்கு ஆட்கள் தேவை**

- உணவு/ ஐஸ்கிறீம் பரிமாறுநர்கள்
- இட்லி, தோசை, வடை, இடியப்ப சமையலாட்கள்
- பில் கிளார்க்
- ஐஸ்கிறீம் வாகன விற்பனையாளர்கள் (வாகனத்தில் ஐஸ்கிறீம் விற்பனை)
- ஐஸ்கிறீம் வேலை தெரிந்தோர்
- எலக்றிக்கல்/மெக்கானிக்கல் வேலை செய்ய கூடியவர்கள்

அனுபவமுள்ள/ அனுபவமில்லாத வேலை பழக விரும்புபவர்களும், மாற்று திறனாளிகள்/ விசேட தேவையுடையோரும் தொடர்பு கொள்ளலாம். திறமைக்கு ஏற்ப தினசரி/ வாராந்த/ மாதாந்த சம்பளம் கிடைக்கும். உணவு தங்குமிடம் உண்டு.

தொடர்பு:
**Sylo food & Bavereges pvt Ltd.**
442, Hospital Road,
Jaffna
021 221 7885 / 077 771 0785

(3841)

---

## காணி விற்பனைக்கு

மட்டுவில் நுணாவில் எல்லை வீதியில் ராசா கடை எதிர் வீதி A9 றோட்டில் இருந்து 500 மீட்டர் தொலைவில் 70% கட்டி முடிக்கப்பட்ட வீடு, குழாய் கிணற்றுடன் கூடிய 3 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

விலை 22 இலட்சம்.

தொடர்பு :
குமார் - 0729229424

(3841)

---

## வேலையாள் தேவை

எமது அச்சகத்திற்கு அனுபவம் வாய்ந்த புத்தகம் கட்டுநர், பெண் பிள்ளைகள் தேவை. பழக ஆர்வமுள்ளவர்களும் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

மேனகா பிறிண்டேர்ஸ்
367, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(கதிரேசன் கோவில் அருகாமை)

(3837) தொ.பே : 021 222 9468

---

## யாழ்ப்பாணம் மாநகர சபை
# ஞாபகார்த்த தூபி அமைத்தல்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக மகாத்மா காந்திஜீயுடன் இணைந்து அகிம்சை முறையில் வெற்றி பெற உழைத்தவரும் உயிர் கொல்லாமை அனைத்து உயிர்களிடமும் உள்ள இறைதன்மையைப் போற்றி மதிக்க வேண்டும் என்ற புத்த பகவானின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக் கொண்டவரும் யாழ்ப்பாணத்திலும் அகிம்சை வழியில் செயற்பட்டவருமான யப்பானிய மதகுரு வணக்கத்துக்குரிய **ஜீ.யொகெற்சுவா** அவர்களின் 32-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவர்களின் நினைவு தூபி ஒன்றினை மாநகர சபை எல்லையில் உள்ள மத்தியுஸ் வீதியில் 41-ம் இலக்க பலசரக்குக் கடையின் முன் காணப்படும் மின் தூணிற்கு அருகில் அமைப்பதற்கு **நிப்பொன்சன் மொஹாஜி** நிறுவனத்தினர் கோரியுள்ளனர்.

இது தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை / அபிப்பிராயங்களை எதிர்வரும் 07.04.2016 ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

10.03.2016

**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(சி-3945)

---

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி. இலங்கை.

### செய்முறைப் பரீட்சை

**கலைமாணித் தேர்வு - பகுதி - II - 2012 (வெளிவாரி)**

**நாடகமும் அரங்கக் கலைகளும்** (EX.DTAG.3.2)

மேற்படி கலைமாணித் தேர்வின், நாடகமும் அரங்கக் கலைகளும் பாடத்திற்கான செய்முறைப் பரீட்சையை 16.03.2016 (புதன்கிழமை) மதியம் 1.00 மணி தொடக்கம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

செய்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டை மற்றும் நேர அட்டவணை என்பன ஏற்கெனவே பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

-பதிவாளர் (சி-3946) 10.03.2016

# 'போர் தவிர்ப்பு வலயம்' ஆவணப்படத்தை வெளியிட்டவர் நீதிமன்றத்தால் விடுதலை

(கொழும்பு)

**இலங்கை போர் தொடர்பான "போர் தவிர்ப்பு வலயம்" ஆவணப்படத்தை அனுமதியின்றி வெளியிட்டார் என்று குற்றம் சாட்டப்பட்ட மனித உரிமை ஆர்வலர் லீனா ஹென்றி மலேசிய நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.**

போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படத்தை தணிக்கைச் சபையின் அனுமதியின்றி வெளியிட்டார் என்று குற்றம் சாட்டி லீனா ஹென்றிக்கு எதிராக கடந்த 2013 ஆம்ஆண்டு மலேசிய பொலிஸ் துறையினர் திரைப்பட தணிக்கைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கின் குற்றச்சாட்டின் அடிப்படைத் தன்மைகளை வழக்குத் தொடுநர்கள் நிரூபிக்கத் தவறிவிட்டதாக, மலேசிய நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் லீனா ஹென்றி மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டையும் எதிர்கொள்ள நேர்ந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசிய நீதிமன்றத்தின் தீர்ப்பை லீனா ஹென்றியும், மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான பிரதிப் பணிப்பாளர் பில் ரொபேட்சனும் வரவேற்றுள்ளனர். (இ-5)

## இலங்கை சுங்கத்திணைக்களத்தின் பிரச்சினைகளை ஆராய விசேடகுழு

இலங்கை சுங்கத்திணைக்களமானது அது சார்ந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றிற்கான தீர்வு யோசனைகளை முன்வைப்பதற்காக விசேட பரிந்துரைக் குழுவொன்றினை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி இலங்கை சுங்கத் திணைக்கள தொழிற்சங்க பிரதிநிதிகளை நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுங்கத் திணைக்களத்தில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் விரிவாக எடுத்துரைத்த தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் இது தொடர்பான அறிக்கையொன்றினை தன்னிடம் விரைவில் சமர்ப்பிக்குமாறு அவர் மேலும் அறிவுறுத்தினார்.

அத்தோடு அப்பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வுகளை தொடர்புடைய உரிய அதிகாரிகளுடன் ஆலோசித்ததன் பின்னர் வழங்குவதாக ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தில் உறுதியளித்தார்.

இலாபமீட்டும் அரச நிறுவனமாக காணப்படும் சுங்கத் திணைக்களம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வுகளை வழங்கும் அதேவேளை அதன் திறன்களை இலாபமீட்டும் அரச நிறுவனமாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக இருப்பதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சூலானந்த பெரேரா, அகில இலங்கை சுங்கச் சேவைகள் தொழிற்சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜே.ஏ.குணதிலக ஆகியோர் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (இ-5)

## ராஜீவ் கொலையாளிகளை அரசு விடுவிக்க வேண்டும்

### தி.மு.க.கோரிக்கை

"ராஜீவ் கொலையாளிகள், ஏழு பேரை விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அரசு எழுதிய கடிதத்துக்கு உடனடியாக பதிலளிக்க வேண்டும்" என மத்திய அரசுக்கு, தி.மு.க. கோரிக்கை விடுத்துள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதிகளாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள நளினி, சாந்தன், முருகன், பேரறிவாளன், ராபர்ட் பயஸ், ஜெயகுமார், ரவிசந்திரன் ஆகிய ஏழு பேரை விடுதலை செய்வது குறித்து கருத்து தெரிவிக்கும்படி, தமிழக அரசு மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

ராஜ்யசபாவில் நேற்று முன்தினம் இந்த விவகாரத்தை எழுப்பிய தி.மு.க., - எம்.பி., திருச்சி சிவா, "ராஜீவ் கொலையாளிகள், 24 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்ய வேண்டும். இது சம்பந்தமாக தமிழக அரசு, உள்துறை செயலருக்கு கடிதம் அனுப்பியுள்ளது. அதற்கு மத்திய அரசு உடனடியாக பதில் அளிக்க வேண்டும்" என்றார். (இ-5)

## பொலிஸாரின் பதிவு நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு நகரில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பதிவு நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, மட்டக்களப்பு காந்திசேவா சங்கம் அவசரக் கடிதமொன்றை நேற்று அனுப்பியுள்ளது.

இந்தப் பதிவு நடவடிக்கை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளதாக மேற்படி சங்கத்தின் தலைவர் ஏ.செல்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அவசரகாலச் சட்டம் 23 இன் கீழும் பொலிஸ் சட்டம் 76இன் கீழும் குடியிருப்பாளர்களை பதிவு செய்ய வேண்டுமெனத் தெரிவித்து அதற்கான விண்ணப்பப்படிவங்களை மட்டக்களப்பு நகரில் பொலிஸார் விநியோகித்து வருகின்றனர்.

இந்த விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு எந்தவொரு காரணமும் தற்போது இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது யுத்தம் இடம்பெறாத நிலையில், அசாதாரண சூழ்நிலை இல்லாத நிலையில் மட்டக்களப்பு நகரில் பதிவை பொலிஸார் மேற்கொள்ளும் போது, மக்கள் அச்சமடைந்துள்ளனர். இந்தப் பதிவு நடவடிக்கை தேவையானதா? என்பதை அறிய வேண்டியுள்ளது.

மக்களை அச்சமடையச் செய்யும் இவ்வாறான செயற்பாடுகளினூடாக நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான மற்றும் நல்லிணக்கச் சூழ்நிலையானது, அபாயகரமான சூழ்நிலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

மக்கள் அச்சமடைந்துள்ள இந்தப் பதிவு விடயத்தில் ஜனாதிபதி உடனடியாகத் தலையிட்டு பதிவு நடவடிக்கையை நிறுத்தி மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டுமென்று மட்டக்களப்பு காந்திசேவா சங்கம் கேட்டுக் கொள்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவாக விரைவில் அஞ்சல் தலை வெளியீடு

### கூட்டுறவு அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான அமரர் வி.வீரசிங்கத்தின் நினைவாக மே மாதத்தில் அஞ்சல் தலை வெளியிடப்பட இருப்பதாகக் கூட்டுறவுத் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு அமைச்சர் பொ. ஐங்கரநேசனுக்கும் பனை தென்னைவளக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டுறவு அமைச்சால் கடந்த ஆண்டில் 100 நாள் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. கூட்டுறவாளர்கள் பலரும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அமரர் வீரசிங்கம் நினைவாக அஞ்சல் தலை வெளியிடுதலும் 100 நாள் வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இது ஜனாதிபதியினதும் அஞ்சல்துறை அமைச்சரினதும் கவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து. இப்போது அஞ்சல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நினைவு முத்திரையை வெளியிடுவதற்குச் சம்மதம் தெரிவித்து எமக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். மே மாதத்தில் இதனை வெளியிட்டு வைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

அமரர் வி.வீரசிங்கம் 1940 ஆம் ஆண்டில் இருந்து கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்காகப் பணியாற்றிய ஒருவர். பேராசிரியர் அமரர் கைலாசபதியால் 'நடமாடும் கூட்டுறவுப் பல்கலைக்கழகம்' என வர்ணிக்கப்பட்ட வீரசிங்கம்,மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். அவரது நினைவாகவே யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் ஒன்றாக வீரசிங்கம் மண்டபம் திகழ்வதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாதாள உலகக்குழுவை ஒடுக்க தகவல் திரட்டும் புலனாய்வுப் பிரிவு

பாதாள உலக கும்பலை கைது செய்ய புலனாய்வு பிரிவினர் தகவல் திரட்டி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தலைமையில் நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்று இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் பாதாள உலக கும்பலை கைது செய்யுமாறு அனைத்து பொலிஸ் வலயங்களிலும் நிறுவப்பட்டுள்ள பொலிஸ் அலகுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.பாதாள உலக குழு உறுப்பினர்கள் கைது செய்யப்படுவதோடு சட்டவிரோத ஆயுதங்களும்மீட்கப்படும்என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர மேலும் தெரிவித்தார். (இ-5)

## கட்சிகளின் தலைவர்களுக்கு எட்கா உடன்படிக்கை வரைபு

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்து கொள்ளப்படவுள்ள எட்கா என்ற பொருளாதார உடன்படிக்கையின் வரைபு நேற்று முன்தினம் கட்சித்தலைவர்களுக்கு வழங்கப்பட்டது.

சர்வதேச வர்த்தகத் துறை அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இதனை தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் ஜே.வி. பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மலிக் சமரவிக்கிரம இதனைத் தெரிவித்தார்.

இந்த வரைபின் ஒரு நகல் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்திய அரசாங்கத்தின் பதில் 3 வாரங்களுக்குள் எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் இணக்கம் ஏற்பட்டவுடன் வரைபை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)




## புனர்வாழ்வின் பின் விடுதலைக்கு சம்மதம்

# ஜனாதிபதி செயலகத்துக்கு அரசியல் கைதிகள் கடிதம்

(கொழும்பு)

மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகளிடம் புனர்வாழ்வின் பின்னரான விடுதலைக்கு சம்மதம் தெரிவித்து நேற்றையதினம் ஜனாதிபதி செயலகத்திற்கு கடிதம் ஒன்றினை கையளித்துள்ளனர்.

உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படுவதற்கு சம்மதமா என சட்டமா அதிபர் திணைக்களத்தால் கேட்டுக் கொண்டதற்கிணங்க நேற்று முன்தினம் கைதிகளிடம் இருந்து கடிதம் பெறப்பட்டிருந்த நிலையில் நேற்றையதினம் ஜனாதிபதி செயலகத்திலிருந்தும் கடிதம் கோரப்படுவதாக கேட்டதற்கிணங்க நேற்றையதினம் அவர்கள் குறித்த கடிதத்தினை கையளித்துள்ளனர்.

இதேவேளை உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகளின் வழக்கு விசாரணை இன்றைய தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# பாம்புக்கடி

(யாழ்ப்பாணம்)

வயலில் கிழங்கு இழுக்கும் போது பாம்புக் கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் யாழ்.புன்னாலைக்கட்டுவன் தெற்கில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த அருளன் மதியழகன் (வயது-45) என்ற 3 பிள்ளையின் தந்தையே பாம்புக் கடிக்கு இலக்கானவராவார். (செ-30)


காரைநகர்
கிழவன்காடு கலாமன்றத்தின்
வாழ்த்துக்கள்



எமது கலா மன்றம் தனது சேவையில் 14-வது ஆண்டடை பூர்த்தி செய்து 15-வது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள வேளையில் எமது மன்றத்துக்கு ஆதரவு வழங்கிவரும் திரு.திருமதி E.S.P.நாகரத்தினம் தம்பதியினரது மகத்தான சேவையினை பாராட்டி கௌரவிப்பதோடு, அவர்களது சமூக சேவைகள் மேன்மேலும் சிறந்து விளங்கி சிறப்பாக வாழ எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக் கூத்தன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

கிழவன்காடு கலாமன்றம்,
காரைநகர்.

நிர்வாக சபையினர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள்.

(3843)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603

மணி விழா வாழ்த்து

" பொன்மனச் செம்மல் "
" கல்விக் காருண்யன் "
உயர்திரு.
E.S.P. நாகரத்தினம்
அவர்களின்
மணிவிழா சிறக்க வாழ்த்துகிறோம்



குளிர்ந்த பூமியாக உலாவரும்
கொடை வள்ளலே பாரிக்கும்
பேகனுக்கும் இணையாக இருந்து
எம் சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்கு
நீவீர் செய்யும் வள்ளன்மையைப்
போற்றுகிறோம். சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்க.

(3847)

வாழ்த்துவோர் : அதிபர், ஆசிரியர்கள்
யா/ ஆனைப்பந்தி மெ.மி வித்தியாலயம்

WESTERN UNION MONEY TRANSFER

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

13.03.2016 ஞாயிற்றுக்கிழமை யாழ்.இராமநாதன் வீதி, ராஜா கிறீம் ஹவுஸ்,
சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ள மணிவிழாவையொட்டி

மணிவிழா வாழ்த்து



லயன்
E.S.P.நாகரத்தினம்
அவர்கள்
மணிவிழாக் காணும்
இந்நன்னாளில் சீரும்
சிறப்புடன் நீடூழி காலம்
வாழ வாழ்த்துகின்றோம்

வெங்கடேஸ்வரா,
இல.66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3948)

# தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்- இல.01

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

பகுதி-II விடைகள்

| | |
|---|---|
| (01).1).ஆசை அம்மா,கொஞ்சிப் பேசி | (23) 1*l* 800 *ml* |
| 2).பஞ்சு போன்ற உடலை | (24).1). 5 |
| 3).கூடி ஆடி | 2).6 |
| 4).துள்ளி துள்ளி | (25).2 |
| 5).ஓடி | (26)9 999 |
| 6).நான் | (27).ரூ 76 |
| 7).அம்மா | (28).ஏழாயிரத்து அறுநூற்று இருபத்து |
| (02).அம்மா! நான் குளிக்கவா? என்று | எட்டு |
| தம்பி கேட்டான். | (29).புதன் |
| (03).நான் பாடசாலை முடிவடைந்த பின் | (30).வியாழன் |
| விளையாடுவதற்கு மைதானத்திற்குச் | (31).124 |
| சென்றேன். | (32).பி.ப 4.15 |
| (04).I. வங்கி II.அரும்பொருட்காட்சி | (33).2359 |
| யகம்/தொல்பொருள் காட்சியகம் | (34).ரம்பை (2) |
| (05).நாங்கள் வீட்டிற்கு போவோம் | (35).கல்சியம் (4) |
| நான் பாட வேண்டும். | (36).நோய் குணமடையும் வரை நோயா |
| (06).I will bring the flowers | ளியை வைத்தியசாலையில் இருக்கச் |
| (07).I am watering the plants | செய்தல் (1) |
| (08).உங்களுடைய பெயர் என்ன? | (37).காகம் (1) |
| (09).விளையாடப் போவோமா? | (38).5 (2) |
| (10).1).லூயி பாஸ்டர் | (39).உயிர்ச்சத்து A (1) |
| 2).பழமொழியும் | (40)சிலந்தி (4) |
| 3).தெனாலிராமன் | (41).நத்தை (3) |
| (11). வழிகாட்டுவார் நம் தாத்தா | (42).கண்டி (1) |
| (12).1).வானம் | (43).119 (3) |
| 2).தினைத்துணை நன்றி செயினும் | (44).பூனை (1) |
| பனைத்துணையாக் கொள்வர் பயன் | (45).மானில் இருந்து (4) |
| தெரிவார் | (46).கொத்தமல்லி (2) |
| (13).1).வெளிச்சம்-இருள் | (47).வெளவால் (4) |
| 2).தொடக்கம்-முடிவு | (48).ஈரப்பலா (2) |
| 3).எதிரி-நண்பன் | (49).குளத்தில் உள்ள மேலதிக நீரை வெளி |
| (14).இருந்தது | யேற்ற (1) |
| (15).போற்றுகின்றது | (50).மேல்மாகாணத்தில் (3) |
| (16).செய்தார்கள் | (51).எலி (4) |
| (17). ◆ நான் கூண்டுக்குள் அடைபட்டிருக் | (52).மெல்லிய தடித்துண்டுகளில் (4) |
| கும் போது மிகவும் கவலையாக இருக் | (53).அந்து (4) |
| கின்றேன். | (54).வண்ணத்துப்பூச்சி (2) |
| ◆எனது நண்பர்களை விட்டு தனியாக இருப்ப | (55).ஏப்ரல் (2) |
| தால் சுதந்திரமில்லாமல் இருக்கின்றது. | (56).சங்கு (4) |
| ◆ என் இறக்கைகளை விரித்து வானில் | (57).புற்களுக்குத் தேவையான ஒளி |
| பறக்க நான் ஆசையாக உள்ளேன் | கிடைக்காமை (3) |
| (18).14cm | (58).நீலம்,சிவப்பு,மஞ்சள் (1) |
| (19).61 நாட்கள் | (59).வேம்பு (2) |
| (20).102 பேருக்கு | (60).பின்னவல (4) |
| (21).0.5 | (61).2 |
| (22)65000g/65kg | (62).சிகிரியா (1) |

# மார்ச் 13ஆம் திகதி தேசிய துக்க தினம்

(கொழும்பு)

அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் வணக்கத்துக்குரிய கலகம ஸ்ரீ அத்த தஸ்ஸி தேரரின் இறுதிக் கிரியைகள் நாளை மறு தினம் 13 ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

இதனையடுத்து அன்றைய தினத்தை உள்விவகார அமைச்சு தேசிய துக்க தினமாக அறிவித்துள்ளது.

கீழே விழுந்த நிலையில் சுயநினைவை இழந்த கலகம ஸ்ரீ அத்ததஸ்ஸி தேரர், நேற்று முன்தினம் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர், மாலை அவர் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரது இறுதிக் கிரியைகளை நாளை மறுதினம் 13 ஆம் திகதி பிற்பகல 02.30 மணிக்கு கண்டியிலுள்ள பொலிஸ் விளையாட்டரங்களில் நடத்த தீர்மானிக்கப் பட்டுள்ளது. (இ-5)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

பண்ணாகம் விசவத்தனை முருக மூர்த்தி கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகிதொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-5-60)


## 20 ஆவது ஆண்டு நினைவலைகள்



அமரர் கனகசபை துரைசிங்கம்
பிறப்பு: 02.10.1919
இறப்பு:26.02.1996

அமரர் துரைசிங்கம் மகேஸ்வரி
பிறப்பு: 25.07.1925
இறப்பு:07.06.1995

திதி:11.03.2016

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து அன்புடன் எம்மையெல்லாம் வளர்த்து நல்வழி காட்டிய தெய்வங்களே நீங்கள் விண்ணுலகம் சென்று 20 வருடங்கள் ஆகியும் தங்களை தினம் நினைத்து வாழ்கின்றோம்.

(3840)

சேச் லேன்
தாவடி,
கொக்குவில்.

என்றும்
உங்கள் நினைவுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



## 45 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 29.01.2016 வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு
அமரர் மரியதாஸ் மதிஜீவன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 11.03.2016 வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலைப் புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 13.03.2016 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு அவரது இல்லத்திலும் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

(3830)

இங்ஙனம்
குடும்பத்தினர்.


# இராசி பலன்

11.03.2016
(மாசி 28, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
திருதியை பின்னிரவு 1.31 மணிவரை
ரேவதி முன்னிரவு 7.27 மணிவரை
சுபநேரம் 6.22-7.52 மணிவரை
இராகுகாலம் 10.52-12.22மணிவரை

வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| சூரி, புத சுக், கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரம், உத்தரம் இரவு 4.00மணிக்கு, மே-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நன்மையுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்,தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

**கடகம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்,உடல் நலன் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,புத்திசாதுரியமாக நடந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**சிம்மம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் தவிர்க்க இயலாமல் போகலாம்,வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி:** பெண்களின் சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள்.

**துலாம்:** மறைமுக எதிர்ப்புகள் மாறும், பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்,வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்,மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**மகரம்:** சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், விரதங்களில் நம்பிக்கை கூடும், ஆரோக்கியமான நாள், கௌரவமான நாள்.

**கும்பம்:** புதிய பொருட் சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்,பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மீனம்:** வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,போசன சுகமுண்டு, சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

### யாழ்.இந்துக்கல்லூரியில் இன்று

# சிறுவர்,பெண்கள் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வீணாகான குருபீடத்தின் ஏற்பாட்டில் சிறுவர்,பெண்கள் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக வீணாகான குருபீடம் விடுத்துள்ள அறிக்கையில், கடந்த கால யுத்தத்தின் பின்னர் எமது பிரதேசத்தில் சிறுவர், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இது தமிழினத்தின் ஒழுக்கத்தில் பெரும் தலைக்குனிவை ஏற்படுத்தியுள்ளதுடன் அனைவரையும் வேதனையடையவும் செய்துள்ளது.

இவ்விடயம் சார்பாக பலரும் பலவகைகளில் விழிப்புணர்வு ஏற்பாடுகளை செய்து வந்தால் கூட அவை காலத்தின் தேவைக்கு பற்றாக்குறையாகவே உள்ளது.

இவ்விடயம் சார்பாக பல தடவைகள் நாமும் நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும் அவையும் திருப்திகரமாக அமையவில்லை.




எனவே தான் நாம் இக்கலந்துரையாடலை ஏற்படுத்த முன்வந்துள்ளோம். எமது பிரதேசத்தில் இருக்கக்கூடிய அரச உயர் அதிகாரிகள், தனியார் நிறுவன அதிகாரிகள் மற்றும் பொறுப்புவாய்ந்த சமய சமூகத் தலைவர்கள் என அதிகாரமும் தலைமைத்துவமும் உடைய அனைவரையும் ஒரு முகமாக சந்தித்து கலந்துரையாடலை மேற்கொள்ள முனைந்துள்ளோம்.

இதன் மூலம் எமது பிரதேசத்தில் மிக தீவிரமாக சிறுவர், பெண்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்த உள்ளோம். இக்கலந்துரையாடலுக்கு ஒவ்வொரு தலைமைத்துவ பெரியவர்களது வருகையும் மேலான ஆலோசனையும் ஒத்துழைப்புக்களும் அவசியமாக எதிர்பார்க்கின்றோம்.

ஒவ்வொரு பெரியவர்களும் ஆற்றுகின்ற பணிகளது உயர்வும் பணிகளது நெருக்கடிகளையும் நாம் நன்கு அறிவோம். இருந்த போதும் இது அவசரகால பணியாக எண்ணி தயவு செய்து தட்டிக்கழிக்காது ஒத்துழைப்புத் தருமாறு அன்புடன் இறைவன் பணியாக எண்ணி அழைக்கின்றோம்.

ஒவ்வொரு பெரியவர்களது வருகையும் ஆலோசனைகளும் ஒவ்வொரு சிறுவர்களதும் பெண் களதும் மானத்தினையும் உயிரையும் காப்பதற்கு அணை சேர்ப்பதாக அமைவுறும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### பாலியல் குற்றங்கள் தொடர்பான

# மரபணு பரிசோதனை அறிக்கைகளை ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்

## பெண்கள் அமைப்பு மகஜர் கையளிப்பு

பாலியல் குற்றங்கள் தொடர்பான மரபணு பரிசோதனை அறிக்கைகளை ஒரு மாத காலத்திற்குள் நீதிமன்றில் சமர்ப்பிக்கும் வகையில் சட்டம் அமுல்படுத்தப்படல் வேண்டும் என்ற கோரிக்கையுடன் வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் ஆகியோரிடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் பெண்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க மத்திய அரசினை வலியுறுத்துமாறு கோரி நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பினரால் மேற்படி மூன்று அலுவலகங்கள் முன்பாக கவனயீர்ப்பு ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த கவனயீர்ப்பின் முடிவில் கையளித்த மகஜரிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த மாசி மாதம் பதினாறாம் திகதி வவுனியா மாவட்டத்தை சேர்ந்த கங்காதரன் ஹரிஷ்ணவி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டது யாரும் அறிந்ததே. இவ்வாறு நாடளாவிய ரீதியில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் அனைத்து வன்முறைகளையும் கண்டிக்கின்றோம்.

இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றது முதல்தடவையல்ல. கடந்த மேமாதம் புங்குடுதீவு மாணவி வித்தியா கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டிருந்தார். ஹம்பகாவை சேர்ந்த சேயா செப்டெம்பர் மாதம் பாலியல் வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டிருந்தார்.

இதேபோல மாங்குளத்தை சேர்ந்த மாணவி சாரணியா கூட்டு பாலியல் வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டிருந்தார். கடந்த வருடம் காரைநகரிலும் இரு சிறுமிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இவ்வாறான கொடுமைகள் நடந்த பின்னர் பெண்கள் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதும் கண்டனங்கள் தெரிவிப்பதும் தொடர்கதையாக உள்ளன.

அதிகாரிகள், அரசியல் வாதிகள் ஆறுதல்கூறுகின்றார்கள். ஆனால நடவடிக்கைகள் இல்லை. அடுத்த சம்பவம் நடைபெறும் வரை இந்த கண்டனங்கள், ஆர்ப்பாட்டங்கள் எல்லா இடத்திலும் ஓய்ந்து விடும். உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மகஜர்கள் குப்பை தொட்டிகளை அலங்கரிக்கின்றனவா? என்ற சந்தேகமே எமக்கு இருக்கின்றது.

பெண்கள்,சிறுமிகள் பொது வெளியில் பாதுகாப்பான முறையில் நடமாட முடியாத நிலையே இங்கு உள்ளது. இதனையே இந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த குற்றங்களுக்கு கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்காது இருப்பது நல்லாட்சி அரசிற்கு அவப்பெயர் ஆகும். இந்த கொடுமைகள் அனைத்து இன மக்களுக்கும் நடைபெறுவதனால் அனைவரும் இதற்கு எதிராக போராட வேண்டிய நிலை உள்ளது.

பாலியல் குற்றங்களை விசாரிப்பதற்கு விசேட நீதிமன்றம் வேண்டும், பாலியல் குற்றங்கள் இழைத்தவர்களுக்கு பிணை வளங்கள் முற்றாக நிறுத்தல் வேண்டும், பாலியல் குற்றங்கள் சார் மரபணு பரிசோதனைகள் ஒரு மாதத்திற்குள் நீதிமன்றில் சமர்ப்பிக்கும் வகையில் சட்டம் இயற்றப்படல் வேண்டும், பாலியல் வன்கொடுமைகளுக்கு கடுமையான சட்டங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

ஏற்கனவே இருக்கும் பெண்கள் சிறுவர் தொடர்பான சட்டங்கள் மீள் பரிசோதனை செய்யப்படல் வேண்டும், நிலுவையில் உள்ள வழக்குகள் உடன் விசாரணை செய்யப்படல் வேண்டும், அனைத்து இடங்களிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டம் ஆகியனவே எனது கோரிக்கைகள் என அந்த மகஜரில மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-4)

# "நாத நர்த்தன வர்ணம்-2016" நடன ஆற்றுகை நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

மரபுக் கலைகள், கலாசார விழுமியங்களை தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்கும் நோக்குடனும் இக் கலைகளில் மாணவர்களின் ஆற்றுகை திறன்களை மேம்படுத்தும் வகையிலும் தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் நடத்தப்படும் "நாத நர்த்தன வர்ணம் - 2016" எனும் கருப்பொருளிலான நடன ஆற்றுகை நிகழ்வு நாளை 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் சாவகச்சேரி நகராட்சிமன்ற பொன்விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நடன நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் க.கந்தசாமி, கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக நடன பாட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆனந்தஜோதி தர்சனன் மற்றும் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அழகியல் பிரிவின் ஆசிரிய வளவாளர் திருமதி ம.விக்னராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நடன நிகழ்வில் தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம், தீப தரங்கினி, செம்பு நடனம், கிறிஸ்தவ மேலைத்தேய நடன ஆடல், கண்ணன் கீர்த்தனம், மீனவர் நடனம், பங்குறா நடனம், பந்து நடனம், பாரதியார் ஆடல், வர்ணம், குறவன் குறத்தி நடனம், தாள நடனம், பின்னல் கோலாட்டம், காவடிச் சிந்து, மயில் நடனம், கதக் நடனம், மங்கல ஆடல் என பதினேழு நடன ஆற்றுகைகள் இடம்பெறவுள்ளதாகவும் இந் நிகழ்வினை மாணவர்களும் பொதுமக்களும் கண்டுகளிக்க முடியும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (இ-5)

# 4 இந்திய மீனவர்களுக்கும் 24 ஆம் திகதி வரை மறியல்

**இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழகம் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 4 இந்திய மீனவர்களையும் எதிர் வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ. எம்.எம்.றியால் நேற்றையதினம் உத்தரவிட்டுள்ளார்.**

காரைநகர் வடக்கு கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு ஒரு படகில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 4 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் நேற்றைய தினம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-9-60)







# அரசாங்க அறிவித்தல்

## பகிரங்க ஏலவிற்பனை-2016 மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், தகவல் தொழில்நுட்ப பூங்கா மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், குளிரூட்டிகள், கணனிகள், பிரிண்டர்கள், தட்டச்சுப்பொறிகள், ரயர்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள், மின்சார உபகரணங்கள் போன்ற பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏலவிற்பனை நடைபெறும் நாளுக்கு முதல்நாள் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 1.00 மணிவரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏலவிற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் மாலை 4.00 மணிக்குப் பிந்தாமல் பொருட்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச செயலகம் -உடுவில் | 21.03.2016 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ.உடுவில் |
| 02 | பிரதேச செயலகம் -கோப்பாய் | 21.03.2016 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ.கோப்பாய் |
| 03 | பிரதேச செயலகம் -பருத்தித்துறை | 21.03.2016 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ.பருத்தித்துறை |
| 04 | பிரதேச செயலகம் -நல்லூர் | 21.03.2016 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ.நல்லூர் |
| 05 | பிரதேச செயலகம்- மருதங்கேணி | 23.03.2016 புதன்கிழமை | மு.ப 10.30 | பி.செ.மருதங்கேணி |
| 06 | பிரதேச செயலகம் -காரைநகர் | 23.03.2016 புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ.காரைநகர் |
| 07 | பிரதேச செயலகம் -சங்கானை | 23.03.2016 புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ.சங்கானை |
| 08 | பிரதேச செயலகம் -வேலணை | 24.03.2016 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ. வேலணை |
| 09 | பிரதேச செயலகம் -ஊர்காவற்றுறை | 24.03.2016 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ. ஊர்காவற்றுறை |
| 10 | பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய் | 24.03.2016 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ. சண்டிலிப்பாய் |
| 11 | பிரதேச செயலகம் -கரவெட்டி | 24.03.2016 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ. கரவெட்டி |
| 12 | பிரதேச செயலகம் -யாழ்ப்பாணம் | 24.03.2016 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ. யாழ்ப்பாணம் |
| 13 | மாவட்டச் செயலகம் -யாழ்ப்பாணம் | 29.03.2016 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | நாவற்குழி களஞ்சியசாலை |
| 14 | பிரதேச செயலகம் -நெடுந்தீவு | 30.03.2016 புதன்கிழமை | மு.ப. 10.00 | பி.செ. நெடுந்தீவு |
| 15 | தகவல் தொழில்நுட்பபூங்கா-யாழ்ப்பாணம் | 30.03.2016 புதன்கிழமை | மு.ப. 10.00 | தகவல் தொழில்நுட்ப பூங்கா,யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க கட்டடம் |

(சி-3943)

**நா.வேதநாயகன், அரசாங்க அதிபர்,**
**யாழ்.மாவட்டம்**

## அமெரிக்காவின் நிதியுதவி குறித்து விசேட கலந்துரையாடல்


அமெரிக்க நிறுவனம் ஒன்றால் இலங்கைக்கு 100 மில்லியன் டொலர் நிதி வழங்குவது தொடர்பிலான விசேஷட கலந்துரையாடல்ஒன்று நேற்று முன்தினம் காலைநிதி அமைச்சில் இடம்பெற்றது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தலைமையில் இந்தச் சந்தி ப்புஇடம்பெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதில் குறித்த அமெரிக்க நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப் பாளர் உள்ளிட்ட குழுவினரும் கலந்து கொண்டனர். (இ-12)

## பிரபாகரனை வென்றவர்களால் தமிழர்களை வெல்ல முடியவில்லை
### ஞானசார தேரர் ஆதங்கம்

(கொழும்பு)



நாட்டின் இராணுவத்தினரால் பிரபாகரனின் ஆயுதங்கள் மௌனிக் கப்பட்ட போதிலும், தமிழர் தரப்பை வெற்றிக் கொள்ள முடியாதுள்ளதாக பொதுபல சேனா அமைப்பு தெரிவித் துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பொது பல சேனா அமைப்பின் செய லாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணத்திலுள்ள பெரும்பான்மை சமூகத்தின் காணி களை, சிறுபான்மை மக்கள் சுவீகரித்து வருவதாக அவர் இதன்போது குற்றஞ்சாட்டினார். இந்த காணி சுவீகரிப் பின் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடு காணப்படுவதாக கலகொட அத்தே ஞானசார தேரர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வெளிவிவ கார அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாடுகளுக்கு சென்று புலம்பெயர் அமைப் புக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி நாட்டை காட் டிக் கொடுப்பதாகவும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.இவ்வாறான நடவடிக் கைகளில் ஈடுபடும் மங்கள சமரவீரவின் வெளிவிவகார அமைச்சு பறிக்கப்பட வேண் டியது அவசியம் எனவும், இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும் எனவும் இதன் போது அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-12)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### அழைப்பின் பேரில் வான் (Hiace) ஒன்றினை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காக தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு **(On call basis)** ஆங்கில இலக்கப் பதிவுடைய குளிரூட்டல் வசதியுடன் கூடிய வான் ஒன்றை கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

### வான் (Hiace) குளிரூட்டல் வசதியுடன்

மேற்குறிப்பிட்ட வான் சேவையை அவ்வாகனத்திற்கான சாரதி எரிபொருள், காப்புறுதி மற்றும் திருத்தவேலைகள் போன்றவற்றுடன் வழங்க வேண்டும். மேலும் வாகனத்தின் முதற்பதிவு ஆனது 2011 ஆம் ஆண்டுக்கு பிற்பட்டதாகவும் வாகனத்தின் உற்பத்திக்காலம் 2009 ஆம் ஆண்டுக்கு பின்னரானதாகவும் இருக்கவேண்டும்

மேற்படி வாகனத்துக்குரிய விண்ணப்பப் படிவம் மற்றும் கூறு விலை ஆவணங்களையும் மேலதிக விபரங்களையும் 23.03.2016 நண்பகல் 12 மணிவரை மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக ரூபா 500.00 பல்க லைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சிரேஷ்ட உத விப்பதிவாளர் நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வான் ஒன்றை அழைப்பின் பேரில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி"** என அடையாளமிட்டு 2016.03.28 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச் சபை, த.பெ.எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவ ரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடலாம்.

கேள்வி மனுக்கள் 2016.03.28 அன்று பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விமனுக்கள் திறக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.


**தலைவர்**
**கேள்விச்சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(சி-3942)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>கி.பா:27 உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: B/5601 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 42 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/கனடா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5604 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 10<br>உயரம்: 177cm<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/5602 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 17 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5608 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 56 செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BScசுவிஸ் PR<br>தொ.இ: B/5603 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 72செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/5611 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 20செவ் 4 இல்<br>உயரம்: 172cm<br>தகைமை/தொழில்:MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/5605 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 8 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/5612 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



# குறைகேள் அரங்கு...

## விவசாயிகளின் குறைகளை கண்டறிய அடிமட்டத்திற்கு வந்து பாருங்கள்

மாங்குளம்புதிருப்புக்குளத்தில் அமைந்துள்ள நூறு ஏக்கர் மற்றும் நாற்பது ஏக்கர் (துணிகைத் தோட்டத்தில்) காட்டு யானைகளின் அட்டகாசம் தினமும் அதிகரித்து வருகின்றது.

இப் பண்ணைகளில் பெரும் நிதியை முதலிட்டு அறுவடை செய்யும் வேளையில் யானைகள் தினமும் பண்ணைக்குள் புகுந்து அச்சுறுத்துகின்றன.

அறுவடை செய்து வைத்த உழுந்து, நெல் மூடைகள் மற்றும் மிளகாய், கத்தரி, வெண்டி, பாகல், புடோல், கச்சான் போன்ற பயிர்களைத் தினமும் மிதித்து நாசமாக்குகின்றது.

கடந்த 8 ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகையில் குறிப்பிட்டது போன்று கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒட்டுசுட்டான் பிரதேச செயலரின் கவனத்திற்கு மாங்குளம்கமக்கார அமைப்பு, ஒலுமடு கமத்தொழில் விரிவாக்க நிலையத்தினூடாக அறியக் கொடுத்தும் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

மின்சாரவேலி அமைக்க புதிருப்புக் குளத்தைச் சேர்ந்த விவசாயிகள் அனுமதி கோரியும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை.

விவசாயிகளை அடிமட்டத்திற்கு வந்து பாருங்கள். எங்கள் குறைகளை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய உதவுங்கள். உங்கள் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்புவிடுத்தால்அழைப்பை எடுக்காது அசமந்தம் காட்டாதீர்கள்.

புதிருப்புக்குள விவசாய வீதியை கொங்கிறீட் வீதியாக அல்லது கிரவல் இட்டு போக்குவரத்துக்கு செப்பனிட்டுத்தரும்படி எமது பகுதி மக்கள் விவசாய அமைச்சின் செயலாளர், ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஆகியோருக்கு பலமுறை கடிதங்கள் எழுதியும் நிதி ஒதுக்கி செப்பனிட்டு தரப்படவில்லை.

மாரிகாலத்தில் சேறும் சகதிக்குள்ளும் வாகனங்களைக் கொண்டு செல்ல முடியாமல் நடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

நல்லாட்சி என்று சொல்லப்படும் சொல் ஆட்சியில் இக்குறைகள் போக்கப்படுமா? எங்கள் விவசாய அமைச்சர் உடன் நடவடிக்கை எடுக்கும் செயல் வீரர். அவரது கவனத்திற்கும் செயற்பாட்டிற்கும் இக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

மேலும் இவ்வீதிக்கு இரவு வேளைகளில் மக்கள் சென்று வருவதற்கு வசதியாக ஒளி ஊட்டித் தாருங்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையோ அல்லது மாங்குளம் மின்சார சபையோ உதவுமா? அதிகாரிகளே, அமைச்சு உத்தியோகத்தர்களே, பாராளுமன்ற உறுப்பினர்களே தயவுசெய்து அடிமட்டத்துக்கு வாருங்கள். உங்கள் விவசாய பணிப்பாளர்கள், விவசாய போதனாசிரியர்களை அனுப்பி வையுங்கள்.

கமக்கார, நல்ல நிர்வாக அனுபவம் வாய்ந்தவர்களை, செயற்படுத்தக்கூடியவர்களை தெரிவு செய்யுங்கள். மக்கள் குறைகளை தயவு செய்து தீர்த்து வையுங்கள். பத்திரிகைகளில்அறிக்கைவிடும்பொழுது விவசாயப் பணிப்பாளர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் வெளிப்படுத்தினால் நீங்கள் அபிவிருத்தி செய்ய இருக்கும் விவசாயத் திட்டங்கருதி நாமும் பங்கு கொள்ளலாம்.

நாகமுத்து தணிகாசலம் பிள்ளை (புதிருப்புக்குள, பறை யாளன்குள விவசாயிகள் சார்பில்)

## கிளி. நீதிமன்றில் ஏல விற்பனை

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நாளை சனிக்கிழமைகாலை9மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை இடம்பெறவுள்ளதாக மேற்படி நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னர் பதிவா ளரின் அனுமதியுடன் ஏலவிற்பனைக்கான பொருட்களைப் பார்வையிட முடியும் என அவர் அறிவித்துள்ளார். (2-3)

## 2011ஆம் ஆண்டிற்கு பின் நிர்வாகத் தெரிவு இடம்பெறவில்லை

அக்கராயன் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு நீண்டகாலமாக நடைபெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இக் கிராமத்தில் ஏற்படும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் கிராமத்தின் பல்வேறு தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை எனவும் பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே அக்கராயன் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாக சபையை தெரிவு செய்து மீளவும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி கரைச்சி பிரதேச செயலாளரிடம் கிராம மக்கள் மனு ஒன்றை கையளித்துள்ளனர். 2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இச்சங்கத்திற்கான நிர்வாகத் தெரிவு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-3-31)

## நீர்க்கிடங்கில் தவறி விழுந்த யானைக்குட்டி மீட்கப்பட்டு தாய் யானையுடன் இணைப்பு

### முள்ளியவளையில் சம்பவம்



நீர்க்கிடங்கில் தவறி விழுந்த ஒரு மாத வயதுடைய யானைக் குட்டியொன்று முல்லைத்தீவு வன ஜீவராசிகள், வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினால் மீட்கப்பட்டு தாய் யானையுடன் இணைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் முல்லைத்தீவு முள்ளியவளைவெள்ளைமலை ஏற்றப்பகுதியில் முள்ளியவளை ஒட்டுசுட்டான் பிரதான வீதியோரமாக இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த வீதியைவழிமறித்து ஒரு தொகுதி யானைக் கூட்டம் நிற்பதாக பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து அப்பகுதிக்குச் சென்ற வன ஜீவராசிகள் திணைக்களத்தினர், வனவள பாதுகாப்பு திணைக்களத்தினர், இராணுவத்தினர், முள்ளியவளை பொலிஸார் ஆகியோர் யானைக் கூட்டத்தை அவ்விடத்தில் இருந்து துரத்தினர்.

இந்நிலையில் அப்பகுதியில் காணப்பட்ட நீர்க்கிடங்கினுள் விழுந்து கிடந்த குறித்த யானைக்குட்டியை மீட்டு அப்பகுதிக் காட்டின் நடுப்பகுதிக்கு கொண்டு சென்று தாய் யானையுடன் இணைத்தனர்.

இதேவேளை இச்சம்பவம் நடைபெற்றபகுதிக்கு அண்மையாக பொதுமக்களின் குடியிருப்புக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-3-310)




## கரைதுறைப்பற்றுக்கு புதிய பிரதேச செயலர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரதேச செயலாளராக சி.குணபாலன் நியமிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு பிரதேச செயலாளர் இல்லாத நிலையில் பொதுமக்கள் பல இடர்பாடுகளை எதிர்கொண்டு வந்தனர்.

இந் நிலையில் துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வந்த சி.குணபாலன் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டு தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றிய இ.பிரதாபன் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டிருந்தார்.

துணுக்காய் பிரதேச செயலாளர் கரைதுறைப்பற்றுக்கு நியமனம் பெற்றுள்ளதனால் துணுக்காய் பிரதேச செயலாளராக இ.பிரதாபன் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (2-3-28)

## நேர முகாமைத்துவத்திற்கென கணனி தன்னியக்க ஒலி சமிக்ஞை அறிமுகம்

### வவு.வீரபுரம் வித்தியாலய ஆசிரியர் கண்டுபிடிப்பு



வவு. வீரபுரம் மகா வித்தியாலயத்தில் நேர முகாமைத்துவத்தை சிறப்பாக பேணுவதற்கு கணனி மயப்படுத்தப்பட்ட தன்னியக்க ஒலி சமிக்ஞை வித்தியாலய ஆசிரியர் ஒருவரினால் உருவாக்கப்பட்டுள்ளது.

தண்டவாள இரும்புத் தூணில் மணி அடித்து நேர ஒழுங்கைப் பேணும் நிலையை மாற்றி கணனி மயப்படுத்தப்பட்ட தன்னியக்க ஒலி சமிக்ஞையை உருவாக்கி புத்தாக்கமும் புரட்சிகரமுமான ஒரு செயலை வீரபுரம் மகா வித்தியாலய தொழில் நுட்ப ஆசிரியர் உருவாக்கியுள்ளார்.

ஆசிரியரின் இக் கண்டுபிடிப்பை பலரும் பாராட்டியுள்ளனர். (2-3-311)

## அகற்றப்பட்ட பொலிஸ் நிலையத்தை கூழாவடியில் மீண்டும் அமைக்குக

### பொதுமக்கள், வர்த்தகர்கள் கோரிக்கை

(சோலைநகர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் சந்தைக்கட்டடங்கள், வியாபார நிலையங்கள் அமைந்துள்ள கூழாவடிச் சந்தியில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் அகற்றப்பட்ட பொலிஸ் நிலையத்தை மீண்டும் அவ்விடத்தில் அமைக்குமாறு பொதுமக்கள், வர்த்தகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொலிஸ் நிலையம் அமையப் பெறுமிடத்து அப்பகுதியில் இடம்பெறும் அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்த முடியுமென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கூழாவடிச்சந்தியில்அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையம் அகற்றப்பட்டு பொலிஸ் நிலையம் ஒரு வருடம் கடந்த நிலையில் மாலை நேரங்களில் தொடர்ச்சியாக தெருச்சண்டித்தனங்கள், தகாதவார்த்தைப் பிரயோகங்கள் என்பன இடம்பெறுவதால் அதனூடாகப் பயணிப்போர் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவிப்பதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

சில இளைஞர்கள் மாலை நேரங்களில் மது அருந்திவிட்டு இவ்வாறு நடந்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவங்களை உடனடியாக நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பொலிஸ் தரப்பினர் முன்னர்இயங்கிவந்தபொலிஸ் நிலையத்தை மீண்டும் அவ்விடத்தில் அமைப்பதன் மூலம் தெருச் சண்டைகள், அடாவடித்தனங்களை கட்டுப்படுத்த முடியுமென பொதுமக்கள், வர்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-309)

## சித்திரை வருடப்பிறப்பு விளையாட்டு போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரல்

வவுனியாகலைமகள் விளையாட்டுக்கழகமும்சனசமூகநிலையமும் இணைந்து நடத்தும் சித்திரை வருடப்பிறப்பு விளையாட்டுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

32 வருடமாக இடம்பெறும் இப் போட்டிகளில் இவ்வருடம இடம் பெறும் விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான 60 மைல் சைக்கிள் ஓட்டம், கழகங்களுக்கிடையிலான கயிறு இழுத்தல், சிறுவர், சிறுமியர்கள், வாலிபர்கள், வனிதையர, முதியவர்களுக்கான பலதரப்பட்ட போட்டிகளும் அணிக்கு நான்குபேர் கொண்ட வரையறைக்குட்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

எனவே போட்டியில் பங்கு பற்ற விரும்பும் வட மாகாணத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள், எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா-மன்னார் வீதியில் உள்ள கலைமகள் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகிகளுடனோ அல்லது 077 645 3739, 077 603 1512, 077 631 3658, 077 736 3175 என்ற தொலைபேசிஇலக்கங்களுடனோ தொடர்பு கொண்டுபதிவுகளைமேற்கொள்வதுடன்மேலதிக தகவல்களையும பெற்றுக்கொள்ள முடியும்என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-250)



போரினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றான புதுக்குடியிருப்பு கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலத்தின் கல்வித் தேவைக்காக தொலைக்காட்சிப் பெட்டி, டி.வி.டி பிளேயர் (எண்ணியல் தொலைக்காட்டி தட்டு இயக்கி) ஆகியவற்றை பாடசாலை அதிபரிடம் ரிஷி தொண்டு நாத சுவாமிகள் கடந்த 4 ஆம்.திகதி வழங்கி வைத்த போது...

# நல்லாட்சி அரசே! அரசியல் கைதிகள் மீது கருணை காட்டு

# உணவு தவிர்ப்பில் இருக்கும் உறவுகளுக்கு விலை பேசாதே

## கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்கள் திரண்டு நேற்று கவனயீர்ப்பு போராட்டம்



தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பு போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாகவும் அவர்களின் உடனடி விடுதலையை வலியுறுத்தும் முகமாகவும் கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து கவனயீர்ப்பு போராட்டத்தை கிளிநொச்சியில் முன்னெடுத்தனர்.

நேற்று காலை 9 மணியளவில் ஆரம்பமான கவனயீர்ப்பு போராட்டத்தில் ஊர்வலம், மனித சங்கிலிப் போராட்டம், சர்வமத பிரார்த்தனை என்பன இடம்பெற்றன.

கிளிநொச்சி புனித திரேசம்மா ஆலய முன்றிலில் ஆரம்பமான பேரணி ஏ-9 வீதியூடாக நகர்ந்து கிளிநொச்சி பிள்ளையார் ஆலயம் வரை சென்றடைந்து அங்கிருந்து மனித சங்கிலி போராட்டம் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து சர்வமத பிரார்த்தனையும் நடைபெற்றது. இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பதாகைகளை தம்முடன் தாங்கிப் பிடித்தவாறு சென்றனர்.

அதில் **"நம் பிள்ளைகள் விடுதலைக்காக நல்லாட்சிக்கு வாக்களித்த நாம் தினம் தினம் நடுத்தெருப் போராட்டம், ஒரு சில இனவாதிகளுக்காக ஒரு சமூகமே சீரழிக்கப்படலாமா, ஒரு கணம் சிந்தித்து பார்ப்பாயா நல்லாட்சி அரசே, உயிரை அடகு வைத்து உண்ணா விரதமிருக்கும் உறவுகளுக்கு விலை பேசாதே அடைபட்ட சிறைகளில் நம்பிள்ளைகள், எப்படி சாத்தியமாகும் நல்லிணக்கம் நல்லாட்சி? கைதிகளை விடுதலை செய், அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அரசு கோரும் விலை தான் என்ன? உயிர்தான் என்றால் எடுத்துக் கொள், உண்ணா நோன்பில் அரசியல் கைதிகள் கண்ணீரில் அவர்களின் குடும்பங்கள் மீது அரசே கருணை காட்டு, சிங்கள சகோதரர் களே! எம் பிள்ளைகளின் விடுதலைக்கு வலுச் சேருங்கள, தேசிய அரசாங்கமே தேர்தல் கால வாக்குறுதிகள் எங்கே? குழி தோண்டி புதைத்து விட்டீர்களா?"** என எழுதப்பட்டிருந்தது.

இப் போராட்டத்தில் கிளிநொச்சி சந்தை மற்றும் நகர வர்த்தக சங்கங்கள், தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், பிரஜைகள் குழு, முச்சக்கர வண்டி சங்கம், ஆசிரியர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், ஆலய அறங்காவலர் சபையினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிபிள்ளை உள்ளிட்ட பொது மக்கள் பலரும் கலந்து கொணடனர்.

போராட்டத்தின் இறுதியில் கிளிநொச்சி மாவட்ட பொது மககள்சார்பிலும் பொது அமைப்புக்களின் சார்பிலும் கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள்குழுவினால் கண்டன அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அக்கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

இலங்கைத் திருநாட்டில்



மாறி ம்மாறி வந்த ஆட்சியாளர்கள் சிறுபான்மை தமிழ் சமூகத்தின் நியாயமிக்க பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் இனப்பிரச்சினைக்கும் தீர்வை வழங்காது திட்டமிட்டு புறக்கணித்து வந்துள்ளனர்.

தொடர்ந்து வந்த காலப் பகுதியில் தடை செய்யப்பட்ட குறித்த விடுதலை அமைப்புடன் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இருதரப்பு முத்தரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இருந்த அரசாங்கங்கள் ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது.

குறித்த அமைப்புடன் சார்ந்தவர்கள் மற்றும் தொடர்புடையவர்கள் என்ற காரணத்தின் அடிப்படையிலும் சந்தேகத்தின் அடிப்படையிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர், யுவதிகள் நடைமுறையில் இருந்த அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் என்பவற்றின் கீழ் கைதுசெய்யப்பட்டு காலவரையறையின்றி இன்றுவரை சிறைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே அவர்கள் அனைவரும் தமிழ் அரசியல் கைதிகள் என பிரகடனப்படுத்தப்படுகின்றார்கள்.

கடந்த 2009 யுத்தம் நிறைவுக்கு பிற்பாடு சர்வதேச மனிதாபிமான நியமங்களின் அடிப்படையில் சுமார் 12 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கி சமூகத்துடனும் குடும்பத்துடனும் இணைக்கப்பட்டார்கள்.

எனினும் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதிலும் அதற்குப் பின்னரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் 140 அரசியல் கைதிகளை போருக்குப் பின்னரான கடந்த 7 வருடங்கள் கடந்தும் விடுவிக்கப்படாது தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதானது ஏற்றுக் கொள்ள கடினமாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை பயங்கரவாதச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த காலத்தில கடுமையான தண்டனை வழங்கப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்களுககான தண்டனையினை மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் போருக்குப் பின்னரான 7 வருடங்கள் கடந்துள்ள நிலையில் அரசியல் கைதிகள் துரிதமாக விடுதலை செய்யப்படுதல் காலத்தின் தேவை என்றும் வலியுறுத்தி பரிந்துரைத்துள்ளது.

பல்வேறு பிரதேசங்களிலும் இருக்கக்கூடிய சிறைச் சாலைகளில் 07 முதல் 22 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதகள் பிரதானமாக கொழும்பு புதிய மகசீன் சிறைச் சாலை யில் 72 கைதிகளும் அநுராதபுரம் சிறைச்சா லையில் 35 கைதிகளும் கண்டி தும்பறை சிறைச்சாலையில் 12 கைதிகளும் இதனை விட நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள சிறைச்சாலையில் 03 தமிழ பெண் அரசியல் கைதிகளுட்பட 21கைதிகளும் மொத்தமாக 140 அரசியல்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பாரிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டு அதனை மேன்முறையீடு செய்கின்றவர்கள், மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல செய்யப்பட்டு அதற்கு முகம் கொடுத்து வருகின்றவர்கள், கைதுசெய்யப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை வழக்குகள் எதுவும் தொடரப் படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், எனவே காலத்தின் சூழ்நிலைக் கைதிகளாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடும் எமது பிள்ளைகளை, எமது உறவுகளை இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தின் குறியீடாக விரைந்து விடுதலை செய்து நீடித்து நிலைத்து நிற்கும் நல்லாட்சியை நிலை நிறுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட மக்கள் சார்பிலும் பொது அமைப்புக்கள் சார்பிலும் பணிவாக இக்கண்டன அறிக்கை ஊடாக கேட்டுக்கொள் கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-277-281-311-15)




## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவருடன் சாந்தி எம்.பி.கலந்துரையாடல்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கும் மாணவர்களை அதிகரிப்பது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருடன் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா கலந்துரையாடியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் கடந்த மாதம் நடைபெற்றிருந்தது. இதன்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்களிற்கு தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்களின் தொகை அதிகரிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டு அதனை சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு தெரிவிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

இதற்கு மேலதிகமாக நேற்று வியாழக்கிழமை இவ்விடயம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு சென்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி, அதன் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வாவுடனான சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது மீள்குடியேற்றத்துக்கு பின்னர் வன்னி மாவட்டங்களிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்களின் தொகை அதிகரிப்பிற்கேற்ப மேலும் உள்வாங்குவது தொடர்பில் பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (2-281)

## போருக்குப்பின் தமிழர்களின் செல்நெறியில் ஆதிக்கம் செலுத்தும் விடயப் பரப்பு எது?

### வவுனியாவில் சுழலும் சொற்போர்

(திருமுறிகண்டி)

கலை இலக்கியத்துறையில் காத்திரமான பங்களிப்பை ஆற்றி வருகின்ற தமிழ்மாமன்றம், இன்னொரு முயற்சியாக, 'ஆற்றலுக்கும் ஆளுமைக்குமான களம்' என்ற தொனிப் பொருளில் "விளைநிலம்" என்கின்ற ஓர் தொடர் நிகழ்வை நடத்த உத்தேசித்துள்ளது.

கலை இலக்கிய ரீதியில் ஆர்வமுள்ள, திறமையுள்ளவர்களுக்கான சரியான களத்தை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அவர்களின் திறமைகளுக்கான அங்கீகாரத்தை வழங்குவதுடன், அவர்களின் திறமைகளை மேலும் மெருகேற்றி, அத்துறைசார் ரீதியில் அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நல் நோக்கத்தின் அடிப்படையில், இந் நிகழ்வினை தமிழ் மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

'விளைநிலம்' எனும் இந் நிகழ்வின் முதலாவது களம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 3 மணிக்கு வவுனியா பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில், 'போருக்கு பின்னரான தமிழரின் செல்நெறியில் பெரிதும் ஆதிக்கம் செலுத்தும் விடயப்பரப்பு எது?' என்ற தலைப்பிலான தமிழ்மாமன்றத்தின் மேற்சபை உறுப்பினர் இரா.இராஜேஸ்வரன் தலைமையிலான சுழலும் சொற்போர் இடம்பெறவுள்ளது.

இச் சுழலும் சொற்போரில், 'பொருளாதார மீள் எழுச்சி'-க.அனுஷா, 'அதிகரித்து வரும் குற்றங்களும் சீர்கேடும்'-சி.விதுர்சன், 'புலம் பெயர்ந்தவர்களின் சிந்தனை மாற்றம்'- கு.சிரஞ்சீதன், 'தமிழ் அரசியல் தலைமைகளின் போக்கு'-சு.வினோத, 'சுயநிர்ணயம் மீதான நம்பிக்கையீனம்'-கி.கிஷாந் ஆகியோர் சுழலும் சொற்போரில் வாதாடவுள்ளனர்.

அத்துடன், 'கால ஓட்டத்தில் கரையாத சுவடுகள்' எனும் பொருளில் தமிழ்மாமன்றத்தின் மேற்சபை உறுப்பினர் செ.மதுரகன் தலைமையிலான கவியரங்கமும் இடம்பெறவுள்ளது. இக் கவியரங்கில், 'ஏழ்மையின் கல்வி'- ஜெ.கோபிநாத், 'வீரர்தம் விழுபபுண்'- த.மோகனராங்கன், 'இணையத்தில் எழுத்துக்கள்'-ச.கஜன், 'கவிஞனின வார்த்தைகள்'-வே. முல்லைதீபன் ஆகியோர் கவி புனையவுள்ளனர்.

மேலும், தமிழ்மாமன்றம் வாசிக்கும் ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில், தொடர்ச்சியாக நடத்தி வருகின்ற வாசிப்பும் அனுபவப்பகிர்வும்-நூலக நிகழ்வினுடைய 7ஆவது நிகழ்வும் தொடர்ச்சியாக இடம் பெறவுள்ளது. இந் நிகழ்வில், போராசிரியர் சிவத்தம்பி நினைவு ஆவணப் படவிருது 2014 கிடைக்கப் பெற்ற, மொரட்டுவை பல்கழைக்கழக பொறியியல் பீட மாணவன், மோகனராங்கன் தயாபரன் இயக்கிய, இரத்தக் கண்ணீர் (TEARS OF BLOOD) எனும் ஆவணப்படம் காட்சிப்படுத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருக்கின்ற 'விளைநிலம்' மற்றும் 'வாசிப்பும் அனுபவப் பகிர்வும்' எனும் நிகழ்வுகளில் கலை இலக்கிய துறைசார் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தமிழ்மாமன்றம்கேட்டுள்ளது. (2-3-31)

## பொதுபல சேனா உள்ளிட்ட

# மூன்று பௌத்த அமைப்புக்கள் இணைந்து கூட்டணி அமைப்பு

(கொழும்பு)

சிங்கள பௌத்த அமைப்புக்கள் மூன்று இணைந்து கூட்டணி ஒன்றை அமைத்துக் கொண்டுள்ளன. சிங்கள பௌத்த மக்களுக்காக உருவாக்கப்பட்ட மூன்று அமைப்புக்கள் இவ்வாறு கூட்டணி அமைத்துள்ளன. பொதுபல சேனா, ராவனா பலய மற்றும் சிங்கள ராவய ஆகிய மூன்று அமைப்புக்களும் நேற்று முன்தினம் இந்த் கூட்டணியை அமைத்துக் கொண்டுள்ளன.

சிங்கள பௌத்தர்களின் உரிமைக்காக விரிவான அடிப்படையில் குரல் கொடுப்பதே இந்த கூட்டணியின் நோக்கம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் இந்த அமைப்புக்கள் கூட்டாக இணைந்து செயற்பட உள்ளதாக பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (இ-5)

# குற்றச்செயல்களைத் தடுக்க வடக்கில் பாதுகாப்பு தீவிரம்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்று வரும் கொலை, கொள்ளைகள், மது போதைப்பாவனை, பாலியல் துஷ் பிரயோகம் முதலான குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய காலை, மாலை, இரவு பொலிஸ் ரோந்து சேவைகள், உடனடி வீதித் தடைகள், உடனடி சுற்றிவளைப்புகள் என்பன ஏற்படுத்தப்பட்டு வடக்கின் அனைத்துப் பகுதிகளிலும் பாதுகாப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா கடந்த பெப்ரவரி 26ஆம் திகதி 23/2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சபையில் விசேட கூற்றொன்றை விடுத்து எழுப்பிய கேள்விக்கு நேற்று முன்தினம் சபையில் சமர்ப்பித்திருந்த பதிலிலேயே அமைச்சர் சாசல மேற்கண்ட விடயங்களைக் தெரிவித்திருந்தார்.

அந்தப் பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கில் இடம்பெறும் கொலைகள், கொள்ளைகள், போதைப் பொருள் பாவனை, பாலியல் துஷ் பிரயோகம், தாக்குதல்கள் முதலான சமூக விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக பகுதிக்குப் பொறுப்பான அதிகாரிகள், சிவில் பாதுகாப்புக்குழு அங்கத்தவர்கள், பொது அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பொலிஸாரால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்க பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

காலை, மாலை, இரவு என தொடர்ச்சியான நடமாடும் பாதுகாப்பு சேவை, மோட்டார் சைக்கிள் ரோந்து என்பவற்றுக்காக ஒவ்வொரு தொகுதிக்குள்ளும் அனைத்துப் பிரிவுகளும் உள்வாங்கப்படும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் உடனடி வீதித்தடைகள், உடனடி சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகத்திற்



கிடமான நபர்கள், சட்டவிரோத மாடு, மரங்கள், மணல் மற்றும் போதைப்பொருள் கொண்டு செல்பவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து அனைத்து மக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## குறை கண்டுபிடித்தவருக்கு 22 இலட்சம் ரூபாய் பரிசு

சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் உள்ள முக்கிய குறையை கண்டுபிடித்த பெங்களூரை சேர்ந்த ஆனந்த் பிரகாஷ் என்பவருக்கு 22 இலட்சம் ரூபா பரிசு வழங்க பேஸ்புக் நிர்வாகம் அறிவித்துள்ளது.

பிளிப்கார்ட்டில் பணிபுரியும் ஆனந்த் பிரகாஷ் பிற கணனிகளில் அனுமதியில்லாமல் நுழையும் ஒரு ஹேக்கர்.

இவர் கோடிக்கணக்கானவர்கள் பயன்படுத்தும் சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் லொக் இன் செய்வதில் இருக்கும் ஒரு முக்கிய குறையை கண்டுபிடித்துள்ளார்.

பேஸ்புக்கின் இந்தக் குறையை பயன்படுத்தி பேஸ்புக்கில் கணக்கு வைத்திருக்கும் நபர்களின் செய்தி, புகைப்படம் மற்றும் கடன் அட்டை எண் போன்ற முக்கிய தகவல்களைத் திருட முடியும்.

பேஸ்புக்கின் இந்தக் குறையை ஆனந்த் பிரகாஷ் பேஸ்புக் நிறுவனத்திடம் மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, தற்போது பேஸ்புக்கில் இருந்த குறையை சரி செய்துள்ளது. (இ-5)

# உயர் கல்வி முறைமையில் மாற்றங்களை கொண்டுவர நல்லாட்சி அரசு தீர்மானம்

## விசேட தொழில்நுட்ப பீடங்கள் அமைக்கப்படும்

உயர் கல்வி முறைமையில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு நல்லாட்சி அரசு தீர்மானித்துள்ளதுடன் விசேடமாக தொழில்நுட்ப பீடம் அமைக்கப்பட்டு அதனூடாக மேலதிக மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கத் திட்டமிட்டுள்ளது. இவ்வாறு உயர்கல்வி பிரதி அமைச்சர் மொஹான் லால் க்ரேரு தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வருடாந்தம் ஒரு இலட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமான பரீட்சார்த்திகள் உயர்தரப் பரீட்சை எழுதுகின்றனர்.

எனினும் 26 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே உயர் கல்விக்காக பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுகின்றனர். இதனால் மீதமுள்ள மாணவர்கள் சரியான வழிகாட்டல்கள் இன்றி தவறான திசைகளில் செல்கின்றனர்.

அதேவேளை, சர்வதேச தரத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய - எதிர்பார்க்கின்ற சில பாடத்திட்டங்களுக்கு நாங்கள் முன்னுரிமை வழங்க வேண்டும். கலைப் பீடங்களில் சில பாடங்களால் எந்தவித பிரயோசனமும் இல்லை. இதனாலேயே வேலையில்லாப் பட்டதாரிகள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் ஏற்பட்ட சிக்கல்களினால் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் உள்வாங்குவதற்கு கால தாமதம் ஏற்பட்டது.

இன்று ஒன்றரை வருடங்கள் கால தாமதித்தே புதிய மாணவர்களை இணைத்துக் கொள்கின்றோம். இது நமது உயர்கல்வி முறைமையில் உள்ள பெரும் குறைப்பாடாகும். இதனை நாங்கள் வெகுவிரைவில் சீர்படுத்துவோம்.

2015 ஆம் ஆண்டு தோற்றிய மாணவர்களை நவம்பர் மாதத்துக்கு முன்னர் பல்கலைக் கழகத்துக்கு இணைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றோம்.


அத்துடன் அடுத்த வருடத்தில் ஜூன் மாதத்துக்கு முன்னர் இதனை நடைமுறைப்படுத்தவும் உத்தேசித்துள்ளோம்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் தொழில்நுட்ப பாடங்களை பாடசாலை மட்டத்தில் அறிமுகப்படுத்திய போதிலும் உயர்கல்விக்கான ஏற்பாடுகள் எதனையும் செய்யவில்லை. தற்போதுள்ள நிலையில் தொழில்நுட்ப பீடத்தின் அவசியம் கேள்வி நிலை எழுந்துள்ளது. இதனை வெகுவிரைவில் நாங்கள்



ஏற்படுத்தி புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளோம். இதற்கு மேலதிகமாக மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

அதேவேளை, பல்கலைக்கழக விடயங்கள் தொடர்பில் தீர்மானிப்பதற்கு ஆணைக்குழு ஒன்றையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். தனியார் கல்வி நிறுவனங்களும் இதன் கீழ் செயற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)





வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் மகளிர் விவகாரப் பிரிவினால் "நிலையான எதிர் காலத்திற்கு வலுவான பெண்கள்" எனும் தொனிப் பொருளில் 2016 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.இதில் மகளிர் விவகாரப்பிரின் குறும்படம் வெளியிடப்பட்டு திரையிடப்பட்டதுடன் வெற்றியீட்டிய குறும்படங்களுக்கான விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. வடமாகாணத்தில் பாதிக்கப்பட்ட பெண்களின் தேவைகளை இனங்காணுதல் மற்றும் ஆவணப்படுத்தல் தொடர்பான காட்சியளிப்பும், அத்துடன் சிறப்புரைகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,சிறுவர் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா,யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன், சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாரகன், திணைக்கள அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (படங்கள்:- பொ.சோபிகா)

### சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன்

# போருக்கு பின்னரான வடக்கின் தேவைகள் பற்றிய ஆய்வு அறிக்கையை அரசு வெளியிட வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் வடமாகாணத்தில் போருக்கு பின்னரான தேவைகளைப் பற்றிய முழுமையான ஆய்வினை மேற்கொண்டு அரசு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என தாம் பிரதமரிடம் கேட்டுக் கொண்டுள்ளதாக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வடமாகாண சுகாதார அமைச்சின் மகளிர் விவகாரப் பிரிவின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடமாகாணத்தில் பாதிப்புக்குள்ளாகியுள்ள பெண்களின் தேவைகளையும் அத்தேவைகளை நிறைவேற்றக் கூடிய செயற்பாடுகளையும் முதலில் இனங்கண்டு அவற்றை ஆவணப்படுத்தி அதன் பின்னர் நடைமுறைப்படுத்த என்ன என்ன செய்ய வேண்டும் போன்ற கலந்தாலோசனைகளை நடத்தவும் வாய்ப்பளிக்கும் நிகழ்வாக இந்த நிகழ்வு அமைக்கப்பட்டிருக்கின்றது.

பெண் சமத்துவம், பெண்களுக்கான கல்வி மற்றும் பெண்களின் தொழில் வாய்ப்பு போன்ற பல விடயங்களை நாம் சுப்பிரமணிய பாரதியின் காலத்தில் இருந்தே ஆராய்ந்து வந்து கொண்டிருககின்றோம். பெண்கள் அனைத்துத் துறைகளிலும் தமது ஆற்றல்களையும்,திறன்களையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

வடக்குக் கிழக்கில் தமிழர்கள் செறிந்து வாழுகின்ற பகுதிகளில் இடம்பெற்ற நீண்ட கொடிய யுத்தத்தின் பயனாக பெண்கள் எமது பாரம்பரிய கலாசார பின்னணிக்கு அமைவான பல தொழில்களுக்கும் மேலதிகமாக ஏற்கனவே செய்யாத பலவிதமான தொழில்களைப் புரிய வேண்டியவர்களாகவும் உந்தப்பட்டனர்.

எமது புள்ளி விபரக் கணக்கின் படி வடக்குக் கிழக்கில் 89 ஆயிரத்திற்கும் அதிகமான பெண்கள் இக்கொடிய யுத்தத்தினால் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர். இதனால் மேற்குறிப்பிட்ட 89 ஆயிரம் குடும்பங்களினுடைய தலைமைப் பதவியையுந் தாமே ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாய சூழ் நிலைக்கு இக் குடும்பங்களின் தாய்மார்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதன் விளைவாக இவர்கள் பாரிய பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர்.

இது பற்றிய ஆய்வொன்றை மேற்கொண்ட வடக்கு மாகாண சபையன் மகளிர் விவகார அமைசசானது இன்றைய பெண்கள் தமது நடைமுறை வாழ்க்கையை நடத்துவதில் அவர்களுக்கிருக்கும் சமூக விழுமியத் தடைகள் பற்றி ஆராய்ந்தது. அவ்வாறு ஆய்வில் ஈடுபட்ட போது பலவகையான பாதிக்கப்பட்ட பெண்களை அவர்கள் அடையாளங் கண்டார்கள். அவ் ஆய்வின் படி தனியாகக் குடும்பத் தலைமையைத் தாங்கி நிற்கும் பெண்கள் , வன்முறைக்குட்படுத்தப்பட்ட அல்லது வன்முறைக்கு உட்படுத் தப்பட்டுக் கொண்டிருக்கின்ற பெண்கள்,உடல், உள ரீதியாக விசேட தேவைகளையுடைய பெண்கள், முன்னாள் போராளிகள், பாதுகாப்பற்ற இளவயதுப் பெண்கள்,பணிப் பெண்களாக வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்கள்,திருமண அந்தஸ்துப் பெறாத பெண்கள் என பல வகைகளாக அவர்கள் வகுக்கப்பட்டு அவர்களின் பிரச்சினைகள் தனித்தனியாக விரிவாக ஆராயப்பட்டு அறிக்கைவடிவமாக வெளியிடப்பட்டுள்ளது.

இவை அனைத்திற்கும் மேலாக வடமாகாணத்தில் காணப்படுகின்ற, போருக்குப் பிந்திய தற்காலச் சூழ்நிலையில், பெண்களின் நிலை பற்றி ஒவ்வொரு அமைச்சும் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து அவர்களுடைய தேவைகள், அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் சுய தொழில் வாய்ப்பு போன்ற பல விடயங்கள் பற்றியும் கூடுதலான அக்கறை காட்டி வருகின்றன.

குடும்பத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தினால் துவண்டு விழுந்த பெண்கள் பலர் அடுத்த நிமிடமே தம்மைச் சுதாகரித்துக் கொண்டு முன்னைய எந்த அனுபவமும் இன்றி திணிக்கப்பட்ட சுமைகளைத் தாங்கியவாறு நடைபயிலத் தொடங்கியுள்ளார்கள்.

சமூகத்தில் தொடர்ந்து இடைவெளியில்லாது தமது வாழ்க்கை முறைமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வேண்டிய அனைத்துக் கடமைகளையும் ஆற்ற வேண்டியவர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள்

இவர்களுக்கு உதவுவதற்காக எத்தனையோ சமூக அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் எனப் பலரும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்ற போதிலும் இத்திட்டங்கள் ஒன்றோடொன்று ஒழுங்குபடுத்தப்படாது அவை தொடர்பற்றதாகி முன்னெடுக்கப்பட்டு வருவதால் அவற்றின் செயல் வடிவங்கள் திறமையற்றதாக மாற்றப்பட்டு விடப்பட்டுள்ளன.

இதனால்தான் பல சர்வதேச நிறுவனங்களின் உதவியுடனும் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உதவியுடனும் **வட மாகாணத்தின் போரின் பின்னரான தேவைகளைப் பற்றிய ஒரு முழுமையான ஆய்வினை மேற் கொண்டு அரசாங்கம் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரதமரிடம் கேட்டுக் கொண்டுள்ளோம.**

அவ்வாறான முழுமையான ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டால் திட்டங்கள் ஒவ்வொன்றும் எங்கெங்கே எவ்வாறு உள்ளடக்கப்பட வேண்டும் என்று முடிவெடுக்கச் சுலபமாக இருக்கும். எமக்கான வருங்கால மாகாண ரீதியான தூர காலத் திட்டங்களை வகுக்கவும் அப்பேர்ப்பட்ட தேவைகள் பற்றிய ஆய்வறிக்கை உதவி புரியும்.

முதலமைச்சர் நிதியம் இன்னமும் அமைக்கப்படாத நிலையிலும் எமது அமைச்சு "உதவிப்பாலம்" என்ற செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. மிக அவசரமானதும் அவசியமானதுமான சுயதொழில் முயற்சி தொடர்பாக பல பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நாம் உதவிகளை மேற்கொண்டிருக்கின்ற போதிலும் எம்மால் வழங்கப்படக் கூடிய உதவிகள் பல வரையறைகளுக்குக் கட்டுப்பட்டே நடை முறைப்படுத்தப்படுகின்றன. மக்களின் தேவைகள் மலையளவாக உள்ள போதிலும் எமது உதவிகள் மிகக் குறைந்த அளவினதாகவே அமைந்து விடுகின்றன.

இன்று பல சமூக அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள் போன்றன இவர்களுக்கான சுய தொழில் முயற்சி, வங்கி இலகுக் கடன் திட்டம், வர்த்தகம் போன்ற விடயங்களில் உரிய பயிற்சிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கி வருவதை நாம் அவதானிக்கின்றோம். இவற்றுள் சில பெண்கள் அமைப்புக்கள் மிகத் திறம்பட செயலாற்றுகின்றன. கடன்களைத் திரும்பக் கட்டுவதில் பெண்கள் காட்டும் நேர்மையும் சுறுசுறுப்பும் எமக்கெல்லாம் ஆச்சரியத்தைக் கொடுக்கின்றன.

இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிகள் பெண் தலைமைத்துவ அமைப்புக்களின் தேவைகள் பற்றி விரிவாக ஆராய்ந்து அவர்களின் தேவைகளை வங்கிகள் நிறைவு செய்யக் கூடிய வகையில் இலகு தவணைக் கடன் முறைமைகளை அறிமுகப்படுத்தி அவர்களுக்கு உதவ முன்வந்துள்ளார்கள்.

இந் நிலைமைகள் பற்றி இவ் அமைப்புக்களை மேற்பார்வை செய்யும் திணைக்களங்கள், அமைச்சுக்கள் மிகக் கூர்மையாக அவதானித்து உரிய அறிவுறுத்தல்களை வழங்கி உதவ வேண்டும்.

ஏனெனில் சில நிறுவனங்கள் சேவைகளை வழங்குவதற்கு மாறாக ஆசை வார்த்தை காட்டி அவர்களிடம் இருப்பதையும் பறித்துச் செல்லக் கூடிய பல நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ளனர் .

அடுத்ததாக வன்முறைக்குட்படுத்தப்பட்ட அல்லது வன் முறைக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற குடும்பங்கள் மீது நாம் மிகக் கூடுதலான கவனத்தைச் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

பெண்களின் பாதிப்பு இவற்றில் மிக மோசமானதாக அமைவதை நாம் அவதானிக்கலாம். இராணுவத்தினரின் வன்புணர்வுக்கு ஆளாகிய பெண்கள் வசிக்கும் இடங்களுக்கருகாமையில் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராணுவத்தினரின் முகாம்கள் இன்னமும் இருந்து வருவதை ஒரு வலைப்பின்னல் செய்தி குறித்துக் காட்டியுள்ளது.

கொடிய யுத்தத்தின் காரணமாக திருமண வயதிற்கு முன்பதாகவே மிகச் சிறு வயதில் இப்பெண்கள் மணம் முடித்து, குழந்தைகளைப் பெற்றுப் பின்னர் கணவன்மார்களை இழந்த இளம் விதவைப் பெண்களாகக் காட்சி அளிக்கின்றார்கள். இவர்கள் இராணுவப் பிரசன்னம் மிகக் கூடுதலாக காணப்படுகின்ற பகுதிகளில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இவர்கள் மீது பிரயோகிக்கப்படுகின்ற வன்முறைகளில் இருந்து இவர்களை மீட்டெடுப்பதற்கு நாம் தொடர்ந்தும் பாடு பட வேண்டும். இவர்களுக்கு உதவுவது போல் பல நாடகங்களை அரங்கேற்றி ஈற்றில் இவர்கள் மீது வன்முறைகளை கட்ட விழ்த்துவிடுகின்ற பல நிகழ்வுகள் பற்றி நாம் அறிந்துள்ளோம்.

சட்டமும் ஒழுங்கும் மாகாண சபையின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக அரசியல் யாப்பு கூறினாலும் எமது கட்டுப்பாட்டுக்குள் அவை இல்லை என்பதே உண்மை. பல சட்ட, ஒழுங்கு சம்பந்தமான நடவடிக்கைகள் பற்றிய எமது கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதே உண்மையாகும்.

மேலும் போதைப் பொருள் பாவனைக்கும் மகளிர் மீதான குற்றச் செயல்களின் அதிகரிப்புக்கும் இடையில் இருக்குந் தொடர்பை நாங்கள் முழுமையாக ஆராய்ந்து உடனடியாக ஆவன செய்ய வேண்டிய ஒரு பொறுப்பில் நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம்.

முன்னாள் பெண் போராளிகள் தொடர்பாகவும் நாம் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இன விடுதலைக் காக தமது வாழ்நாளையே அர்ப்பணஞ் செய்த போராளிகளின் எதிர்கால சுபீட்சத்திற்காக நாம் தொடர்ந்து பாடுபடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# அரசியலில் வட பகுதி பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசியலில் வட பகுதி பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான சூழல் விரைவில் ஏற்படுத்தப்படும் என சிறுவர் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

யுத்தத்தினால் பெரும் அழிவுகளைச் சந்தித்த பெண்கள் வாழும் எமது பிரதேசத்தில் இவ்வாறான சர்வதேச மகளிர் தின நிகழ்வு நடத்தப்படுகின்றமை உண்மையிலேயே வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். யுத்தத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெண்கள் பெரும் பாதிப்புகளை சந்தித்திருந்தனர்.

இவ்வாறு யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளான பெண்கள் இன்றும் அந்தப் பாதிப்பிலிருந்து மீள முடியாது திண்டாடி வருகின்றனர்.

வடக்கிலும் கிழக்கிலும் யுத்தத்தினால் 90 ஆயிரம் பெண்கள் வரையில் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தில் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் விதவைகளாகியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 49 ஆயிரம் பேர்வரையில் விதவைகளாக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இந்த 90 ஆயிரம் பேரில் 12 ஆயிரம் பேர் வரையில் 40 வயதுக்குட்பட்ட இளம் விதவைகள் என கணக்கிடப்பட்டுள்ளது.

இவர்களில் 8ஆயிரம் பேர் சராசரியாக 3 பிள்ளைகளுடன் கணவனின்றி வாழ்ந்து வருகின்றனர். வடக்கில் மாவட்ட மட்டத்தில் நாம் விதவைகளின் எண்ணிக்கையை நோக்கினால் யாழ்.மாவட்டத்தில் 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் யுத்தத்தினால் விதவைகளாகியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 170 பேர் வரையிலும் வவுனியாவில் 4 ஆயிரம் பேர் வரையிலும் மன்னாரில் 4ஆயிரம் பேர் வரையிலும் விதவைகளாக மாற்றப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு விதவைகளாக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் செயலாற்ற வேண்டியுள்ளது. யுத்தத்தினால் தமது பிள்ளைகளையும் உறவுகளையும் இழந்த பெண்கள் இன்றும் அவர்கள் மீண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்,யுவதிகள் கடத்திச் செல்லப்பட்டனர். இதனைவிட சரணடைந்தவர்கள், கைது செய்யப்பட்டவர்களும் காணாமற் போயுள்ளனர். இவ்வாறு காணாமற் போன தமது பிள்ளைகளையும் உறவுகளையும் வடக்கு கிழக்கிலுள்ள தாய்மார்கள் இன்னமும் தேடி வருகின்றனர். காணாமற்போனோர் பிரச்சினைக்கும் இன்னமும் உரிய தீர்வு காணப்படவில்லை.

இதேபோல் சிறைகளில் வாடும் தமது பிள்ளைகள் மற்றும் கணவன்மார் விரைவில் விடுதலையாவார்கள் என்ற எதிர்பார்ப்பில் தாய்மாரும் மனைவிமாரும் ஏக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது ஏக்கங்களுக்கும் தீர்வு காண வேண்டியுள்ளது.

யுத்தத்தின்போது கைது செய்யப்பட்ட, சரணடைந்த முன்னாள் பெண் போராளிகளும் புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களும் பல்வேறு விதமான பிரச்சினைகளை எதிர்கொண்டே வருகின்றனர். பெண் போராளிகள் புனர்வாழ்வின் பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்ட போதிலும் அவர்கள் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் பலர் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் எமது பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

பெருமளவான பெண்கள் மன நலப்பாதிப்புக்கு உள்ளாக்கியிருக்கின்றனர். போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் பிரச்சினைகளில் உரிய கவனம்செலுத்தாவிடின் அது அரசியல் சமூக பொருளாதார ரீதியிலும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி விடும்.

வடமாகாண சபையும் மத்திய அரசாங்கமும் ஒன்றிணைந்து இந்த விடயங்களில் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். இதன்மூலமே யுத்தப் பாதிப்புக்குள்ளான எமது தாய்மார் சகோதர சகோதரிகளின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யக்கூடிய நிலை உருவாகும்.

2014 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் 2008 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 2015ஆம் ஆண்டு 1854 சம்பவங்களுக்கு மேல் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டும் கடந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் பல சம்பவங்கள் இடம்பெற்று விட்டன.

எனவே பெண்கள் மீதான வன்முறைகளை இல்லாதொழித்து அவர்களின் பாதுகாப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரம் தொடர்பில் வடமாகாண சபை எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசாங்கத்தின் சார்பில் பூர்ண ஒத்துழைப்புக்களைப் பெற்றுத் தருவதற்கு என்னாலான சகல நடவடிக்கைகளையும் எடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ஐ.எஸ்.தீவிரவாதிகள் 22,000 பேரின் இரகசியத் தகவல்கள் கசிந்துள்ளன

(லண்டன்)

சிரியா மற்றும் ஈராக்கின் சில பகுதிகளை பிடித்து இஸ்லாமிய அரசாக அறிவித்துள்ள ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கி வருகிறது. ஐ.எஸ்.தீவிரவாதிகள் மீது அமெரிக்க கூட்டுப்படைகள் வான்வழி தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

தற்போது ஐ.எஸ். அமைப்பில் உள்ள 22 ஆயிரம் தீவிரவாதிகள் ஐ.எஸ். அமைப்பில் சேரும் போது தனிப்பட்ட தகவல்களை நிரப்பி கொடுத்த படிவங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் சேருவதற்கு 23 கேள்விகள் கொண்ட மனுவை அவர்கள் நிரப்ப வேண்டும். அதில் பிறந்த திகதி, திருமண விபரம், முன்பு வேலை பார்த்த விபரங்கள் மற்றும் உறவினர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் தனிப்பட்ட தகவல்கள் குறித்து கேட்கப்பட்டு இருக்கும். ஐ.எஸ். அமைப்பில் அதிருப்தியில் உள்ளவர்கள் இந்த 23 கேள்விகள் அடங்கிய 22 ஆயிரம் தீவிரவாதிகளின் படிவங்களை திருடி வெளியிட்டு உள்ளனர். இந்த வருடத்தின் முக்கிய திருப்பு முனையாக இது அமையும் என எம்16 புலனாய்வுத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளுக்கு எதிராக போராடி வரும் மேற்கத்தேய பாதுகாப்பு படைகளுக்கு இந்த தகவல்கள் புதையலாக அமைந்துள்ளது.

இந்தத் தகவல்களில் தீவிரவாதகளின் பெயர், முகவரி, தொலைபேசி எண்கள் மற்றும் குடும்ப தொடரபுகள் ஆகியவைகளை கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 2தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

## காஷ்மீரில் தொடரும் மோதல்

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பந்தி போரா பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் லஷ்கர் இ தொய்பா இயக்கத்தை சேர்ந்த 2 தீவிரவாதிகள் பலியானார்கள்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பந்தி போரா மாவட்டத்தில் உள்ள ஹாஜின் பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் உள்ளதாக பாதுகாப்பு படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. அதனை தொடர்ந்து தீவிரவாதிகள் பதுங்கி இருந்த பகுதியை இந்திய இராணுவத்தினர் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினர். தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் நடந்த துப்பாக்கி சண்டையில் 2 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

# மகாமக குளத்தில் இதுவரை 60 இலட்சம் பக்தர்கள் நீராடல்





(பட்டீஸ்வரம் )

தென்னகத்தின் கும்பமேளா என அழைக்கப்படும் கும்பகோணம் மகாமக விழா 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும். இந்த ஆண்டு மகாமக விழா கடந்த மாதம் 13ஆம் திகதி கொடி யேற்றத்துடன் தொடங்கியது. அன்று முதல் புனித நீராடலாம் என மடாதிபதிகள் மற்றும் அற நிலையத துறையினர் அறிவித்து இருந்தனர். இதனால் கொடியேற்றம் முதல் பக்தர்கள் மகா மக குளத்தில் புனித நீராட தொடங்கினார்கள். முதல் நாளில் ஒன்றரை இலட்சம் பக்தர்கள் புனித நீராடி னர். அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் பக்தர்கள் நீராடிவந்தனர். கடந்த மாதம் 22ஆம் திகதி விழா வின் முக்கிய நிகழ்ச்சியான கீர்த்த வாரி நடைபெற்றது. அன்று 15 இலட்சம் பக்தர்கள் ஒரே நாளில் நீராடினார்கள்.

இந்நிலையில் நேற்று வரை 60 இலட்சம் பக்தர்கள் நீராடியுள்ளனர். (இ-5)

# வெள்ளத்தில் தத்தளிக்கும் ஐக்கிய அரபு நாடுகள்





ஐக்கிய அரபு அமீரகத்தில் நேற்று முன்தினம் சூறாவளி காற்றுடன் பெய்த பலத்த மழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கிப்போனது. அமீரகத்தில் சில பகுதிகளிலும், ஓமான் நாட்டிலும் நேற்று முன்தினம் மழை பெய்ய தொடங்கியது.

அடுத்த 3 நாட்களுக்கு இந்த மழை நீடிக்கும் என்று வானிலை மையம் அறிவித்து இருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலையில் இருந்து அமீரகம் முழுவதும் சூறாவளிக் காற்றுடன் மழை பெய்தது.

அபுதாபி, டுபாய், சார்ஜா, அஜ்மான், உம் அல் குவைன், ராசல் கைமா, புஜேரா உள்ளிட்ட அமீரகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்தது.

இதன் காரணமாக காலையில் அலுவலகம் மற்றும் பாடசாலைகளுக்குச் செல்வோர் மிகவும் சிரமப்பட்டனர். பகல் நேரமே இரவு போல காட்சியளித்தது. இதன் காரணமாக விமான நிலையங்கள், வீதிகள், ஸ்தம்பித்தன. மழையுடன் சேர்ந்து 130 கி.மீ. வேகத்தில் புயல் காற்று வீசியது. மழை காரணமாக நேற்று முன்தினம் நண்பகலுக்குப் பின்னர் ஒரு சில விமான சேவைகளும் இரத்து செய்யப்பட்டன.

எனினும் ஒரு சில மணி நேரத்துக்கு பின்னர் விமான சேவை வழக்கமாக தொடங்கியது. அபுதாபியில் நேற்று முன்தினம் ஒரு நாள் மட்டும் 110 மி.மீ. மழை பதிவானது. டுபாயில் பெய்த மழையினால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக காணப்பட்டது.

மேலும் நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 253 விபத்துகள் ஏற்பட்டுள்ளன என தகவல் வெளியாகியுள்ளது. மழை காரணமாக அமீரகத்தின் அனைத்து பாடசாலைகளுக்கும் நேற்று விடுமுறை விடப்படுவதாக அமீரக கல்வி அமைச்சர் ஹுசைன் அல் ஹம்மாதி அறிவிப்பு வெளியிட்டார். பல்வேறு பகுதிகளிலும் நேற்று வானம் தெளிவாக இருந்தாலும் போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## மங்கையர்க்கரசி மறைவுக்கு கலைஞர் கருணாநிதி இரங்கல்

(சென்னை)

இலங்கைத் தமிழ் அரசியலில் பெரும்பங்காற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் காலமானதையிட்டு திமுக தலைவர் கலைஞர் கருணாநிதி இரங்கல் வெளியிட்டுள்ளார். அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில்,

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரும், இலங்கையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அமிர்தலிங்கத்தின் அன்பு துணைவியார் மங்கையர்க்கரசி, நேற்று முன்தினம் லண்டன் மாநகரில் மறைந்து விட்டார் என்ற செய்தியினை நேற்று காலையில் திராவிடர் கழகத் தலைவர் இளவல் கி. வீரமணி தொலைபேசி வாயிலாகத் தெரிவித்த போது அதிர்ச்சியடைந்தேன்.



கணவரும் மனைவியுமாக அந்தக் காலத்தில் என்னைச் சந்தித்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதெல்லாம் நினைவுக்கு வருகிறது. நாவலர் அமிர்தலிங்கம் இலங்கையில் கொல்லப்பட்ட பிறகு, அம்மையார் அந்த நாட்டிலிருந்தே வெளியேறி தமிழகத்திலும், லண்டனிலும் வாழ்ந்து வந்தார்.

தமிழகத்திற்கு வரும்போதெல்லாம் என்னைச் சந்தித்து உடல் நலம் விசாரித்துச் செல்வார். அம்மையாரின் மறைவுக்காக அவருடைய குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்." (இ-5)

## மனைவி - மகன் - மகள் கழுத்தை அறுத்து கொலை செய்த தொழிலதிபர் தற்கொலை

சென்னை கொத்தவால் சாவடி கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் வசித்து வந்தவர் தேவேந்திரகுமார் (வயது-48). தொழிலதிபரான இவரது மனைவி தீக்ஷியா (வயது38). மகள் ஷெர்பி (வயது 15). மகன் மானஷ் (வயது 12). இவர்களுடன் தேவேந்திரகுமாரின் தாய் ஷோபா தேவியும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர்.

வெளிநாட்டில் வேலை செய்து வந்த தேவேந்திர குமார் சில மாதங்களுக்கு முன்னர் தான் சென்னை திரும்பியுள்ளார். இதில் சில நேரங்கள் நல்ல வருவாய் கிடைத்துள்ளது. அதே நேரத்தில் நட்டமும் ஏற்பட்டுள்ளது. இதனால் கடுமையான மன உளைச்சலில் இருந்து வந்தார்.

நேற்று முன்தினம் தேவேந்திர குமார் மனைவி, குழந்தைகளை அழைத்துக் கொண்டு அருகில் உள்ள திரையரங்கிற்கு இரவு காட்சி சினிமாவுக்கு சென்றார். படம் முடிந்து நள்ளிரவில் வீடு திரும்பிய அவர்கள் தூங்க சென்றனர். மகள் ஷெர்பி, மகன் மானஷ் ஆகியோர் தனி அறையில் படுத்து தூங்கினர். தேவேந்திரகுமார் மனைவி தீக்ஷியாவுடன் இன்னொரு அறையில் உறங்கிக் கொணடிருந்தார். தாய் ஷோபாதேவியும் தனியாக தூங்கினார். நேற்று அதிகாலை 4 மணியளவில் வீட்டில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தது. யாரோ நடமாடுவது போல சத்தம் கேட்டது. இதையடுத்து ஷோபாதேவி கண் விழித்து தனது அறையில் இருந்து வெளியே வந்தார்.

அப்போது அவர் கண்ட காட்சி திடுக்கிட வைத்தது. தேவேந்திர குமார் கையில் கத்தியுடன் வீட்டுக்குள் அங்குமிங்கும் வெறி பிடித்தவரை போல சுற்றிக் கொண்டே இருந்தார். இதனால் ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போகிறது என்பதை உணர்ந்த அவர் கையில் இருந்த கத்தியை பறிக்க முயன்றார். ஆனால் ஷோபாதேவியின் முதுமை அதற்கு கைகொடுக்கவில்லை. தேவேந்திர குமார், தாய் ஷோபாதேவியை தள்ளி விட்டு மின்னல் வேகத்தில் குழந்தைகள் தூங்கிக் கொண்டிருந்த அறைக்குள் புகுந்தார்.

மகள், மகன் என்றும் பாராமல் தேவேந்திரகுமார் அவர்களின் கழுத்தை கத்தியால் அறுத்தார். இதில் இரத்தம் பாய்ந்து மெத்தையில் பெருக்கெடுத்து ஓடியது. குழந்தைகள் இருவரும் சிறிது நேரத்திலேயே துடிதுடித்து பலியானார்கள். அதன் பின்னரும் தேவேந்திர குமாரின் ஆவேசம் அடங்கவில்லை. அந்த அறையில் இருந்து வெளியே வந்த அவர் பக்கத்து அறைக்கு சென்றார். மனைவி தீக்ஷயாவையும் கழுத்தை அறுத்து கொன்றார். அவரும் கட்டிலிலேயே உயிரிழந்தார்.

பின்னர் தன்னை தானே கழுத்தை அறுத்துக் கொண்டு தேவேந்திரகுமாரும் தற்கொலை செய்து கொண்டார். மகனின் இந்த கொலை வெறியாட்டத்தை தடுக்க முடியாமல் தாய் ஷோபாதேவி கூச்சல் போட்டுக் கொண்டே இருந்தார். ஆனால் அதிகாலை நேரம் என்பதால் அவரது சத்தத்தை கேட்டு யாரும் கண் விழிக்கவில்லை. எல்லாம் முடிந்து போன பின்னரே அக்கம்பக்கத்தினர் திரண்டு வந்தனர்.

கொத்தவால் சாவடி பொலிஸார் விரைந்து சென்று 4 பேரின் உடலையும் சென்னை ராஜீவ் காந்தி அரசு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (இ-5)

# தேடப்பட்ட கொலையாளிகள் கைது



கழுகு ஒன்றை மிகவும் மோசமாக துன்புறுத்தி கொலை செய்த கொலையாளிகள் தொடர்பில் செய்திகள் பரவலாக வெளிவந்த நிலையில் அந்த கொலையாளிகளில் இருவரை நேற்று முற்பகல் ஹபரா துவை பொலிஸார் கைது செய்துள்ள னர்.

மேலும், குறித்த சந்தேக நபர்களை காலி வஞ்சாவலை பிரதேசத்தில் வைத்து கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கைதான நபர்கள் வழங்கிய தகவல்களுக்கு அமைய இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் மேலும் பலரை கைது செய்வதற்கு தீர்மானித்திருப்பதாக ஹபராதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கழுகு ஒன்றின் தோலை உயிருடன் உறித்து கொடூரமாக கொன்றவர்களில் இருவர் நேற்று முன்தினம் ஹபராதுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு இவர்கள் பொலிஸாரிடம் வாக்கு மூலமும் வழங்கியுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களின் வாக்குமூலத்திற்கு அமைய தாம உண்பதற்காகவே குறித்த கழுகை கொன்றதாகவும், இதன்போது கழுகின் வயிற்றில் பாம்பு ஒன்று இருந்ததால் தாம் அதை உண்ணவில்லை என்றும் சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-10.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.85 | 146.78 |
| பவுண்ட் | பிரிட்டன் | 202.01 | 209.20 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 155.88 | 162.11 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.16 | 148.10 |
| டொலர் | கனடா | 106.99 | 111.33 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 105.75 | 110.69 |
| டொலர் | சிங்கப்பூர் | 102.83 | 106.77 |
| ரூபா | இந்தியா | 2.1426 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.9806 |
| குவைத் | டினார் | 478.9527 |
| ஓமான் | ரியால் | 374.1649 |
| கட்டார் | ரியால் | 39.5487 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3992 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.2068 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சுன்னாகம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார் மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 100 | 65 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 130 | 150 | 200 | 100 |
| தக்காளி | 40 | 30 | 20 | 30 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 60 | 40 |
| கோவா | 40 | 40 | 40 | 40 | 80 | 50 |
| கரட் | 80 | 100 | 100 | 80 | 160 | 100 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 | 80 | 60 |
| புடோல் | 50 | 30 | 30 | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 100 | 60 | 80 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 65 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 180 | 100 | 120 | 120-150 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 40 | 70 | 50 | 120 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 60 | 100 | 40 | 60 | 60 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 70 | 50 | 80 | 70 |
| கறிமிளகாய் | 120 | 100 | 100 | 120-140 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 200 | 200-300 | 400 | 400 |
| போஞ்சி | 80 | 100 | 70 | 100 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 60 | 60 | 100 | 80 |
| கீரை – 1பிடி | 40 | 10 | 15 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 120 | 80 | 80 | 140 | 80 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-35 | 50 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 160 | 200 | 100 | 130 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 60 | 100 | 60 | 120 | 60 |
| முள்ளங்கி | 40 | 40 | 20 | 40 | 80 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 150 | •30 | 35 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இந்திய விமானங்கள் மூலம் தமிழர்களுக்கு உணவுப்பொட்டலங்கள் 128

...இலங்கை இராணுவத்தின் கொடூரமான தாக்குதலால் அவதிப்படும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு உதவ உணவுப் பொருட்களுடனும் மருந்துகளுடனும் இராமேஸ்வரத்திலிருந்து சென்ற 19 இந்திய படகுகளை இலங்கைக் கடற்படை தடுத்து நிறுத்தியது. இதன் காரணமாக அந்த 19 படகுகளும் இராமேஸ்வரத்துக்கு திரும்பி விட்டன.

**பதிலடி**

இலங்கையின் இந்தப் போக்குக்கு இந்தியா பதிலடி கொடுக்க முடிவு செய்தது. இதன்படி 04.06.1987 அன்று மாலை இந்திய விமானப் படைக்கு சொந்தமான போர் விமானங்கள் .பெங்களூரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நேரடியாக பறந்து சென்று பட்டினியால் வாடும் தமிழர்களுக்கு உணவுப் பொட்டலங்களைப் போட்டன.

**பாதுகாப்பு**

சரியாக மாலை 04 மணிக்கு விமானப்படைக்கு சொந்தமான 5 விமானங்கள் உணவுப் பொருட்கள் உயிர் காக்கும் மருந்துகளுடன் யாழ்ப்பாணத்தை நோக்கிப் பறந்து சென்றன. இந்த விமானங்களில் 25 தொன் உணவுப் பொருட்கள் ஏற்றப்பட்டிருந்தன. இந்த விமானங்களுக்கு பாதுகாப்பாக மிராஜ் ரகத்தைச் சேர்ந்த 4 போர் விமானங்கள் கூடவே பறந்து சென்றன. அவை யாழ்ப்பாணப் பகுதிக்கு பறந்து சென்று அங்கு பாரசூட் மூலம் உணவுப் பொருட்களையும் உணவுப் பொட்டலங்களையும் போட்டன.

**எச்சரிக்கை**

இது குறித்து வெளிநாட்டு இலாகா அதிகாரி ஒருவர் நிருபர்களிடம் கூறியதாவது, இந்திய விமானங்கள் உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு செல்வது பற்றி ஏற்கனவே வெளிநாட்டு இலாகா இராஜாங்க மந்திரி நட்வர்சிங்க டில்லியிலுள்ள இலங்கைத் தூதர் திலகரத்னாவிடம் தெரிவித்து விட்டார்.

இந்திய விமானங்களுக்கு பாதுகாப்பாகத்தான் போர் விமானங்கள் அனுப்பப்பட்டன. உணவுப் பொருட்களை ஏற்றிச்செல்லும் விமானங்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை உருவானால் போர் விமானங்களைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று இலங்கைத் தூதரிடம் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

**அமைதி**

இந்தியா மனிதாபிமானத்துடன் முதலில் அமைதியான முறையில் யாழ்ப்பாணத்திற்கு உணவுப்பொருட்களை படகுகளில் அனுப்பு ஏற்பாடு செய்தது.

ஆனால் இலங்கை அரசு இதை ஏற்றுக்கொள்ளவில்லை. வேறு வழி இல்லாததால் விமானங்கள் மூலம் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டன. பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையில் மத்திய மந்திரி சபையின் அரசியல் விவகாரக்குழு கூடி இந்த முடிவை எடுத்தது.

மேற்கண்டவாறு அந்த அதிகாரி கூறினார்,

**விமானங்கள் திரும்பின**

04 மணிக்கு புறப்பட்ட இந்திய போர் விமானங்கள் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்களைப்போட்டு விட்டு மாலை 05.30 மணியளவில் மீண்டும் பெங்களூர் விமானத் தளத்திற்கு வெற்றிகரமாக திரும்பிவிட்டன.

இந்தியாவின் துணிச்சலான இந்த முயற்சியை பல தலைவர்கள் பாராட்டினார்கள்.

**மக்கள் மகிழ்ச்சி**

இந்திய விமானங்கள் யாழ்ப்பாணப்பகுதியில் தாழ்வாகப் பறந்தபோது முதலில் இலங்கைத் தமிழர்கள் பயந்துபோய் அங்குமிங்கும் மிரண்டு ஓடினார்கள்.

ஆனால் ஒரு சில வினாடிகளில் அவை சிங்கள விமானங்கள் அல்ல, உதவி செய்ய வந்த இந்திய விமானங்கள் என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர்.

அதே நேரத்தில் இந்திய விமானங்களில் இருந்து உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டதும், அங்குள்ள தமிழர்கள் மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தனர். சிலர் கையை அசைத்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

**எதிர்ப்பு இல்லை**

சாதாரண படகுகளில் உணவுப் பொருட்களைக் கொண்டு சென்ற போது சிங்களக் கப்பல் படையினர் மிரட்டினார்கள். அதே நேரத்தில் இந்திய போர் விமானங்கள் பறந்து சென்றபோது சிங்கள விமானப்படையினர் பயந்துபோய் எதுவும் செய்யவில்லை. மௌனமாக இருந்து விட்டனர்.

இந்திய போர் விமானங்கள் யாழ்ப்பாணப்பகுதியில் பறந்துசென்றதை அங்குள்ள சிங்கள இராணுவத்தினர் இலங்கை அரசுக்கு அறிவித்தனர். எனினும் இலங்கை அரசு இது பற்றி வாய் திறக்கவில்லை.

இந்தியப்போர் விமானங்களில் வெளிநாட்டு நிருபர்கள் உட்பட 35 பத்திரிகை நிருபர்களும் சென்றனர்.

உணவுப்பொட்டலங்கள் போடப்பட்டதை அவர்கள் நேரில் பார்த்தனர்.

**இலங்கை பணிந்தது**

இந்தியாவின் இந்த நடவடிக்கை காரணமாக இலங்கை அரசு பணியத் தொடங்கியது.

முதல் கட்டமாக மண்ணெண்ணெய், பெற்றோர் போன்ற பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு தாராளமாக எடுத்து செல்லலாம் என்று இலங்கை அரசு அறிவித்தது. இதுவரை இருந்த தடை உத்தரவு 04.06.1987 அன்று திடீரென நீக்கப்பட்டது.



(தொடரும்)

# பசிலுக்கு கட்சிக்குள் முன்னுரிமை வழங்க இடமளிக்கமாட்டோம்

## அமைச்சர் சொய்சா தெரிவிப்பு



(கொழும்பு)

**மகந்த, நாமலுக்கு கட்சியில் முன்னுரிமை வழங்கபபடுமாயின் அதனை ஏற்றுக்கொள்வோம். ஆனால், பசில் ராஜபக்ஷவுக்கு கட்சிக்குள் முன்னுரிமை வழங்க நாங்கள் இடமளிக்கமாட்டோம். மீண்டும் குடும்ப ஆட்சிக்கு இடமளிக்கமுடியாது என்றும் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கட்சித் தீர்மானங்களுக்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டாலும் அதனை நடைமுறையில் செயற்படுத்த முடியாது.

நாங்கள் சண்டை பிடித்துக் கொண்டாலும் தேர்தலில் ஒன்றாக இணைந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகவே செயற்படுவோம்.

மகந்த ராஜபக்ஷ கட்சிக்கு எதிராக கருத்துத் தெரிவிப்பதற்காக நாங்கள் எதனையும் கூற முடியாது. அவரது ஆட்சிக்காலத்தில் இல்லாத விமர்சிக்கும் சுதந்திரம் இன்று உள்ளது. அதனை அவரும் அனுபவிக்கின்றார்.

அதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடனோ எமக்கு திருமண பந்த உறவு கிடையாது எனறும், கட்சியின் தேவை, நோக்கங்களை நிறைவேற்றிக்கொளளவே அரசுடன் இணைந்தோம் என்றும், அதனை நிறைவேற்றிக் கொண்ட பின்னர் அரசை விட்டு வெளியேற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகவே உள்ளது என்றும் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா மேலும் தெரிவித்தார். (இ-5)

## தேரரின் கைது அரசின் சூழ்ச்சி

### விமல் கொதிப்பு

வில்பத்துக் காடழிப்பை மேற்கொண்ட அமைச்சரின் முன்பாக சட்டம் செயலிழந்து விட்டதா? என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கேள்வியெழுப்பியுள்ளார்.

சட்டவிரோத யானை வளர்ப்பு தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜாதிக ஹெல உறுமய வின்முக்கியஸ்தருமான உடுவே தம்மாலோக தேரர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து சபாநாயகரின் அனுமதியுடன் நாடாளுமன்றத்தில் விசேட கவனயீர்ப்பு உரையொன்றை நிகழ்த்திய போது விமல் வீரவன்ச உடுவே தம்மாலோக தேரரின் கைது அரசாங்கத்தின் சூழ்ச்சி என குற்றம் சாட்டியுள்ளார்.

இதன் போது தொடர்ந்தும கருத்து தெரிவித்த அவர், நாட்டில் வில்பத்துக் காடழிப்பு போன்று காடுகளை அழிக்கும் அமைச்சர்கள் முன்னால் சட்டம் செயலிழந்து நிற்கின்றது என கூறியுள்ளார்.

எனினும், அப்பாவி தேரர்கள் விடயத்தில் நீதித்துறை கடுமையாக நடந்து கொள்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உடுவே தம்மாலோக தேரர் வெறுமனே ஒரு தேரர் மட்டுமன்றி இந்நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒருவர் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, பொலிஸாருக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுக்கு தெரியாமல் தேரர் கைது செய்யப்பட்டிருக்க முடியாது என விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மைத்திரியின் காலம் சிறந்தவாய்ப்பு

### முன்னாள் சமாதான தூதுவர் சொல்ஹெய்ம் கருத்து



இலங்கையின்தலைமைப் பொறுப்பில் மைத்திரிபால சிறிசேன இருக்கின்ற இந்த தருணத்தில் இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கான சிறந்த வாய்ப்புள்ளதாக நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் விசேட சமாதான பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஜனநாயகதின் சக்தி மிகவும் வலிமையானது, இதன் காரணமாகவே அதனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அதிகாரத்திலிருந்து அகற்றமுடிந்தது. யுத்தத்திற்கு பின்னர் அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறை குறித்து அவர் உறுதியளித்த போதிலும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இரு முக்கிய தடைகள் காணப்பட்டன. இலங்கையின் இரு பிரதான அரசியற்கட்சிகளாலும் இணைந்து செயற்பட முடியவில்லை, ஒரு கட்சி முன்னோக்கி செல்வதற்கு சிந்தித்தவேளை மற்றைய கட்சி இதனை கருவியாக பயன்படுத்தி அரசியல் வெற்றிகளை பெரும் அச்சம் எனக் கொளவது வழமையாககாணப்பட்டது.

இரண்டாவது விடுதலைப் புலிகளின் தலைவர் வன்முறைகளை நம்பியிருந்தது. அரசியற்பிரச்சினைகளிற்கு இராணுவதீர்வு உள்ளது என அவர் முழுமையாக நம்பினார், இது அரசியலில் புத்திசாலித்தனமல்ல. உலக நாடுகளில் விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படவேண்டும் என்றால் படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும் என நோர்வே சமாதான குழுவினர் காலத்திற்கு காலம் விடுதலைப்புலிகளிற்கு தெரிவித்து வந்தனர் என எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். (செ-12)

## முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் அமிரின் மனைவி மங்கையர்க்கரசி காலமானார்

(கொழும்பு)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான அப்பாப்பிளளை அமிர்தலிங்கம் அவர்களின் மனைவி திருமதி மாங்கையர்ககரசி (வயது-83) அவர்கள் நேறறு லண்டனில் காலமானார்.



லண்டனில் தனது பிள்ளைகளுடன் வசித்துவந்த அவர் நேற்று முன்தினம் திடீரென்று உடல்நலம் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று இயற்கை எய்தினார்.

தமிழரசுக்கட்சியில் முக்கிய தலைவராக இருந்தஅமிர்தலிங்கம் செயற்பட்டு வந்த காலம் முதல் அவரின் அரசியல் செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடு காட்டி அவருடன் இணைந்து செயற்பட்டு வந்தவர் மங்கையர்க்கரசி என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### மற்றவர்களின் மறுபக்கம்

நாய் நன்றியுள்ள பிராணிதான். ஆனால் அதன் வாலைக் கிள்ளுபவர்களை அது கடிக்காமல் விடாது. கிள்ளியவன் தொட்டுத் தூக்கி வளர்த்த எசமானனானாலும் சரி.

உங்களிடம் நெருங்கிப் பழகிக் கொண்டிருப்பவர்கள் உங்களுக்கு மிக நல்லவர்களாகத் தெரியலாம். ஆனால், அவர்களது மறுபக்கம் பயங்கரமானது; சுயநலமிக்கது; ஏமாற்றக் காத்திருப்பது; கொடுமையும் கோபமும் நிறைந்தது.

மற்றவர்களிடம் வேண்டுமென்றே ஒரு பெரிய உதவியைக் கேளுங்கள். அல்லது அவர்களது வேண்டுகோளை வேண்டுமென்றே நிராகரியுங்கள்.

அவர்களைக் கோபித்துக் கொள்ளுங்கள்; அல்லது கோபமூட்டுங்கள்.

இப்போது அவர்களைப் பாருங்கள். மெல்லச் சுயரூபத்தை வெளிப்படுத்தித் தங்களது உண்மையான நிறத்தை உங்களுக்குக் காட்ட ஆரம்பிப்பார்கள்.

அப்படியானால் இவ்வளவு நாட்கள் அவர்கள் காட்டிய மரியாதை, அன்பு, பிரியமெல்லாம்?

போலியானவை, தற்காலிகமானவை என்று சொல்லலாம்.

புலித்தோல் போர்த்திய பசுக்களைப் போன்றவை என்பதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

மனித எண்ணங்கள் விகாரமானவை. வக்கிரம் பிடித்தவை, புற்றுநோய்க் கிருமிகள் போன்று இரக்கமற்றவை. புழுத்து வடியும் பூச்சிகளைக் காட்டிலும அருவருப்பானவை. இத்தகைய கொடிய உருவங்களை உள்ளடக்கி உறவு என்றும் நட்பு என்றும் விதவிதமான ஆடைகளை அணிந்து கொண்டு போலியான காட்சிகளை மற்றவர்கள் தோற்றுவிக்கிறார்கள்.

இத்தகைய தடைகளை அணிந்துகொண்டு அவர்கள் நம்மை அணுகுவதால் நமக்கு அதிர்ச்சி இருப்பதில்லை. முன்பின் தெரியாதவர்கள் அல்லது வேண்டாதவர்கள் முன் இத்தகைய தடைகளை அவர்கள் களைந்து எறிவதால், அவர்கள் தாக்குதலடைகிறார்கள்.

எதிரியை ஈவு இரக்கமின்றிச் சுட்டு வீழ்த்தும் ஓர் இராணுவ வீரன் தன் மனைவி மக்களிடம் அன்பு காட்டுவது மேற்கூறிய அடிப்படையிலேயே ஆகும்.

மனிதனை மனிதனாகவே காண்பதும் அவனை மனிதத் தன்மையுடன் நடந்து கொள்ள வைப்பதும் நம்மிடம்தான் இருக்கிறது.

எப்படி?

மற்றவர்களது அடிப்படையான உணர்வுகளை நாம் சீண்டிவிடாமல் இருக்க வேண்டும். மாறாக அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடித்துக் காரியங்களைச் சாதிக்க வேண்டும்.

அதோடு, அவர்களுடைய பொல்லாத உணர்வுகளுக்குத் தீனியிட்டு வளர்க்கும் செயலைச் செய்யாதிருக்க வேண்டும். அதாவது, தவறுகளைச் செய்யக்கூடிய சந்தர்ப்பங்களை நாமே அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்காதிருக்க வேண்டும்.

ஏற்படுத்திக் கொடுத்தோமானால், அவர்கள் மிருகமாகத்தான் மாறுவார்கள்.

மின்சாரத்தைப் பாதுகாப்புடன் பயன்படுத்திக் கொள்வதை விட்டுவிட்டு அதைத் தொட்டுப் பார்த்து அதன் தன்மை என்ன என்பதை அறிய முயலும் முயற்சியைப் போன்றதே, மற்றவர்களின் மறுபக்கத்தைச் சோதிப்பது.

அது பயங்கரமானது. இதில் எள்ளத்தனையும் உங்களுக்கு ஐயம் வேண்டாம்.

இதை விட்டுவிட்டு, மற்றவர்கள் இப்படி நடந்து கொள்வார்கள் என நான் எதிர்பார்க்கவே இல்லை என்று புலம்புவது அறிவீனம்!

**லேனா தமிழ்வாணன்**




# நொண்டிக் குதிரை!

காட்டில் அடர்ந்த புல்வெளியில் ஏராளமான குதிரைகள் வசித்து வந்தன. அந்தக் குதிரைகளின் கூட்டத்தில் நொண்டிக் குதிரை ஒன்றும் இருந்தது. மற்றக் குதிரைகள் எல்லாம் அந்த நொண்டிக் குதிரையை மட்டமாகவே நினைத்தன.

எல்லாக் குதிரைகளும் அந்தப் புல்வெளியில் ஓடியாடி விளையாடுகின்ற நேரத்தில் அந்த நொண்டிக் குதிரையானது அமைதியுடன் ஒரிடத்தில் படுத்திருக்கும். அதனால், மற்ற குதிரைகள் எல்லாம் அதனை சோமபேறி என்று கேலி செய்தன.

நண்பர்கள் எல்லாம் தன்னைக் கேலி செய்கிறார்களே என்று நொண்டிக் குதிரைக்கு சற்று வருத்தமாகயிருந்தது. நண்பர்கள் எல்லாம் அறியாமையின் காரணமாக இப்படிக் கேலி செய்கின்றனர். அதனால் நாம் அவர்களின் மீது கோபப்படுவது நல்லதல்ல... என்று முடிவு செய்தது அந்த நொண



டிக் குதிரை.

ஒருநாள் - சிங்கம் ஒன்று அந்தப் புல்தரையில் பக்கமாக வந்தது. அந்த இடத்தில் ஏராளமான குதிரைகள் புற்களை மேய்ந்தபடி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தது.

“ஆஹா, இந்த இடத்தில் ஏராளமான குதிரைகள் நிற்கின்றதே... இந்தக் குதிரைகள் எல்லாம் நன்கு கொழுத்து காணப்படுகின்றன. நாம் வந்திருப்பது தெரிந்து விட்டால், இந்தக் குதிரைகள் எல்லாம் ஒரே ஓட்டமாக எங்காவது ஓடி விடும். அதனால், இந்தக் குதிரைகளுக்குத் தெரியாமல் மறைந்திருந்து நாம் இவைகளைத் தாக்க வேண்டும் என்று மனதிற்குள் நினைத்தது சிங்கம்.

புல்தரையின் ஓர் ஓரத்தில் படுத்திருந்த நொண்டிக் குதிரை, சிங்கத்தை கவனித்து விட்டது. இந்தச் சிங்கம் நம்மையும், நம் நண்பர்களையும் கவனித்து விட்டது. நிச்சயமாக இதனால் நமக்கு ஆபத்து நேரிடும். சிங்கம் அந்த இடத்தை விட்டுச் சென்ற பின்னர், உடனடியாக “இதனைப் பற்றி நம் நண்பர்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும்” என்று நினைத்தது அந்தக் குதிரை.

சிறிது நேரத்தில் சிங்கம் அந்த இடத்தை விட்டுச் சென்றது. உடனே அந்த நொண்டிக் குதிரை மற்ற குதிரைகளை நோக்கியது.

“நண்பர்களே, சற்று நேரத்திற்கு முன்னர் சிங்கராஜா மறைந்திருந்து நம்மையெல்லாம் கவனித்துச் சென்றுவிட்டார். இன்னும் ஓரிரு நாட்களில் அவரால் நமக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பிருக்கிறது. நாம் நம்மை பாதுகாத்துக் கொள்ள, உடனடியாக இந்த புல் வெளியினை விட்டு வேறு இடத்திற்குச் சென்று விட வேணடும்,” என்றது.

நொண்டிக் குதிரையின் பேச்சைக்கேட்ட மற்ற குதிரைகள் எல்லாம் சிரித்தன.

“நண்பர்களே, இந்த நொண்டிக் குதிரையின் பேச்சைக் கவனித்தீர்களா? இவன் நம்மையெல்லாம் பயம் காட்டுகின்றான். சிங்கராஜா நம்மைப் பார்த்து விட்டாராம். அதனால் நாம் இந்த இடத்தை விட்டு வேறு எங்காவது செல்ல வேண்டுமாம். கேட்பதற்கே மிகவும் வேடிக்கையாக இருக்கிறது,” என்று ஒன்றுக்குள் ஒன்று கூறியபடி சிரித்துக் கொண்டன.

“நண்பர்கள் எல்லாம் நம்மை ஏளனம் செய்கின்றார்களே, இவர்களுக்கு நான் நல்லதை சொல்ல நினைத்தேன். ஆனால், இவர்களோ என்னை ஏளனப்படுத்துகின்றனர்.

இவர்கள் எல்லாம் சிங்கத்தின் பிடியில் சிக்கிக் கொண்டால், என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. என்ன இருந்தாலும் இவர்கள் எல்லாம் எனது நண்பர்கள்தானே, இவர் களுக்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக்கொள்வது என்னுடைய கடமையல்லவா?

சிங்கராஜாவின் பிடியில் இருந்து எப்படியாவது நண்பர்களை காப்பாற்ற வேண்டும். வரப்போகிற ஆபத்தை உடனே தடுத்தாக வேண்டும், அதற்கு நாம் என்ன செய்யலாம்” என்று யோசனை செய்தது.

திடீரென அதன் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. அதனபடி அந்தக் குதிரையானது சிங்கத்தைத் தேடிச் சென்றது.

(தொடரும்)




- 1702 - முதல் ஆங்கில நாளிதழான தெ டெய்லி குராண்ட் (The Daily Courant) லண்டனில் வெளியிடப்பட்டது.
- 1801 - ரஷ்யாவின் முதலாம் பவுல் கொல்லப்பட்டான். அவனது மகன் முதலாம் அலெக்சாண்டர் மன்னனானான்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியது.
- 1897 - மேற்கு வேர்ஜீனியாவுக்கு மேலாகப் பறந்த எரிவெள்ளி ஒன்று வெடித்து சிதறியதில் சேதம் ஏற்பட்டது.
- 1902 - காங்கேசன்துறையில் இருந்து சாவகச்சேரி வரையான 21 மைல் நீள புகையிரதப் பாதை அமைக்கப்பட்டது.
- 1905 - காங்கேசன்துறை முதல் மதவாச்சி வரை புகையிரதப் பாதை அமைக்கும் பணி முடிவடைந்தது.
- 1917 - முதலாம் உலகப் போர்: பக்தாத் ஜெனரல் ஸ்டான்லி மோட் தலைமையிலான ஆங்கிலோ-இந்தியப் படைகளிடம் வீழ்ந்தது.
- 1918 - ரஷ்யாவின் தலைநகரம் பெத்ரோகிராட்டில் இருந்து மாஸ்கோவுக்கு மாறியது.
- 1931 - சோவியத் ஒன்றியத்தில் “வேலைக்கும் சோவியத் ஒன்றியத்தைப் பாதுகாக்கவும் ஆயத்தமாயிரு” என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1958 - ஐக்கிய அமெரிக்காவின் B-47 விமானம் அணுகுண்டு ஒன்றைத் தவறுதலாக வீழ்த்தியதில் தெற்குக் கரோலினாவில் பலர் காயமடைந்தனர்.
- 1985 - மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் தலைவரானார்.
- 1990 - லித்துவேனியா சோவியத்திடம் இருந்து தன்னிச்சையாக விடுதலையை அறிவித்தது.
- 1998 - திருகோணமலைத் துறைமுகத்தில் கரும்புலிகள் இலங்கையின் ரோந்துப் படகொன்றை மூழ்கடித்தனர்.
- 2007 - தென் அமெரிக்காவின் வடகிழக்கில் உள்ள கயானா விண்வெளி ஏவுதளத்தில் ஏரியன்-5 ராக்கெட் ஏவப்பட்டு வெற்றிகரமாக அது இன்சாட்-4 B என்ற இந்திய செய்மதியையும் ஸ்கைநெட்-5 A என்ற பிரித்தானியாவின் துணைக்கோளையும் சுமந்து சென்றது.
- 2011 - 2011 செண்டை நிலநடுக்கமும் ஆழிப் பேரலை யும்: சப்பானின் ஒன்சூ தீவில் வடகிழக்குப் பகுதியில் 8.9 புள்ளிகள் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டு ஆழிப்பேரலையாக உருவெடுத்தது. பெரும் எண்ணிக்கையானோர் உயிரிழந்தனர்.


**பிறப்புகள்**

- 1922- அப்துல் ரசாக் உசேன், மலேசியாவின் 2 ஆவது பிரதமர் (இ. 1976)
- 1931 - ரூப்பர்ட் மர்டாக், ஆத்திரேலிய-அமெரிக்கத் தொழிலதிபர்.
- 1952 - டக்ளஸ் ஆடம்ஸ், ஆங்கிலேய-அமெரிக்க எழுத்தாளர் (இ. 2001)

**இறப்புகள்**

- 1863 - ஜேம்சு ஒற்றம், ஆங்கிலேய இராணுவ அதிகாரி (பி. 1803)
- **1955 - அலெக்சாண்டர் ஃப்ளெமிங், நுண்ணுயிர் கொல்லியான சிதைநொதியைக் கண்டுபிடித்தவர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1881)**
- 1971 - பைலோ பார்ன்சுவர்த், அமெரிகக் கண்டுபிடிப்பாளர் (பி. 1906)
- 2009 -ஓமக்குச்சி நரசிம்மன், தமிழ்த் திரைப்பட நடிகர்
- 2013 - ஸ்ரீபாத பினாகபாணி, இந்தியப் பாடகர் மருத்துவர் (பி. 1913)
- 2013 - வே. தில்லைநாயகம், நூலகவியலாளர் தமிழறிஞர். (பி. 1925)

## அலெக்சாண்டர் ஃப்ளெமிங்



அலெக்சாண்டர் ஃப்ளெமிங் 1881 ஆகஸ்ட் 6 அன்று ஸ்காட்லாந்து நாட்டில் பிறந்தார். இவர் நுண்ணுயிர் கொல்லியான சிதைநொதியைக் கண்டுபிடித்தவர். மேலும், நுண்ணுயிர் கொல்லியான பெனிசிலினை பெனிசிலியம் நொடேடம் (Penicillium notatum) என்ற பூஞ்சையிலிருந்து பிரித்தெடுத்தார்.

உலகம் அறிந்துள்ள மருத்துவ முன்னேற்றங்களுள் பெனிசிலின் கண்டுபிடிப்பு தனிச்சிறப்பு வாய்ந்தது. பெனிசிலின் காலத்திற்கு முன் பிரசவத்தில் பெண்கள் இறப்பதும், பிறந்தபின் குழந்தைகள் இறப்பதும் சர்வ சாதாரணம். லேசான சிராய்ப்புகளும் கீறல்களும் கூட மரணத்திற்கு இட்டுச் சென்றன.

ஒரு நுண்ணுயிரை வைத்து இன்னொன்றைக் கொல்ல முடிகிற பெனிசிலின் போன்ற நச்சுமுறி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் பல நோய்களிலிருந்து மனிதர்களை எக் காப்பாற்ற முடிந்தது. பெனிசிலினைக் கண்டுபிடித்து நவீன நச்சுமுறி மருந்துகள் யுகத்தைத் தொடங்கி வைத்த பெருமைக்குரிய விஞ்ஞானிதான் அலெக்ஸாண்டர் ஃப்பெளமிங். பெனிசிலின் உலகெங்கிலும் உள்ள 20 கோடி மக்களின் உயிரைக் காப்பாற்றியுள்ளது.

# கூட்டு எதிர்க்கட்சிக் கூட்டத்தில் பங்கேற்க சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு தடை

## அமைச்சர் துமிந்த உத்தரவு

(கொழும்பு)

**கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்தில் பங்கேற்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு அனுமதி கிடையாது என கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்திற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினர் எதிர்வரும் 17ஆம் திகதி கொழும்பில் பாரிய பேரணி ஒன்றையும் கூட்டமொன்றையும் நடத்த உள்ளனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே துமிந்த திஸா நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

இந்த கூட்டத்திலும் பேரணியிலும் பங்கேற்பதற்கு சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு அனுமதியளிக்கப்படாது.

கொழும்பு ஹைட் மைதானத்தில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கும், ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

எனவே, இந்த கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பங்கேற்க வேண்டியதில்லை.

இந்த தீர்மானமானது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சுதந்திரக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் பொருந்தும்.

கட்சிக்கு எதிராக ஊடகங்களில் வீரர்களைப் போன்று எவரேனும் கருத்து வெளியிட்டால் கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைய அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பது ஒழுக்கமும், கொள்கையும் உடைய ஓர் கட்சியாகும். எனவே, கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்தில் யார் யார் பங்கேற்கின்றார்கள் என்பது குறித்து தாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார் (இ-5)

## மகிந்தவால் வடபகுதி தமிழர்களின் அன்பைப் பெற ஏன் முடியவில்லை?

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் வடக்கு மக்களின் அன்பைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஸ் பத்திரண தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு பயனுள்ள வகையில் அரசியலமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டால் அதற்கு ஆதரவளிக்கப்படும்.

தேவையான திருத்தங்களுடன் அரசியல்மைப்பு திருத்தங்களுக்கு ஆதரவளிக்கப்படுகின்றன.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் சமாதானத்துடனும் சகவாழ்வுடனும் வாழ்வதனைப் பார்ப்பதே எமது நோக்கமாக அமைந்துள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கும் வடக்கிற்கு அதிகாரங்களை வழங்குவதற்கும் அரசியலமைப்பில் மாற்றம் செய்யப்படுகின்றது.

30 ஆண்டு காலப்பேரை முடிவுக்குக் கொண்டு வர மகிந்த ராஜபக்ஷ மிக முக்கியமான பங்களிப்பினை வழங்கியிருந்தார்.

போரின் பின்னர் வடக்கில் தேர்தல் நடத்தி ஜனநாயக ரீதியில் மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்ய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். எனினும், வடக்கு மக்களின் அன்பைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

பொருளாதார ரீதியில் நலிந்த அடிப்படையில் இந்த அரசாங்கம் காணப்பட்டாலும் நல்லிணக்க ரீதியில் ஓரளவான காரியங்களை செய்துள்ளது.

ஓராண்டுக்கு முன்னதாக தேர்தல் சட்டங்களை மீறினால் காலுக்கு அல்ல தலைக்கு துப்பாக்கிச் சூடு நடததுமாறு கோரிய தேர்தல் ஆணையாளர் இன்று தேர்தல் பற்றி தம்மிடம் கேட்க வேண்டாம் என கூறுகின்றார். .


இவ்வாறான ஓர் நிலையில் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு எதற்கு? 19ஆம் திருத்தச் சட்டத்தின் பயன்தான் என்ன என நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஸ் பத்திரண கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 658


மீனு




நிதுர்ஷன்





தர்சினி




தர்மா




ராதா




விபுலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சமஷ்டியும் சர்வதேச விசாரணையும்

இறுதி மோதல்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் 'சர்வதேச விசாரணை' முன்னெடுக்கப்பட வேண்டும் என்கிற தமிழ் மக்களின் கோரிக்கை, ஒரு கட்டத்துக்கு மேல் மெல்ல மெல்ல வலுவிழந்தமைக்கான காரணிகளில் ஒன்றுதான், தென்னிலங்கையின் 'சமஷ்டி' எதிர்ப்புக்குமான காரணி.



இலங்கையில், 'சர்வதேச விசாரணை' என்கிற சொல்லாடல் ஆளுமை பெறுவதற்கு முன்னரேயே 'சமஷ்டி' பற்றிய உரையாடல்கள் அறிமுகமாகிவிட்டன. இலங்கையில் சமஷ்டி பற்றிய உரையாடல்களை அறிமுகம் செய்தவர்களில் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க முக்கியமானவர்.

ஆக, யோசித்துக் கொள்ளுங்கள் சர்வதேச விசாரணை என்கிற சொல்லாடலைவிடவும், சமஷ்டி என்கிற உரையாடல் முனைப்புக்கள் எவ்வளவு மூப்பானவை என்று. ஆனாலும், சர்வதேச விசாரணை பற்றிய விடயத்திலிருந்து சமஷ்டி பற்றிய விடயத்துக்கு போனால், இலங்கை அரசாங்கங்கள் மற்றும் அரச படைகள் மீது சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்கிற கோரிக்கைகள் முன்பும் கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுந்திருக்கின்றன. ஆனால், 2009 இறுதி மோதல்களுக்குப் பின்னரான காலத்தில் சர்வதேச விசாரணைகளைக் கோருவதற்கான மூர்க்கமான முனைப்பு பெருமெடுப்பில் ஒருங்கிணைக்கப்பட்டது. குறிப்பாக, புலம்பெயர் தேசங்களிலுள்ள தமிழ் மக்களின் ஓர்மமான ஒருங்கிணைவு சர்வதேச விசாரணைக் கோரிக்கையை குறிப்பிட்டளவு தக்கவைப்பதற்கு முக்கியமான காரணியாக அமைந்தது.

இறுதி மோதல்களுக்குப் பின்னரான இலங்கையில், ராஜபக்ஷக்களின் அதிகாரமும் அடக்குமுறையும் அதனைவிடவும், கண்காணிப்பும் பாதுகாப்பு அச்சுறுத்தலும் பெருமெடுப்பில் அதிகரித்திருந்த நிலையில், தாயகத்திலுள்ள தமிழ் மக்களினால் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையோடு பெருமெடுப்பில் ஒருங்கிணைவதற்கான முனைப்புக்களை முன்னெடுப்பது அவ்வளவு முடியாத ஒன்று. ஆனாலும், அச்சுறுத்தல்களையும், கண்காணிப்புக்களையும் தாண்டி தாயகத்திலுள்ள தமிழ் மக்களும் தம்முடைய அர்ப்பணிப்பையும், போர்க்குணத்தையும் வெளிப்படுத்தியிருந்தனர். அதனை மறுக்க முடியாது.

சர்வதேச விசாரணைக்கான நம்பிக்கையும் கோரிக்கையும் தமிழ் மக்களின் உரையாடல் தளத்திலிருந்து தீர்க்கமான செயற்பாட்டுத் தளத்துக்கு நகர ஆரம்பித்த புள்ளியில் தடம்புரள ஆரம்பித்தது. ஏன், அந்தத் தடம்புரள்வு என்கிற கேள்வி எழும்.

மிகுந்த வலியுடனும் ஏமாற்றத்துடனும் இருக்கின்ற மக்கள் கூட்டமொன்றை, உணர்வு ரீதியாக ஓர்மத்துடன் ஒன்றிணைப்பது குறிப்பிட்டளவு இலகுவானது. அதற்கு, அடிப்படையில் அந்த மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தும் மொழிகளை எடுத்தியம்பினால் போதுமானது. தமிழ் மக்களில் பெருமளவாக ஒருங்கிணைந்த மக்களும் இதே மனநிலையோடு இருந்தவர்கள். ஊடக அரசியல் உரையாடல் வெளியில் உணர்ச்சி மேலிடுகைகளுடன் சர்வதேச விசாரணை பற்றிய உரையாடல்கள் மேலெழுந்த போது மக்கள் அந்தப் பக்கம் ஏகமாக சாய்ந்தனர்.

அந்த நிலைகளில் அதிகம் தாக்கம் செலுத்தியவை, ஊடகங்களும் அவை நடத்திய அரசியல் உரையாடல் நிகழ்ச்சிகளும். ஒரு மக்கள் கூட்டத்தின் ஏமாற்றத்தினை நம்பிக்கையின் பக்கத்தில் திருப்புவதற்கான முனைப்புக்கள் என்பது அவசியமானவை. அந்த முனைப்புக்கள் சீரான புரிதலோடும் வேகத்தோடும் கட்டமைக்கப்பட வேண்டியவை. ஆனால், சர்வதேச விசாரணைகள் குறித்த ஓர்மத்துடனான ஒருங்கிணைவு என்பது முதல் கட்டத்தினைத் தாண்டிய அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கான படிநிலைகளில் தடம்புரண்டது.

அதாவது, சர்வதேச விசாரணைகளுக்கான முன்நகர்வுகள் சர்வதேச ரீதியில் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. அதனை நோக்கிய திட்டமிட்ட பயணம் எவ்வளவு சீரானதாகவும் காலம் தாண்டிய நீட்சி கொண்டதும் என்று முதலில் சொல்லப்பட்டிருக்க வேண்டும். அதனைத் தாண்டி, பிராந்திய அரசியலும், அதனை முன்னிறுத்திய இராஜதந்திர நகர்வுகளும் சர்வதேச விசாரணைக் கோரிக்கையின் வெற்றியிலும் தோல்வியிலும் எவ்வளவு தாக்கம் செலுத்தும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும். அல்லது, அது தொடர்பிலும் வெளிப்படையாக உரையாடப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், தமிழ் ஊடக, அரசியல் பரப்பில் சர்வதேச விசாரணை தொடர்பில் திறந்தவெளி உரையாடல்கள் நிகழ்த்தப்படவில்லை. ஒரு கோரிக்கையின் - நம்பிக்கையின் பக்கம் மக்களை ஒருங்கிணைத்துவிட்டு, பலரும் ஓடி ஒழிந்து கொண்டனர்.

அந்தப் பக்கம் ஒருங்கிணைந்த மக்களுக்கு ஒரு கட்டத்துக்கு மேல் என்ன செய்வதென்று புரியாமல் போனது. சர்வதேச விசாரணைக்கான கோரிக்கை மெல்ல மெல்ல வலுவிழப்பதற்கான புறக்காரணிகளைத் தாண்டி அகக்காரணிகளில் திட்டமிடாத செயற்பாடும், சீரான கட்டமைப்புக்களின் மீதான தமிழ்த் தரப்புக்களின் பற்றற்ற நிலையுமாகும்.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்வதென்றால், ஊடகப் பரபரப்புக்களுக்காக சர்வதேச விசாரணை உரையாடல் வெளி திறந்த அளவுக்கு, அதற்கான செயற்பாட்டு வெளி திறக்கவில்லை. மக்களை ஒரு கட்டத்துக்கு மேல் போலியான ஒன்றின் மீது நம்பிக்கை கொண்டிருக்க வைப்பதற்கு ஒப்பாக போய் முடிந்தது.

(தமிழ் மக்களில் ஒரு தொகுதியினர், மகிந்தவையும் அவரது பட்டாளத்தையும் சர்வதேச நீதிமன்றில் நிறுத்தி சில காலத்துக்குள்ளேயே மரணதண்டனை வாங்கிக் கொடுத்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருநதார்கள். அந்த மக்களை நோக்கி சர்வதேச விசாரணை உரையாடலினூடு அப்படியான எண்ணக்கருவொன்று பாய்ச்சப்பட்டிருந்தது.)

இப்படியானதொரு நிலையின் இன்னொரு வடிவத்தையே தென்னிலங்கையின் சமஷ்டிக்கான எதிர்ப்பும் வெளிப்படுத்துகின்றது.

ஏனெனில், இங்கும் அரசியல், ஊடக வெளியே அளவினை மீறிய போலி கற்பிதங்களை ஏற்படுத்தி வைத்திருக்கின்றது. சமஷ்டியை, தனித் தமிழீழத்துக்கு ஒப்பான ஒன்றாக கட்டமைத்ததில் தென்னிலங்கை ஊடகங்களுக்கும் அதில், உரையாடல்களை நிகழ்த்துபவர்களும் முக்கியமானவர்கள்.

சமஷ்டியின் அடிப்படைகள் எவ்வாறானவை, என்கிற நியாயமான உரையாடல்களைச் செய்ய எந்தவொரு கட்டத்திலும் தென்னிலங்கை முனையவில்லை. மாறாக, அதனை பிரிவினைக்கான கோரிக்கையாக சொல்லி வந்திருக்கின்றன. தமிழீழத்துக்கும் சமஷ்டிக் கோரிக்கைக்கும் பாரிய வித்தியாசம் உண்டு.

சமஷ்டி பற்றிய தமிழ் தரப்பிலிலுள்ள ஒருவரே, அதாவது அதிகாரங்களையும் விடுதலையையும் கோருகின்ற தரப்பிலுள்ளவரே புரிந்துகொள்வதில் சிக்கலோடு இருக்கின்றார் என்றால், ஊடகங்களும் அரசியல்வாதிகளும், புத்திஜீவிகளும் முக்கியமான விடயங்களை மக்களிடம் சீராக கொண்டு சேர்ப்பதில் எவ்வளவு குறையை விட்டிருக்கின்றார்கள் என்பது புரியும். அப்படிப்பட்ட நிலையில், 'ஒரே நாடு- பௌத்த சிங்கள தேசம்' என்கிற கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கும் தென்னிலங்கை, சமஷ்டி பற்றிய உரையாடல்களை விரிவாகவும் தெளிவாகவும் நிகழ்த்துமா, அது சாத்தியமானதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மறைந்த நடராஜா ரவிராஜ்"ம், தற்போதைய தேசிய கலந்துரையாடல் அமைச்சருமான மனோ கணேசனும் 'தமிழ் மக்களின் பிரச்சினைகளை சிங்கள மக்களிடம் நேரடியாக பேச வேண்டும். அதுவே, தென்னிலங்கையில் மாற்றங்களை ஏற்படுத்தும். தமிழ் மக்களுக்கு விடிவைப் பெற்றுத்தரும்.' என்று தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டவர்கள். அந்த முயற்சிகள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவை. ஆனால், அந்த முயற்சிகள் சமுத்திரத்தில் சிறு துளிகள் போன்றவை. ஏனெனில், தென்னிலங்கையின் அரசியல் சக்திகளும் ஊடகங்களும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து கொண்டுதான் புறந்தள்ளுகின்றன. அவை, புரிந்து கொள்ளவில்லை என்கிற வாதம் அபத்தமானது.

அப்படியானவர்கள், சமஷ்டி பற்றி தென்னிலங்கையின் பெரும்பான்மையான சாதாரண மக்களிடம் ஏற்படுத்தி வைத்திருக்கும் போலியான 'பிரிவினை' பிம்பத்தினை உடைப்பது மிகவும் சிரமமானது. அந்த பிம்பம்தான் சமஷ்டியை தென்னிலங்கை மூர்க்கமாக எதிர்ப்ப தற்கான காரணி.

தமிழ் மக்களிடம் சர்வதேச விசாரணை பற்றிய கோரிக்கையும் அதற்கான முனைப்பும் சீராக கட்டமைக்கப்படாமல் பரபரப்புக்களோடு ஒருங்கிணைக்கப்பட்டு, காலம் செல்லச் செல்ல வலுவிழந்தமைக்கு அரசியல் கட்சிகள், தலைவர்கள் தாண்டி ஊடகங்கள் முக்கியமான காரணியாகும். அதுபோலவே, தென்னிலங்கையில் சமஷ்டி எதிர்ப்புவாதம் நீட்சி பெறுவதற்கும் ஆரோக்கியமான, திறந்த உரையாடல்கள் நிகழ்த்தப்படாமைக்கும் ஊடகங்கள் முக்கியமான காரணிகளாகும்.

அரசியல் சார் 'சமூக நெறி' சீரான வேகத்தோடு, தெளிவான உரையாடல்களை நிகழ்த்தத் தவறுகின்ற அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், படுதோல்வியடைந்து வந்திருக்கின்றது. இது தான், உலக வழக்கம். அதனையே, இலங்கையும், இலங்கை சார் அரசியலும் தொடர்ந்தும் பிரதிபலித்து வந்திருக்கின்றது. அதுதான், சர்வதேச விசாரணைக் கோரிக்கையும், சமஷ்டிக் கோரிக்கையும் தோல்வியின் பக்கங்களில் இருப்பதற்கான காரணிகளில் முக்கியமானவை.

-தங்கமயில்-

# இனங்களை பிளவடையச் செய்த யுகத்தை ஜனாதிபதி முடிவுக்குக் கொண்டு வந்தார்

## அமைச்சர் தயாசிறி புகழாரம்

(கொழும்பு)

இனங்களை பிளவடையச் செத்தவரலாற்றைக்கொணட யுகத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியலமைப்பை உருவாகக பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இந்நிகழ் வுகள் மிகவும் முக்கியமானவையாகவே கருதப்பட வேணடும்.

எமது நாடு பல்வேறு பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டிருந்தது.



21 ஆம் நூற்றாண்டை எதிர்நோக்கி வரும் நாடு என்ற ரீதியில் போரை முடிவுக்குக் கொண்டு வந்து ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடிய திட்டமொன்று இன்று காணபபடுகின்றது. 2009ம் ஆண்டு போரிலிருந்து மகிந்த ராஜபக்ஷ நாட்டை மீட்டெடுத்தார், எனினும் எம்மால் எடுக்கப்பட வேண்டிய சில முக்கிய விடயங்கள் எடுக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சுகாதார தொண்டர்கள் நேற்றும் போராட்டம்



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைய அடிப்படையில் பணியாற்றும் சுகாதார தொண்டர்கள் நிரந்தர நியமனம் தொடர்பாக சாதகமான பதிலை வழங்குமாறு கோரி 2 ஆவது நாளாக நேற்றையதினம் வடமாகாண சுகாதார அமைச்சின் அலுவலகத்தின் முன் கவனயீர்ப்பு ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைய அடிப்படையில் பணியாற்றும் சுகாதார தொண்டர்கள் 33 பேரே குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

15 வருடங்களுக்கு மேலாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் கடமையாற்றி பின்னர் 4 வருடங்களுக்கு மேலாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றியிருந்தனர். கடந்தவருடம் டிசெம்பர் மாதத்தில் இருந்து அவர்களுக்கு அமைய அடிப்படையிலான கால எல்லை முடிவுற்றுள்ளது. இந்நிலையில் தமக்குரிய நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனவும் அதற்குரிய பதிலை தரவேண்டும் எனக் கோரி 2 ஆவது நாளாக கவனயீர்ப்பு ஆர்ப்பட்டத்தை மேற்கொண டிருந்தனர். (இ-9)

### 2005–2015 காலப்பகுதியில் பாதிப்புக்குள்ளான

# ஊடகவியலாளர்களுக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதியினால் விசேட குழு நியமனம்

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2015 ஆண்டு ஜனவரி மாதம் வரையான காலப்பகுதியில் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்ட மற்றும் சொத்திழப்புக்கள் உட்பட நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த ஊடகவியலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குழு ஒன்றை அமைத்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் ஊடகத்துறையை தொழிலாகக் கொண்டு பணியாற்றிய ஊடகவியலாளர்கள் பாதிப்புக்களுக்கு உள்ளாகியும் சொத்துக்களை இழந்தும் மற்றும் துன்பங்களுக்கு உள்ளாகிய தகவல்கள் பொது மக்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

மேற்படி தகவல்கள் ஆதாரங்களுடனான ஆவணங்களுடன் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட வேண்டும். எஸ்.ரீ. கொடிக்கார, மேலதிக செயலாளர் ,ஜனாதிபதி செயலகம், கொழும்பு–01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். மின்னஞ்சல் முகவரி:- addlpr@Presidentsoffice.lk, தொலை நகல் இலக்கம் :-011-2348855 , தொலைபேசி இலக்கங்கள்:-011-2441648, 011-2354354. (3

# தண்டனைக்கு எதிராக நடத்துநர் மேன்முறையீடு

இலங்கை போக்குவரத்து சபையினால் வழங்கப்பட்ட தண்டனைக்கு எதிராக யாழ்.சாலை நடத்துநர் ஒருவர் யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலையில் நடத்துநராக கடமையாற்றும் ஒருவருக்கு எதிராக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சபை விதிமுறையை மீறிய குற்றங்கள் உள்ளிட்ட 4 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு அதில் 3 குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட நான்காவது குற்றமாகிய வழிப் பட்டியல் சேர்வுத் தொகையில் 91 ரூபாவினை குறைவாக வைத்து சபை விதிமுறையை மீறிய குற்றத்துக்கென ஒரு மாத சம்பளமற்ற தற்காலிக பணி இடை நிறுத்தத்தினை தண்டனையான பெற்றதுடன் 7 நாட்கள் காப்பாளர் மீட்டற்பயிற்சி பெற வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளார்.

பின்னர் குறித்த நடத்துநருக்கு எதிராக கடந்த 2015 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 28 ஆம் திகதி 8 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மற்றுமொரு குற்றச்சாட்டு பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அதில் குறித்த நடத்துநர் வவுனியாவுக்கு செல்லும் பேருந்தில் 2 பயணிகள் கொண்டு வந்த 60 கிலோ நிறையுடைய பொதிக்கு பொதிச்சிட்டு வழங்காமல் பயணிகளிடம் இருந்து 120 ரூபாய் பெற்றதாகவும் இக்விசாரணைகள் இடம்பெற்று குற்றவாளியாக இணங்காணப்பட்டு 6மாத சம்பளமற்ற தற்காலிக பணி இடைநிறுத்தத்தினை தண்டனையாக பெற்றதுடன் 7நாட்கள் காப்பாளர் மீட்டற்பயிற்சியும் பெறுவதற்கு கட்டளையிடப் பட்டுள்ளார்.

குறித்த தண்டனையால் நடத்துநர் அதிருப்தி அடைந்து தனக்கு கொடுக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக இலங்கை போக்குவரத்து சபையின் மேன்முறையீட்டு சபைக்கு மேன்முறையீடு செய்தார்.

கடந்த 2016/2/17 ஆம் திகதி இ.போ.ச. மேன்முறையீட்டு சபையால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

குறித்த தினம் சுகயீனம் காரணமாக சமுகமளிக்க முடியவில்லை என மருத்துவச் சான்றிதழுடன் குறித்த நடத்துநர்சபைக்குஅனுப்பியுள்ளார்.

மேன்முறையீடு அன்றையதினம் ஒத்திவைக்கப்பட்டு 2016/2/18 ஆம் திகதி எந்த விதமான அறிவித்தலும் வழங்கப்படாமல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு குறித்த நடத்துநர் சமுகமளிக்கவில்லை என தெரிவித்து முன்னர் வழங்கியிருந்த தண்டனையை உறுதிசெய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பின் அடிப்படையில் இதுவரை இடைநிறுத்தற் கடிதம் தனக்கு கிடைக்கவில்லை என்றும் மருத்துவ சான்றிதழ்அனுப்பிஇருந்தும்அதனை கணக்கில் எடுக்காமலும் அறிவித்தல் வழங்காமல் விசாரணைக்கு திகதியிடப்பட்டு தீர்வு வழங்கப்பட்டமை தனக்கு பாரிய அநீதியை இழைத்துள்ளார்கள் எனவும் நீதிப்பிறள்வினை ஏற்படுத்தி மனஉளைச்சல் மற்றும் உடல் உளைச்சல் மற்றும் பணநட்டம் ஏற்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவித்து தனக்கு வழங்கப்பட்ட சட்டவிரோத தண்டனையை இரத்துச் செய்யக்கோரியும் அவர்களுக்கு எதிராக உறுதிகேள் எழுத்தாணையும் மேலதிக செயற்பாடுகளை தடை செய்வதற்கு தடையீட்டு எழுத்தாணையும் வழங்குமாறு கோரி குறித்த நடத்துநர் மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு 3ஆம் மாதம் 2ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கினை எதிர்வரும் 16 ஆம் திகதி விசாரணைக்கு திகதியிடப்பட்டுள்ளது. (இ-9)

# புனர்வாழ்வின் பின் விடுதலை அரசியல் கைதிகள் சம்மதம்

மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் புனர்வாழ்வின் பின் விடுதலைக்கு சம்மதம் தெரிவித்து நேற்று முன்தினம் சிறைச்சாலை நிர்வாகத்திடம் கடிதம் ஒன்றினை கையளித்துள்ளனர்.

உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படு வதற்கு சம்மதமா என சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து கேட்டிருப்பதாக கூறி சிறைச்சாலை நிர்வாகத்தினர் கைதிகளிடம் கோரியிருந்தனர். அக்கோரிக்கைக்கு இணங்க புனர்வாழ்வுக்கு சம்மதம் தெரிவித்து கடிதம் ஒன்றினை அவர்கள் நேற்று முன்தினம் மாலை கையளித்துள்ளனர்.

புதியமகசின் சிறைச்சாலையில் உள்ள 14 அரசியல் கைதிக்ள்தமது விடுதலையை வலியுறுத்திகடந்த 23 ஆம திகதியில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து தமது உணவுதவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்துள்ள னர்.

14 கைதிகளினதும் உடல் நிலை மிக மோசமாக பாதிக்கப்பட்டு வைத்தியர்களின் கட்டாயத்தின் அடிப்படையில் அவர்களுக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

இருப்பினும் தமக்குரிய சாதகமான பதில் கிடைக்கும் வரை அவர்கள் தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை என அறிவித்துள்ளனர். (இ-9)

## செய்தித்துளிகள்

### வாகனப் பதிவு 50% ஆல் குறைவு

வாகனப் பதிவு 50% ஆல் குறைவடைந்துள்ளதாக போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் 57,496 வாகனங்களும் நவம்பர் மாதத்தில் 62,433 வாகனங்களும் டிசெம்பர் மாதத்தில் 57,356 வாகனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் ஜகத் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் ஜனவரி மாதத்தில் 32,800 வாகனங்களும் பெப்ரவரி மாதத்தில் 32,703 வாகனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

### இந்தோனேஷியாவில் இலங்கை பிரஜை கைது

அனுமதிப்பத்திரம் காலாவதியாகியும் இந்தோனேஷியாவில் தங்கியிருந்த இலங்கை பிரஜையை, இந்தோனேஷியாவின் குடிவரவு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அமில ஸ்ரீனாத் ஜயதிலக்க என்ற 33 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தோனேஷியாவின் குடிவரவு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர் அங்குள்ள நிறுவனமொன்றில் முகாமையாளராக கடமையாற்றி வந்தார் என்றும் தெரியவருகின்றது.(இ-5)

### ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் 15 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் சு.சிவபாதரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)

### கட்டுரைத்தொகுதி வெளியீடு

சுந்தாவின் விழுதுகள் கட்டுரைத்தொகுதி வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையினை செ.மோகனதாஸ் சுவாமிகள் வழங்கவுள்ளார்.வாழ்த்துரையினை வல்வையூர் அப்பண்ணா வழங்குவதுடன் நயப்புரையினை பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் வழங்கவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்தவுள்ளார். (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

119

## கருணாநிதியின் அனல் பறக்கும் வசனத்துடன் ‘மந்திரிகுமாரி’

...இத்தகைய வசனங்கள் ஏராளம்.

சர்ச்சை

கொள்ளை அடிப்பதைக் கலை என்று கருணாநிதி கூறுகின்றார் என்று மாற்றுக் கட்சியினர் எதிர்ப்புக் குரல் எழுப்பினர்.

அதற்கு கருணாநிதி கூறிய பதில்,

கொள்ளை அடிப்பதும் ஒரு கலை என்று அப் படத்தில் தீயவன் ஒருவன் தான் கூறுகின்றான். கடைசியில் அவன் அழிந்து போகிறான். இராமாயணத்தை எழுதியவர், கூனி பாத்திரத்தையும் படைத்தாரே, கூனியின் சுபாவம் அதை எழுதியவருக்கு சொந்தமானதா? மகாபாரதத்தை எழுதியவர், சகுனி பாத்திரத்தைப் படைத்தாரே. அப்படியாயின் அவர் சகுனியின் செய்கைகளை ஆதரிப்பதாக அர்த்தமா?

இவ்வாறு எதிர்ப்பாளர்களுக்குப் பதிலளித்தார், கருணாநிதி.

எம்.ஜி.ஆர்.நம்பியார், மாதுரிதேவி ஆகிய அனைவரும் நன்றாக நடித்திருந்த போதிலும், புதிய பாணியில் பேசி நடித்த எஸ்.ஏ.நடராஜன் பெரும் புகழ்பெற்றார்.

(மந்திரி குமாரியைத் தொடர்ந்து, எஸ்.ஏ.நடராஜனுக்கு நிறைய வாய்ப்புக்கள் வந்தன. கதாநாயகனாகவும் நடித்தார். ஆனால், அதில் அவர் சோபிக்க முடியவில்லை. மந்திரி குமாரிக்குப் பிறகு அவருக்கு பெயர் சொல்லும் படமாக மனோகரா மட்டுமே அமைந்தது)

மந்திரி குமாரியின் பாடல்களை கா.மு.ஷெரீஃப், மருதகாசி ஆகியோர் எழுதினர். டி.இராமநாதன் இசையமைத்தார். திருச்சி லோகநாதனும், ஜிக்கியும் பாடிய வாராய் நீ வாராய் என்ற பாடல் இந்திய ரசிகர்கள் கூட விரும்பும் பாடாலாக விளங்குகிறது.

மந்திரிகுமாரியைத் தொடர்ந்து கருணாநிதிக்கு ஏராளமான பட வாய்ப்புக்கள் வரத் தொடங்கின. அதனால் அவர் சென்னையில் குடியேறினார். அவரை மீண்டும் சேலத்திற்கு வரச் செய்து தேவகி என்ற படத்துக்கு கதை வசனம் எழுதச் சொன்னார், டி.ஆர்.சுந்தரம். அதன்படி கதை வசனம் எழுதிக் கொடுத்தார் கருணாநிதி.



“தேவகி”யில் மாதுரிதேவி, வி.என்.ஜானகி.



“சர்வாதிகாரி”யில் எம்.ஜி.ஆர், அஞ்சலிதேவி.

தேவகியில் வி.என்.ஜானகியும் எம்.என்.கண்ணப்பாவும் ஜோடியாக நடித்தனர். மாதுரி தேவியும் எஸ்.பாலச்சந்தரும் மற்றொரு ஜோடி. படம் நன்றாகவே ஓடியது.

சர்வாதிகாரி

மந்திரிகுமாரிக்குப் பிறகு எம்.ஜி.ஆரின் நடிப்பும் அவருடைய கத்தி சண்டைகளும் டி.ஆர்.சுந்தரத்துக்குப் பிடித்துப்போயின. அவரை வைத்து வீரதீர செயல்கள் நிறைந்த ஒரு படத்தை தயாரிக்க முடிவு செய்தார். கேல ண்ட் பிளேட் என்ற ஆங்கிலப் படத் தின் கதையைத் தழுவி ஒரு பட த்தை தயாரிக்க முடிவு செய்யப் பட்டது.

முதலில் வீரவாள் என்ற பெயரில் தயாரிக்கப் பட்ட இந்தப் படத்தின் பெயர் சர்வாதிகாரி என்று மாற்றப்பட்டது. எம்.ஜி.ஆருக்கு ஜோடி அஞ்சலி தேவி. மற்றும் விரஸையா, எம்என். நம்பியார் ஆகியோரும் நடித்தனர். இந்தப் படத்துக்கு வசனம் எழுதும்படி கருணாநிதிக்கு சுந்தரம் அழைப்பு விடுத்தார்.

(தொடரும்)

# எழுவர் விடுதலை மலருமா?

(நேற்றைய தினம் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

...எழுவரையும் விடுதலை செய்யும் தமிழக அரசின் முடிவுக்கு அரசியல் நோக்கம் கற்பிக்கும் நண்பர்கள் இந்திய அரசின் பிடிவாதத்துக்குப் பின்னாலிருக்கும் அரசியல் உள்நோக்கம் பற்றிப் பேசுவதே இல்லை. தமிழக அரசின் முடிவுக்கு அரசியல் நோக்கம் இருந்தால்தான் என்ன? அது சட்டப்படி சரியானதா? மனித உரிமைகளுக்கு ஏற்றதா? என்றுதான் பார்க்க வேண்டும்.

இந்திய அரசின் நோக்கமும் செயலும் வஞ்சனை மிக்கவை, சட்டத்துக்கும் புறம்பானவை என்பதைத்தான் நாம் நம் மக்களுக்குச் சொல்லி அவற்றுக்கெதிராக அணிதிரட்ட வேண்டும்.

கடந்த டிசெம்பர் 2 ஆம் திகதி இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எழுவர் விடுதலைக்கு எதிரானது என்ற கருத்து பரவியுள்ளது. உண்மையில் அது எழுவர் விடுதலைக்கு ஆதரவானதோ எதிரானதோ அல்ல. குற்ற நடைமுறைச் சட்டம் தொடர்பான சில கேள்விகளுக்கு விடையும் விளக்கமும் தருவதுதான் அந்தத் தீர்ப்பு. சில சட்டப் பிரிவுகளுக்கு அது தந்துள்ள விளக்கம் மாநில உரிமைகளுக்கு எதிரானது. மனித உரிமைகளைக் குறுக் கும்படியானது என்பது



முருகன் பேரறிவாளன் சாந்தன்

நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயாஸ் ஜெயக்குமார்

உண்மை தான். குற்ற நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 435 குறிப் பிடும் கலந்தாய்வு என்பதற்கு ஒப்புதல் என்று அது பொருள் விளக்கம் அளித்திருப்பதும் பொருத்தமற்றதே.

ஆனால் அதே போல் ஆயுள் தண்டனை என்றாலும் தண்டனைக் கழிவு பெற்று முன் விடுதலை பெற உரிமை உண்டு என்றும், அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 72 தரும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தியக் குடியரசுத் தலைவரும் உறுப்பு 161 தரும் அதிகாரத்தைப் பயன்படுத்தி மாநில ஆளுநரும் தண்டனை குறைப்பு அல்லது கழிவு வழங்கும் அதிகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் இத்தீர்ப்பு தெளிவாகக் கூறியிருப்பது நல்ல செய்தி.

இதை அடிப்படையாக வைத்துத்தான் தமிழக அரசே உறுப்பு 161 அதிகாரத்தைப் பயன்படுத்தித் தமிழர் எழுவரையும், அவர்களோடு மதப்பாகுபாட்டின் அடிப்படையில் விடுதலை மறுக்கப்பட்டு இருபதாண்டுக்கு மேலாகச் சிறையில் இருக்கும் இஸ்லாமியக் கைதிகளையும், பத்தாண்டு கழித்த சாதாரண குற்றக் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு கோரிக்கை வைத்தோம்.

ஆனால் தமிழக அரசு இப்போது எடுத்துள்ள முயற்சியும் கூட சரியானதே. அது மீண்டும் குற்ற நடைமுறைச் சட்டப் பிரிவுகளைப் பயன்படுத்தி எழுவரை விடுதலை செய்ய முடிவெடுத்து, அம்முடிவை இந்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. இதற்கு இந்திய அரசு விடை சொல்லத்தான் வேண்டும். அது காலங் கடத்தினால் தமிழக அரசு சார்பிலும் எழுவர் சார்பிலும் உச்ச நீதிமன்றத்தை அணுகலாம்.

தமிழக அரசு இந்திய அரசைக் கலந்து கொள்ள வேண்டும் என்பதுதான் சட்டவிதி. இப்படியான கலந்தாய்வு திறமிக்கதாக இருக்க வேண்டும் என்பது சரி. திறமிக்க கலந்தாய்வு என்பதன் பொருள் என்ன? உரிய தரவுகளின் அடிப்படையில் கலந்தாய்தல் என்பதுதான். சிறைத் துறை என்பதும் அதோடு தொடர்புடைய நன்னடத்தைத் துறை என்பதும் மாநில அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டவை. சிறையிலிருக்கும் கைதி எப்படிப்பட்டவர்? அவர் திருந்தியுள்ளாரா? அவர் மறுவாழ்வு பெறும் வாய்ப்பு எவ்வாறானது? இதையெல்லாம தெரிந்து கொள்வதற்கான எவ்விதப் பொறிமுறையும் இந்திய அரசிடம் இல்லை. அது மாநில அரசிடமிருந்துதான் தரவுகள் பெற முடியும்.

எனவே மாநில அரசின் முடிவை ஏற்று ஒப்புதல் தெரிவிப்பது தவிர இந்திய அரசுக்கு வேறு வழி இல்லை. ஆனாலும் இந்திய அரசு வைக்கோல் போரில் படுத்துக் கொண்டு தானும் தின்னாமல் மாடும் வைக்கோல் தின்ன விடாது என்றால், இந்திய உச்ச நீதிமன்றத்தை அணுகலாம், அங்கேயும் நீதி கிடைக்காதென்றால் மக்கள் மன்றம்தான தீர்ப்பெழுத வேண்டும். நம் பிள்ளைகளை நாம் தூக்குக் கயிற்றிலிருந்து மீட்டது போலவே கொடுஞ்சிறையிலிருந்தும் மீட்போம்! (முற்றும்)

-தோழர் தியாகு-

பூனைகறுப்போ சிவப்போ என்பதில்லை;
எலிபிடித்தால் சரி.
- சீனப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# புதிய அரசியலமைப்பிலேயே வெற்றி தங்கியுள்ளது

புதிய அரசியல் அமைப்பை வரைபதற்காக நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு சாசனப் பேரவையாக மாற்றுவதற்கு அனைத்துக் கட்சிகளும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

அரசியலமைப்பு சாசனப்பேரவையாக பாராளுமன்றத்தை மாற்றுவதற்கான அங்கீகாரத்தை அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருப்பது ஒரு படி முன்னேற்றம் என்று கூறிக்கொள்ளலாம். பாராளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றுவதற்கு பொது எதிரணியினர் எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்று பரவலாகப் பேசப்பட்ட போதிலும் பொது எதிரணியினரும் அரசியலமைப்பு சபையாக பாராளுமன்றத்தை மாற்றுவதற்கு சம்மதம் தெரிவித்தமை வரவேற்கத்தக்க முடிவே.

சில வேளைகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுபவிக்கின்ற துன்பதுயரங்களை பார்த்தபின் ஐயா! எதற்கும் அரசுடன் ஒத்துப்போவதுதான் ஒரேவழி என்று பொது எதிரணியினர் முடிவு எடுத்திருக்கலாம்.

எது எப்படியாயினும் ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சியில் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைத்தல் மற்றும் பாராளுமன்றத்தை அரசியல் அமைப்பு சபையாக மாற்றுதல் என்ற இரு விடயத்திலும் மைத்திரியின் அரசு வெற்றிபெற்றுள்ளமை முக்கியமான திசைதிருப்பம் என்றே கூறவேண்டும்.

இது ஒருபுறம் இருக்க, பாராளுமன்றத்தை அரசியல் அமைப்பு சபையாக மாற்றியதன் வெற்றி என்பது அமையப் போகும் புதிய அரசியலமைப்பு எவ்வாறு அமையும் என்பதை பொறுத்தே தங்கியுள்ளது.

புதிய அரசியலமைப்பானது மீளவும் இலங்கையை பௌத்த சிங்கள நாடாகவே எடுத்துரைக்குமாயின், சிறுபான்மை மக்களுக்கு உரிமை கொடுக்க மறுக்குமாயின் புதிய அரசியலமைப்பால் எந்த பிரயோசனமும் இருக்காதென்பதே உண்மை.

ஆக பாராளுமன்றம் அரசியலமைப்புச் சபையாக மாற்றப்பட்டமை வெற்றி என்பதாக அமைய வேண்டுமாயின்,

இந்த நாடு அனைத்து இன, மத, மொழி சார்ந்த மக்களுக்கும் உரியது; மத சார்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. சிறுபான்மை மக்கள் என்றில்லாமல் அனைவரும் ஆட்சிப்பீடம் அமரக் கூடியவர்களாக – அனைவரும் சமத்துவமான உரிமைகளோடு வாழக்கூடியதான சூழலை ஏற்படுத்துவதாக புதிய அரசியலமைப்பு அமையுமாயின் அதுவே வெருவற்றியாகும்.

எனினும் பௌத்த சிங்கள நாடு என்பதை இந்த நாட்டின் உன்னதமான மதம் பௌத்தம் என்பதை விட்டுக் கொடுப்பதாக அரசியலமைப்பு அமையும் என்று சொல்லமுடியாதென்பதே நம் சிற்றறிவின் முடிவு.

எதுவாயினும் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான ஒரு களம் அமைந்துவிட்டது. இந்தக் களத்தை இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு என்பதாக ஆக்குவதற்கு பயன்படுத்தினால் அதுவே பெரும் பயனாக அமையும்.

இதைச் செய்ய வேண்டுமாயின் சிங்கள பேரினவாதிகளும் பௌத்த பீடங்களும் தங்களிடம் இருக்கக் கூடிய ஆணவக்கூறுகள் பலவற்றை தியாகம் செய்ய வேண்டியிருக்கும் என்பதே உண்மை.

# தண்டவாளத்தில் படுத்த இளைஞன் காயங்களுடன் உயிர் தப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

நிதானம் தவறிய நிலையில் தண்டவாளத்தில் படுத்திருந்த இளைஞர் படு காயங்களுடன் உயிர் தப்பிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5 மணிக்கு யாழ்.நாவலர் வீதியில் உள்ள ரயில்வே தண்டவாளத்தில் இடம்பெற்றது.

நாவலர் வீதி ஐந்து சந்தியைச் சேர்ந்த நதுருதீம் முகமட் சஜீர் (வயது 19) என்ற இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நிதானம் தவறிய நிலையில குறித்த இளைஞர் ரயில் தண்டவாளத்தில் படுத்திருந்துள்ளார்.

ஆனால் இவ் இளைஞர் தண்டவாளத்தில் படுத்திருப்பது ரயில் சாரதிக்கு தெரியவந்ததையடுத்து ரயிலின் வேகம் குறைக்கப்பட்டது.

இதன் காரணமாகவே அவ் இளைஞர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

இளைஞனின் தலையில் படுகாயம் ஏற்பட்டதுடன் கை விரல்களில் இரண்டும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-5.30)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சு.சிவபாதரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பொதுக்கூட்டத்துக்கு நிதிய உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளதுடன் புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்கள் ஓய்வூதிய அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் சமுகமளிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ–12)

# ஆளுநரின் அநாவசிய தலையீடு தொடர்பான அறிக்கை தயார்

கிழக்கு மாகாணத்தில் மாகாண நிர்வாகத்தை செவ்வனே கொண்டு நடத்துவதில் ஏற்படும் முட்டுக் கட்டைகள், குறிப்பாக ஆளுநர் தலையீடு குறித்து முழுமையான அறிக்கை ஒன்றை, முதலமைச்சர் மாநாட்டில் தான் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் இது குறித்து ஏனைய மாகாண முதலமைச்சர்களுடன் உடன்பாட்டை எட்டியுள்ளதாகவும் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அத்துடன், இதுவரை காலமும் மாகாண நிர்வாகத்தில் குறிப்பாக அபிவிருத்தி நடவடிக்கைகளில் தாங்கள் ஆளுநரின் தலையீட்டால் பாதிக்கப்பட்ட முழுமையான அறிக்கையொன்றைத் தயார் செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், அந்த அறிக்கை மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகப் பிரிவுகளில் ஆளுநரின் அநாவசியத் தலையீடு இடம்பெற்ற சந்தர்ப்பங்களையும் தாங்கள் ஆதாரபூர்வமாக ஆவணப்படுத்தி அறிக்கை தயாரித்திருப்பதாகவும் முதலமைச்சர் விபரித்தார்.

32ஆவது, முதலமைச்சர்கள் மாநாடு, எதிர்வரும் 21ஆம் திகதி தென் மாகாண சபை கேட்போர் கூடத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறவுள்ளதாக தென் மாகாண சபையின் பிரதம செயலாளர் ஆர்.சி.டிசொய்ஷா அறிவித்துள்ளார். (இ-5)

# கடற்படை சிப்பாய் சுட்டு தற்கொலை

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை - காரைநகர் பிரதேசத்திலுள்ள கடற்படை முகாம் சிப்பாய் ஒருவர் நேற்று தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற் கொலை செய்து கொண்டுள்ளார்.

காரைநகர் - எலார கடற்படை முகாம் சிப்பாயே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக, பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கோகருல்ல - கோடுஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. சடலம் யாழ்ப்பாணம் வைத்திய சாலையில் வைக்கப்பட்டு பிரேதப் பரிசோதனைகள் இடம் பெறவுள்ளன.

தற்கொலைக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# 10 இலட்சம் பேருக்கு இலவச காணிகள் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது

(கொழும்பு)

தற்காலிக போமிற் வழங்கப்பட்டோ அல்லது வாடகை செலுத்தியோ வாழ்ந்து வரும் 10 இலட்சம் பேருக்கு இலவசமாக காணி உறுதிகள் வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் வரிகள் தொடர்பான புதிய மாற்றங்களைச் சமர்ப்பிக்கும் அமைச்சரவைப் பத்திரத்தில் பொருளாதார அபிவிருத்தியை விரிவுபடுத்தும் திட்டத்தில் 10 இலட்சம் பேருக்கு இலவச காணி உறுதிகள் வழங்குவது குறித்து முன்மொழிவு பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலம் குறித்து நிச்சயமற்ற தன்மைகளுக்கிடையில் வாழும் இம் மக்களுக்கு இது பயனுள்ளதாக அமைவதுடன் இலங்கையில் பலர் அரசாங்கக் காணிகளில் அனுமதியுடனோ அனுமதியின்றியோ வாழ்ந்தும் வருகின்றனர்.

இதேவேளை அரசாங்கம் தனது கொள்ளைப் பிரகடனத்தில் ஏற்கெனவே இது தொடர்பாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### இறைவன் பார்ப்பது இதயங்களை

★ செயல்கள் அனைத்தின் விளைவுகளும் எண்ணத்தைப் பொறுத்தே அமைகின்றன. மனிதன் எதை எண்ணுகின்றானோ அதற்குரிய பலன் தான் அவனுக்கு கிட்டும்.

(நூல்: புகாரி, முஸ்லிம்)

★ இறைவன் உங்கள் உருவங்களையோ உங்கள் செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக, உங்கள் உள்ளங்களையும், செயல்களையும் தான் பார்க்கிறான்.

(நூல்: முஸ்லிம்)

இறைவன் கூறுகின்றான்:

★ நபியே!(மக்களை) எச்சரிப்பீராக: “உங்களின் நெஞ்சங்களில் இருப்பவற்றை நீங்கள் மறைத்தாலும் அல்லது அவற்றை வெளிப்படுத்தினாலும் இறைவன் அவற்றை நன்கறிகிறான்”.

(திருக்குர்ஆன் 3:29)

★ இறையச்சம் உடையவர் தூய நிலை அடையும் பொருட்டு தம் செல்வத்தை வழங்குகின்றார்- கைமாறு செய்யும் அளவுக்கு எவருக்கும் அவர் நன்றிக்கடன் படவில்லை. ஆனாலும், அவர் உயர்வு மிக்க தம் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காகவே இதைச் செய்கின்றார். மேலும் (அவரைக் குறித்து) அவசியம் இறைவன் திருப்தியடைவான். (திருக்குர்ஆன் 92: 18-20)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** தம்ப காமம், தர்மகேணி, முல்லையடி, பளை நகரம் ஒரு பகுதி, தர்மக்கேணி தென்னை ஆராய்ச்சி நிலையம், மயிலங்காடு, குப்பிளான், உடுப்பிட்டி V.C, நாச்சிமார் கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதி சனசமூக நிலையத்தடி, பழைய பொலிஸ் நிலையத்தடி, வல்வெட்டித்துறை சந்தி, உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக் கொடிய வரை, TMM கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** செட்டியார்கட்டையடம்பன் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சந்நியாசமும் உங்கள் சேர்க்கையும்

சந்நியாசம் என்றால் என்ன?


**நான் ஒன்றும் இல்லை. எனக்கு எதுவும் தேவையில்லை அல்லது அனைத்தும் நானே. அனைத்தும் என்னிடம் உள்ளது.**

சந்நியாசம் என்பது வண்ணங்கள் இல்லாதது அல்லது பல வண்ணங்களைக் கொண்டது.

உங்கள் சேர்க்கை உங்களை மேலே உயர்த்தவும் செய்யும் அல்லது கீழே தள்ளவும் செய்யும். சேர்க்கை முதலில் கவர்ச்சியைத் தந்து பிறகு ஒரு பொய்யான மாயையை ஏற்படுத்துகிறது. இது உங்கள் மனத்தை மாறுபட்ட இருவேறு தன்மைகளான விருப்பு, வெறுப்பு இவற்றின் இடையே ஊசலாட வைக்கிறது. ஞானத்தின் வலிமையாலும் சத்சங்கத்தின் வலிமையாலும் திகைப்பூட்டும் இந்த நிலைமையிலிருந்து நீங்கள் விடுபட்டு உயரலாம்.

# கிளிநொச்சி வலயமட்ட சதுரங்கப் போட்டி முடிவுகள்





(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலய பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகள் 5 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

15 வயதின் கீழ் ஆண், 15 வயதின் கீழ் பெண், 19 வயதின் கீழ் ஆண், 19 வயதின் கீழ் பெண் என நான்கு அணிகளாக நடைபெற்ற இப்போட்டிகளில் ஒவ்வொரு அணியிலும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய நான்கு கோட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகள் பங்குபற்றின.

இப்போட்டிகள் யாவும் கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கத்தின் நடுவர் குழுவினரால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளின் முதல் மூன்று இடங்களின் முடிவுகள் வருமாறு,

**15 வயது ஆண்கள்**

கிளிநொச்சி மகா வித்தியாலயம், பளை மத்திய கல்லூரி, இராமநாதபுரம் மகா வித்தியாலயம்.

**15 வயது பெண்கள்**

பளை மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், தருமபுரம் மத்திய கல்லூரி.

**19 வயது ஆண்கள்**

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம்,வட்டக்கச்சிமத்தியகல்லூரி.

**19 வயது பெண்கள்**

உருத்திரபுரம் மகா வித்தியாலயம், தருமபுரம் மத்திய கல்லூரி, வட்டக்கச்சி மத்திய கல்லூரி.

இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள் வடக்கு மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தகுதி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வடமராட்சி, பருத்தித்துறை லீக்கில் பதிவுள்ள அணிகள் தமக்கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளவும்.



தொடர்புகளுக்கு: செல்வராசா சஞ்சயன்: 077 197 3261. (க)



நல்லூர் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் அரியாலை மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் ஒலிம்பிக் வி.க வீழ்த்தி சம்பியனாகிய அரியாலை ஐக்கிய கழகத்தினை படத்தில் காணலாம்.

# கரவெட்டி பி.செயலக கபடி சுற்றுத் தொடர்

கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான கபடி சுற்றுப்போட்டிகள் நாளை 12 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண், பெண், இருபாலாருக்குமான சுற்றுப் போட்டிகள் அன்றையதினம் காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆறு வருடங்களாக மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

கடந்த வருடம் பிரதேச செயலக சம்பியனாகியது குறிப்பிடத்தக்கது. (க)

# சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

## நேதாஜி விளையாட்டுக்கழகம் வெற்றி



(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி விழாவை முன்னிட்டு மறைந்த சிவனடியார் நவரத்தினம் அவர்களின் நினைவாக வல்வை நேதாஜி விளையாட்டுக் கழகத்தால் கடற்கரை கரப்பந்தாட்ட (Beach Volleyball) சுற்றுப் போட்டி வல்வை காட்டுவளவு நேதாஜி கடற்கரையில் மின்னொளியில் நடத்தப்பட்டது.

இச் சுற்றுப் போட்டியில் வல்வைக்குட்பட்ட கழகங்களான உதய சூரியன் விளையாட்டுக்கழகம், ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக்கழகம், சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம், நேதாஜி விளையாட்டுக்கழகம் மற்றும் றெயின்போ விளையாட்டுக்கழகம் ஆகிய கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

இறுதிப்போட்டியில் வல்வை நேதாஜி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் நேதாஜி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (க)

# முல்லைத்தீவு மாவட்ட அணி அடுத்த சுற்றுக்கு தகுதி



சீனியர் கிண்ண தொடரில் முல்லைத்தீவு மாவட்ட அணியும் கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி மைதானத்தில் இடம்பெற்றது.

இரண்டு அணிகளும் சிறப்பாக விளையாடிய போதும் முல்லை. மாவட்ட அணியினருக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவவிட, அதனை சாதகமாக பயன்படுத்தின கிளிநொச்சி அணியினர் 2 கோல்களை போட்டனர். பதிலுக்கு முல்லை. அணி 1 கோலை போட்டது.

இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் முல்லை. அணி தோல்வியடைந்தது. முதல் நடந்த போட்டியில் முல்லை. அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றதால் கோல்கள் அடிப்படையில் முல்லை. அணி முன்னிலையில் இருப்பதனால் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. (க)



நேதாஜியின் மறைந்த உறுப்பினர் கட்டியப்பாவின் (நவரத்தினம் அப்பா) ஞாபகார்த்தமாக அண்மையில் நடைபெற்ற கடற்கரை கரப்பந்தாட்டத்தில் நேதாஜி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. சிறப்பாக விளையாடிய வீரருக்கு விருது வழங்குவதனைப் படத்தில் காணலாம்.

# முல்லை. சென் ஜூட் அணி அரையிறுதிக்கு தெரிவு




யாழ். கழுகுகள் அணியினர் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் முல்லை. சென் ஜூட் அணியினர் நேற்று முன்தினம் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடியது.

இந்த போட்டியில் 1 கோலினை போட்டு வெற்றி பெற்று சென்ஜூட் அணி அரை இறுதிக்கு தகுதி பெற்றது. (க)

# ஆரம்பமாகியது வடக்கின் போர்

# முதல் நாள் ஆட்ட நேரமுடிவில் இரு கல்லூரியும் போராட்டம்








வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டியின் 110 ஆவது போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று கோலாகலமாக ஆரம்பமானது.

முதலாம் நாளில் இரு அணிகளுமே கடுமையான போட்டி வெளிப்படுத்தியதோடு, சென். ஜோன்ஸின் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ள யாழ்.மத்தி சிறியளவிலான முன்னிலையைப் பெற்றுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டுப்பூர்த்தியும் இவ்வாண்டே என்பதன் அடிப்படையில், இப்போட்டி விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கான பிரதம விருந்தினராக, 1996ஆம் ஆண்டு இலங்கைக்கு உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த தலைவரும் தற்போதைய அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க கலந்து கொண்டார்.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.மத்தியின் தலைவர் சி.அலன்ராஜ் தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 75.4 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டை 6 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, இரண்டாவது விக்கெட்டுக்காக 63 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும், அதன் பின்னர் விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

துடுப்பாட்டத்தில் அ.ஜெரோஷன் 51, உப தலைவர் ச.கோமேதகன் 39 ஓட்டங்களைப் பெற்றனர். வேறு எந்த வீரரும் 20 ஓட்டங்களைத் தாண்டியிருக்கவில்லை.

பந்துவீச்சில் வ.ஜதுசன் 4, ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர் ம.நிலோஜன் 3, அணித்தலைவர் அ.கானாமிர்தன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் அணி நேற்றைய நாள் முடிவில் 26 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முதலாவது விக்கெட்டுக்காக 26 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் விக்கெட்டுக்களை இழந்தது.

துடுப்பாட்டத்தில் க.கபில்ராஜ் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களுடன் களத்திலுள்ளார். பந்துவீச்சில் ஹ.தீபன்ராஜ் 2 விக்கெட்டுக்களையும் சி.தசோபன், அணித்தலைவர் சி.அலன்ராஜ் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்றைய போட்டியானது இரசிகர்கள் யாரும் மைதானத்துக்குள் உள்நுழையாத படி கடுமையான கட்டுப்பாட்டுடன் நடத்தப்பட்டது.

இவ்வாறான அளவுக்கு அதிகமான கட்டுப்பாடு ஆனது பாரம்பரியமாக நடைபெற்றுவரும் மேற்படி போட்டியின் உற்சாகத் தன்மையினைக் கட்டுப்படுத்துவதாக ஒரு சில கிரிக்கெட் ரசிகர்கள் நேற்றையதினம் மைதானத்துக்குள் வைத்து விசனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (சு)



## தகவலறியும்...

இதற்கு முன்னதாக நாட்டில் உள்ள ஒன்பது மாகாணங்களின் ஒப்புதல்களும் பெறப்பட்ட பின்னரே குறித்த சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் என்பது நியதி, இந்த நிலையில் ஏனைய மாகாண சபைகள் ஒப்புதல் வழங்கியுள்ள நிலையில்,

வடக்கு மாகாண சபை இதுவரை ஒப்புதல் வழங்கவில்லை. இந்நிலையிலேயே மேற்படி சட்ட மூலத்திற்கு ஆதரவு வழங்குவது தொடர்பான விடயம் நேற்றையதினம் கைதடி பேரவை செயலகத்தில் நடைபெற்ற மாதாந்த அமர்வில் விவாதிக்கப்பட்டது.

இதன் போது குறித்த சட்ட மூலத்தில் முதலமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் வாசிக்கப்பட்டன.

வடமாகாண முதலமைச்சரால் செய்யப்பட்ட திருத்தங்கள் மற்றும் உறுப்பினர்கள் சிலரின் தீர்மானங்களுடன் இந்தச் சட்டமூலத்தை

## ஆட்கடத்தல்...

மாதாந்த அமர்வு, வடமாகாண சபையில் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், தகவல் அறியும் சட்டமூலத்தின் மூலம் எத்தகைய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற தெளிவு வேண்டும்.

அரசின் பாதுகாப்பு அல்லது தேசிய பாதுகாப்பை பாதிக்கும் தகவல்களை பெறமுடியாது என இந்த சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையல் செய்யப்பட்ட கைதுகள், வெள்ளை வான் கடத்தல்கள், இரகசியமாக

நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அனுப்பவுள்ளோம்.

இதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்கின்றதா? என அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்டார். இதையடுத்து, எவரும் ஆட்சேபனை தெரிவிக்காத நிலையில், சட்டமூலததை ஏற்றுக்கொள்வதாக அவைத்தலைவர் அறிவித்தார்.

## உறுப்பினர்...

அது பிழை இது சரி என்ற வகையிலும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இதன் போது, குறுக்கிட்ட வடக்கு மாகாண முதலமைச்சர், குறித்த சட்ட மூலத்தை கொண்டுவந்தது. எமது கட்சியை சேர்ந்த ஒருவர் ஆவார், ஆகையால் அதனை நாம் இங்கே விமர்சிப்பது அழகாக இருககாது. எனவே இது தொடர்பில் உரிய இடத்தில் கலந்துரையாடி முடிவெடுக்க வேண்டும் என

கொண்டு செல்லுதல் என்பவை தொடர்பில் கேட்டால் தாங்கள் செய்யவில்லையென்பார்கள். இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்று கேட்டால் அது தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது என்பர்.

கொண்டு செல்லப்பட்டவர்களை மீட்க ஆட்கொணர்வு மனு என்ற விடயம் இருந்தாலும், அதனை கொண்டு எதுவுமே செய்ய முடியாத நிலைதான் உள்ளது. மேலும் கொண்டு செல்லப்பட்டவர்கள் உயிருடன் இல்லையென அரசாங்கம் சாதாரணமாக சொல்கின்றது.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களை யார் உரிமை கோரலாம் என்பதும் தெளிவுபடுத்தப்படவேண்டும் என்றார் சர்வேஸ்வரன். (செ-4)

எனினும் மேற்படி சட்ட மூலத்தில் வடக்கு மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் அதற்கு வடக்கு மாகாண சபை ஒப்புதல் வழங்க கூடாது என பெரும்பாலான உறுப்பினர்கள் கூற, அதனையும் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் ஏற்றுக்கொண்டார். (செ-4)

கூறினார்.

மேலும் நேற்றைய அமர்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் கேசவன் சயந்தன் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு போககுவரத்து நியதி சட்டம் தொடர்பில் விபரிக்கும் போது அதனை முதலமைச்சரும் ஏற்றுக்கொண்டதனை அவதானிக்க முடிந்தது.

முதலமைச்சரோடு முட்டி மோதிக்கொள்ளும் உறுப்பினர்கள் நேற்றையதினம் முதலமைச்சருடன் அடிக்கடி சிநேகபூர்வமாக உரையாடியதனையும் காண முடிந்தது.

வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே சிவஞானமும் சபையினை சிறந்த முறையில் தனது கட்டுப்பாட்டிற்குள் எந்த குழப்பமும் இல்லாமல் நடத்தி முடித்திருந்தார். (செ-4)

## யோஷிதவுக்...

நேற்று வந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, யோஷித ராஜபக்ஷவைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தர விடப்பட்டதால் இறுக்கமான நிலையில் காணப்பட்டார்.

இதற்கிடையே முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில ராஜபக்ஷ வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ள கொழும்பு உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ,

## போர்வெற்றி...

உயிருடன் இருந்தார். அதனை அறிந்தும்கூட அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ போர் முடிவுற்றதாக அறிவித்துவிட்டார். ஆனால் அன்றையதினம் நடந்ததை நானும் அறிவேன்.

பிரபாகரன் போரில் உயிரிழப்பதற்கு முன்னரே அன்றைய தினம்

## வடக்கு மாகாண...

நிகழ்வு 14ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண முதலமைச்சர், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு வைபவ ரீதியாக கண்காட்சியினை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (செ)

திவிநெகும திட்டத்தின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க மற்றும் திவிநெகும அபிவிருத்தி பணிப்பாளர் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிராக நிதி மோசடி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பசில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது.

எனினும் சந்தேக நபர்களின் கடவுச்சீட்டுக்களை தடை செய்யுமாறு குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு நீதவான் பத்மினி ரணவக்க உத்தரவிட்டுள்ளார். (செ-12)

போர் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது. போரை வெற்றி கொண்ட பெருமையை தாம் அடைவதற்காக திட்ட மிட்டபடி என்னை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

நான் நாடு திரும்பியவுடன் என்னை அலரிமாளிகைக்கு அழைத்து முப்படைகளின் தளபதி என்ற பதவியிலிருந்து விலகு மாறும அழுத்தம் பிரயோகித்தனர்என்றார்.

மேலும் போர்க் குற்றச் செயல் விசாரணைகளுக்கு சர்வதேச கணகாணிபபாளர்கள் ஆலோசகர்கள் ஆகியோரின பங்களிப்பு அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## பிரபாகரன்...

போகக்கூடாது எனவே பிரபாகரனுக்கு போரின் இறுதியில் என்ன நடந்தது என அனைத்துத் தகவல்களையும் அரசாங்கம் வெளியிட வேண்டும் என்றார் சிவாஜி. (செ-4)

## கடற்படை...

காணி அளவீடு தொடார்பாக அறிந்து கொண்ட தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் கடற்படை முகாமிற்கு அருகில் திரண்டு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஏற்கெனவே கடற்கரைப் பகுதியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் வரையான பகுதியில் தொழிலில் ஈடுபடுவதற்கு கடற்படை தடை விதித்துள்ளனர். இதனால் நாம் சுதந்திரமாக தொழில் செய்யமுடியாதுள்ளது.

எனவே குறித்த காணிகளின் உரிமை யாளர்கள் அதனை எங்களிடம் வழங்கட்டும். காணிகளுககு உரிய பெறுமதியை கொடுத்து கடற்தொழில் சங்கம் சார்பாக வாங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் எனவும் அங்கு திரண்ட மீனவர்கள் தெரிவித்தனர். (செ-12)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன்

அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும்

தமிழ்த் தேசிய வீரர் தாஸ் ஞாபகார்த்த

உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி



மின்னொளியில் அரையிறுதியும் மறுநாள் இறுதிப்போட்டியும்

பரிசளிப்பு விழாவும்



இடம்: நெற்கொழு பொது விளையாட்டரங்கு

(நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானம், வல்வெட்டித்துறை)

காலம்: 10.03.2016 வியாழக்கிழமை இரவு 07.00 மணி (அரையிறுதி)

11.03.2016 வெள்ளிக்கிழமை இரவு 07.00 மணி (இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்)

அனுசரணை

சிவன் அறக்கட்டளை

(C-3952)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)



## வேலையாள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கணணி அறிவுடைய பெண் வேலையாள் தேவை.

சுஜானாஸ்

இல.30, 1ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

0775295772

இல.24/A, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

(3839)



## கிராம அலுவலர்களுக்கான போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டல் புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம்

திகதி:-12.03.2016

நேரம்:-01.00 PM

குறிப்பு:-சமுர்த்தி/SLAS/SLEAS பரீட்சைக் குரிய வழிகாட்டல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

0212228148,
0215689477

புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-3950)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை நடேசரத்தினம் (செல்வம்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நடேசரத்தினம் (10.03.2016) வியாழக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், மாகியம்பிட்டி அளவெட்டியைச் சேர்ந்த வைத்திலிங்கம், மனோன்மணி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இந்திரகுமாரியின் அன்புக் கணவரும், பற்குணராசா (பிரான்ஸ்), துர்க்கா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மருதபிள்ளை ஆசிரியரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற இரத்தினவேல், இராசவேல் மற்றும் பாக்கியலட்சுமி, விஜயவேல், கனகலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரார்த்தனா, சிந்தனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (11.03.2016) வெள்ளிக் கிழமை மு.ப 9.30 மணியளவில் கலட்டி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று வழுக்கையாறு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டி வீதி, வட்டு தென்மேற்கு.
0772718844

தகவல்:-க.விஜயவேல்
சோமண்ணை (சகோதரர்)

(3839)

### பல்கலை...

ஈடுபடவுள்ளனர்.

யாழ்.பல்கலைக் கழக வளாகத்தில் இன்று காலை பத்து மணியளவில் ஆரம்பமாகும் இப்போராட்டம் மாலை ஐந்து மணிவரை முன்னெடுக்கப்படவுள்ளது. இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழ் அரசியல் கைதிகளது போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் என்பன குரல்கொடுத்து வரும் நிலையில், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினராகிய நாமும் எமது நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தியும் அவர்களது விடுதலையை வலியுறுத்தியும்,

யாழ்.பல்கலைக் கழக சமூகத்தின் ஆதரவுடன் இன்று பல்கலைக்கழக முனறலில் காலை பத்து மணியளவில் இருந்து மாலை ஐந்து மணியளவு வரை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளோம். இந்த போராட்டத்திற்கு அனைத்து தரப்பினையும் ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4,9)


## வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி நகர மத்தியில் A9 வீதியில் இருந்து 50M தூரத்தில் 5 அறைகள் கொண்ட அனைத்து வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:-

0775384747, 0777349253

(சி-3949)



சொன்னபடி செய்தது சிகரம்!

யாழில் 6 மாத கற்கைநெறியை பூர்த்திசெய்த 5 பேர் வெளிநாட்டு விசா அனுமதி பெற்றனர்

பகுதிநேர/ முழுநேர வேலைவாய்ப்பு & வருமானத்துடன் கூடிய

Dip in Hotel Management

Leading to

University of Sunderland - UK

NO IELTS, Bank Balance, Interview



2ம் அணியில் இணைந்த ஒரு தொகுதி மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி கடிதம் பெற்றனர்

நீங்களும் இணைந்துகொள்ள அழையுங்கள் 077 36 16 798

புதிய பிரிவு ஆரம்பம் மார்ச் 14

வெளிநாடு செல்ல விரும்பாதவர்களுக்கு உள்நாட்டு வேலைவாய்ப்பு ஏற்பாடு

SIKARAM HOTEL SCHOOL

மேலதிக விபரங்களுக்கு:

www.sikaram.lk

275-2/1 மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)



சரவணா ரெக்ஸ்

(வேறு கிளைகள் இல்லை)

நல்லூர்

Saravana Tex



- திருமண பட்டு சாறிகள்
- கொட்டன் சாறிகள்
- பஞ்சாபிகள்
- ரெடிமேற் சல்வார்கள்

"தரம் மலிவு இரண்டும் ஒரே இடத்தில்"

சரவணா ரெக்ஸ்
இல.526, 529 பருத்தித்துறை வீதி,
நல்லூர், (சிவன் கோயில் அருகில்)
(வேறு கிளைகள் இல்லை)

(C-3951)



13.03.2016 ஞாயிறு யா/ இராமநாதன் வீதி ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற உள்ள மணிவிழாவை ஒட்டிய

மணிவிழா வாழ்த்து



உயர்திரு.
E.S.P. நாகரத்தினம்
அவர்கள்

காரையம்பதியின் வர்த்தகத் திருநாமம்
பேரம்பலம் தம்பதியர் வாரிசு தானென
பேர் போற்றும் வணிகமுயர் நாகரத்தினம்
அகவை அறுபதில் இன்று போல் என்றும் வாழ்க

மனித நேயமுள்ள கல்விக் காருண்யனாம்
பரந்த மனம் பெற்ற மணிவிழா நாயகன்
மனையாள் தம் மக்களுடன் - நிலவொடு
ஒளியாய் நிறைந்து வாழிய வாழியவே!

(3831)

ப. திருநீலகண்டன் குடும்பம்

சண் மோட்டோர்ஸ்
இல. 779, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.



## பணிப்பெண் தேவை

2 பேர் கொண்ட குடும்பத்திற்கு குடும்பத்தில் ஒருவராக நினைத்து நின்று சகல வீட்டுப் பணிகளையும் செய்வதற்கு 36 வயதிற்குட்பட்ட ஒரு பணிப்பெண் உடனடியாக தேவை.

தகுந்த வேதனம் வழங்கப்படும்.

021 226 0277

(3846)



2மணித்தியாலத்தில் கணினி திருத்தம்

உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள் 0779086737

கணினி திருத்தக் கட்டணம் 500/- Computer Repair

லப்டொப் டெஸ்க்டொப் கணினிகள் திருத்தம்

கணினிகள் விற்றல் பாவித்தகணினிகள் வாங்குதல்

GUNA BEST PC

50/12,Hospital Road,
Vairavar Kovil Lane, Jaffna.

கணினி பயன்பாட்டின் உச்ச அனுகூலங்களை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக நிபந்தனையுடனான சேவைகளை வழங்குகிறோம்.

(C-3842)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.